# புயலை எதிர்க்கும் பூக்கள்



ஆதிலட்சுமி இராசையா

# புயலை எதிர்க்கும் பூக்கள்

(சிறுகதைத் தொகுப்பு)

ஆதிலட்சுமி இராசையா

புயலை எதிர்க்கும் பூக்கள்
வெளியீடு 1
முதற்பதிப்பு: சித்திரை 1990
பிரதிகள்: 1000
விலை ரூபா ~~25/-~~ 20/-
அச்சுப் பதிப்பு: சுடரொளி அச்சகம்
பதிப்புரிமை: ஆசிரியருக்கு
அட்டைப்படம்: ஓவியர் லங்கா

---

**PUYALAI ETIRKKUM POOKKAL**

*First Edition - April 1990*
*Copies - 1000*
*Copyright - The Editor*
*Cover Artist - Lanka*

*Printed by - Chuderolli Press*

உ
பரராசசேகரப் பிள்ளையார் துணை

# காசினியில் ஆதிலட்சுமி வாழி வாழி

நந்தமிழர் வாழ்வையெல்லாம் நயம் பொலிய
நளினமொடு சிறுகதையாய் வடித்துத் தந்தாள்
அந்தமிலா அழகுநிறை தமிழர் பண்பும்
அடிநாத மாகவரும் தத்து வங்கள்
சுந்தரமாய் எழுந்தகதா பாத்தி ரங்கள்
சொல்லோவியங்களெனச் சொரிந்து வைத்தாள்
பைந்தமிழின் இணுவையூர் ஆதி லட்சுமி
பகர்ந்தகதைத் தொகுதிகண்டு மகிழ்தே னின்றே.

எதிர்நீச்சல் வாழ்வினிலே புரிந்த பெண்மை
எழிலான பூக்களெல்லாம் புயலெ திர்த்தே
மதியோடு வீரமிகு தீரம் காட்டி
மங்கையரின் நாற்குணங்கள் காத்துநின்று
விதியோடு விளையாடும் புல்லர் தம்மை
விண்ணுலகு அனுப்பிவைக்கும் வீரப் பெண்மை
புதிரல்ல அவை பூக்கள் புயலெ திர்க்கும்
பூவையரின் கதையதனைப் புனைந்து தந்தாள்.

பெண்மையின் பெருவீரம் காட்டி நின்றாள்
புகலரிய மென்மையையும் தீட்டி வைத்தாள்
உண்மையின் உறைவிடமாம் பெண் இதயம்
உலகியல் புயலதனில் சிக்கும்போது
திண்மையாய் அவ்விதயப் பூக்க ளெல்லாம்
தினவுகொண் டெதிர்த்தொடும் புயலைத் தாக்கும்
கண்மணிக் கதைபுனைந்து எமக்குத் தந்தாள்
காசினியில் ஆதிலட்சுமி வாழி வாழி.

சுபம்.

''கவிமாமணி'', ''ஸாஹித்தியஸாகரம்''
''முத்தமிழ்வாரிதி''
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்

யாழ்ப்பாணம்.
5-4-90

# மலரட்டும் ஆயிரம் மலர்கள்.....

ஈழத்து இலக்கிய உலகில் பெண் எழுத்தாளர்கள் பற்றிக் குறிப்பிடப்படும் போதெல்லாம் அவர்களது பங்களிப்புப் போதியளவு இல்லை என்ற கருத்துப் பலராலும் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. சமீப காலமாக பெண் எழுத்தாளர்கள் சிலரது ஆக்கங்கள் நூலுருவில் வெளிவர ஆரம்பித்துள்ளமை பாராட்டப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். தமிழ்ப் புத்தாண்டின் ஆரம்பத்தில் மேலுமோர் பெண் எழுத்தாளரான செல்வி ஆதிலட்சுமி இராசையாவின் ''புயலை எதிர்க்கும் பூக்கள்'' சிறுகதைத் தொகுப்பு இலக்கிய உலகுக்கு அறிமுகமாகின்றது மகிழ்ச்சி தரும் செய்தியே.

சமுதாயம், நாகரீகம் வளர்ந்துள்ள நிலையில் மனித மேம்பாட்டின் பெருமைகளை மட்டுமன்றி, அவற்றுள் புரையோடிருக்கும் போலிகளையும், அவலங்களையும் இனங்கண்டு ஆய்ந்தறியும் தன்மையும் மனித நேயத்தின் பாற்கொண்ட பற்றுதலின் காரணமாய் எழும் மனிதாபிமான உணர்வும், அதற்குப் பரிகாரம் காணமுயலும் தவிப்பும், ஆர்வமும் எழுதுபவர்களிடம் காணப்படும் சிறப்பு அம்சம். செல்வி ஆதிலட்சுமியின் கதைகளைப் படித்தபோது இத்தகையதோர் கருத்தே என்மனதிற் தோன்றிற்று

பொதுவாகப் பெண்மனதுக்குரிய இரக்க சுபாவம், தியாகசிந்தை இவரது கதைகளினூடே இழையோடுகின்றதை அவதானிக்க முடிந்தாலும்- ''இருளில் ஓர் நிலவு'', ''இலட்சியத்துணை'' போன்ற கதைகள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

வாழ்க்கைப் பிரச்சினைகளையும், சமூகக் கொடுமைகளையும், பணபலத்தின் வக்கிரங்களையும் மட்டும் தொட்டுக் காட்டுவதுடன் நிற்காது அவற்றின் தாக்கங்களினால் அவதியுற்றோரின் அவலங்களை உணர்ந்து சிந்திக்கும் வகையில் தன்

கருத்துக்களை பாத்திரவார்ப்புக்களின் மூலம் வெளிப்படுத்தி மற்றவர்களையும் சிந்திக்கவைக்கும் நேர்த்தியை ''நாணலும் நிமிரும்'', ''தண்டிக்கப்பட்ட மனச்சாட்சி'', ''பூஜிக்கமுடியாத பொய்முகங்கள்'' கதைகளிற் பார்க்க முடிகின்றது.

ஒருதாய்வயிற்றுப் பிள்ளைகளானாலும் அவர்களிடம் ஒரே மாதிரியான குணவியல்புகளை எதிர்பார்ப்பதற்கில்லை என்பதைத் ''தோற்றுப்போன மனிதாபிமானம்'' கதையிலும், படிக்காத ஏழை முரடனிடம் மனிதப்பண்பும், மனிதாபிமானமும் இல்லாமல் போய்விடுவதில்லை என்பதை. ''ஆறடி நிலத்''திலும் தெளிவுடன் விளக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

இளமையில் வறுமை ஏற்படுத்தும் வடுக்களை தாங்காது ஏங்கும் எண்ணங்களுடன் அலையவைக்கும் பசியின் கொடுமையையும் அதனை உணராது அறிந்தோ அறியாமலோ உண்டு களித்திருப்போர் நடந்து கொள்ளும் மனிதாபிமான மற்ற அநாகரிக செயற்பாடுகளையும் ''அவர்களுக்குப் பசி'' கதையில் துணிவுடன் கூறும் கதாசிரியையின் நோக்கம் போற்றப்படவேண்டியதே.

இது இவரது முதன் முயற்சியே - குணம் நாடவேண்டியதேயன்றி குறை தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதே எனது கருத்தானாலும்... சமூக சீர்திருத்த நோக்கும் மனிதாபிமான உணர்வும், மக்கள் சமூகத்தின்பாற்கொண்ட மனித நேயமும் நிறைந்துள்ள இவரது படைப்புக்களில் ''கலைநயம்'' குறைந்து காணப்படுவது ஒரு குறையே. வளரும் எழுத்தாளர். எதிர்காலத்தில் நல்ல தரமான படைப்புகளை படைக்க வேண்டியவர் (படைக்க வேண்டும்) என்ற எதிர்பாப்புடன் இதனைச் சுட்டிக்காட்ட வேண்டியது எனது தவிர்க்கமுடியாத கடமை என்றே நினைக்கின்றேன்.

ஈற்றில் இவரது துணிவைப் பாராட்டாதிருக்க முடியவில்லை, புத்தக வெளியீட்டுத்துறையில் அனுபவப்பட்டவர்களே அவதியுறும் காலகட்டத்தில் பேனாமுனையுடன் தன்

சிந்தனைகளை நிறுத்தி விடாது நூலுருவில் தன் படைப்புக் களை வெளிக்கொண்டுவரும் ஆதிலட்சுமியின் தன் துணி வும், நம்பிக்கையும் பலராலும் பாராட்டபடவேண்டிய தொன்றாகும். வாசக அன்பர்கள், இலக்கியப் பிரியர்கள் அனைவரும் பெருமனதோடு சகோதரியின் முதல் நூலான ''புயலை எதிர்க்கும் பூக்க''ளை வரவேற்று... ஆதரிப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன், எனது நல்வாழ்த்துக்களையும், மனப் பூர்வமான பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின் றேன்.

தொடரட்டும் இவரது எழுத்துப்பணி.

மலரட்டும் ஆயிரம் மலர்கள்.

**கே. எஸ். ஆனந்தன்**
*13-04-1990*

''அன்பகம்''
இணுவில் கிழக்கு,
இணுவில்.

★

# நியாயமான கோபங்கள்!

இலக்கியமாகப் படைக்கப்படும் சிறுகதைகள் யாவும் வாழ்க்கையின் அர்த்தத்தை விளக்க வேண்டும்; எமது சமுதாயத்தின் அவலங்களையும், மூடத்தனங்களையும் வெளிப்படுத்த வேண்டும்.

ஆதிலட்சுமி இராசையா என்ற இளம் படைப்பாளி எம் மத்தியில் உள்ள பிரச்சினைகளையும், அவற்றுக்கெதிராக நடைபெற்றுவரும் போராட்ட உணர்வுகளையும் தன் பேனை மூலம் வெளிப்படுத்துவதில் வெற்றி பெற்றுள்ளார் என்று குறிப்பிடுவதில் எந்தத் தப்பும் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

படைப்பாளிகள் என்கிற ஸ்தானத்தில் அமர்ந்திருக்கிற சிலர், தனிமனித உணர்வுகளைக்கூட பொது மனித உணர்வாக்கிவிடுகின்றனர். இது நிகழ்காலப் படைப்பாளிகளிடம் நிறையக் காணப்படுகிறது.

மனிதன் ஒருவனின் எந்த வகையான உணர்வுகளும் ''தனி மனித உணர்வு என்ற வட்டத்துக்குள் அடக்கி வைக்க முடியாதவையே. மனிதன் சிரிப்பதற்கும், அழுவதற்கும் அவன் மட்டும் காரணம் என்று சொல்வது குறுகிய பார்வையினையே வெளிப்படுத்தும்.

ஈழத்து இலக்கியத் துறையில், மற்றைய இலக்கிய வடிவங்களைவிட, சிறுகதைக்கு வாசகர் மத்தியில் அதிக வரவேற்பு உண்டு. இதற்குக் காரணம், தொன்று தொட்டு எம் மத்தியில் தொடர்ந்து வரும் ''கதை கேட்கும் பண்பு'' என்று சொல்லலாம். நாவலைவிட குறுகிய நேரத்தில் பரந்த விஷயங்களை சுருக்கமாக படிக்கிற வாய்ப்பு சிறுகதை இலக்கியத்தில் உண்டு.

தமிழில், சிறுகதைக்கு என்று வரையறுக்கப்பட்ட இலக்கணம் புதிதே தவிர, சிறுகதை என்கிற ஆக்கம் புதிதென்று எந்த ஆய்வாளர்களும் குறிப்பிடவில்லை.

ஆதிலட்சுமி படைத்துள்ள இச் சிறுகதைகளில் எமது சமுதாயத்தில் விரவிக் கிடக்கும் சகதிகளைக் கண்டுகொள்ள முடிகிறது.

இத்தொகுப்பில், பூஜிக்க முடியாத பொய் முகங்கள்'' என்கிற கதையும், ''அவர்களுக்குப் பசி'' என்கிற கதையும் எம்மை அப்பாத்திரங்களின்மீது ''பாசம்'' வைக்கத் தூண்டுகின்றன.

இந்த எழுத்தாளர் எதிர்கால சமுதாயத்தின்மீது கொண்ட அக்கறை காரணமாகவே நிகழ்கால சமுதாயத்தின் கோபம் கொண்டுள்ளார் என்று சொல்லத் தோன்றுகிறது அவரின் கோபம் நியாயமானதுதானே...

இவர் இன்னும் வளர்ச்சி பெற்று, அனுபவ முதிர்ச்சியடைந்து, எதிர் காலத்தில் சிறந்த இலக்கியவாதியாக மிளிருவார் என்ற நம்பிக்கை மனசுக்குள் சுரக்கிறது.

மருக்காரம்பளை வவுனியா

**வவுனியா திலீபன்**
*10-04-1990*

☆

# பூவாய் மலர்ந்து..............

# புயலை எதிர்த்து.....  ..........

எழுத வேண்டும் என்கின்ற ஓர் ஈர்ப்பின் காரணமாய் இத்துறைக்குள் இறங்கிக் கொண்டவள் நான். ''உரிமையில்லாத உறவுகள்'' (20-05-1982 தினகரன்) சிறுகதை மூலம் சிறகுகள் பூட்டிக் கொண்டேன்.

எனது தேசத்தின் எல்லாத் தரப்பு மக்கள் மீதும் என் பார்வை படிந்தது. காலங் காலமாய் அவலங்களுக்கும், அச்சங்களுக்கும், ஆக்கிரமிப்புக்களுக்குமிடையே வாழ்ந்த-வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் மன வேதனைகள் என்னைச் சிந்திக்க வைத்தன.

புவி வாழ்வில் பூப்போன்ற உள்ளங்கள் ஏராளம். ஏனோ அவை எல்லோராலும் புரிந்து கொள்ளப்படுவதில்லை... இந்தப் பூவிதயங்களெல்லாம் பிரச்சனைப் புயலின் சித்திரவதைகளுக்குள் சிக்கித் தவிப்பதைக் கண்டு... என் சின்ன இதயமும் கண்ணீர் சிந்திற்று.. கண்ணீர் காயங்களைக் கழுவிவிடப் போவதில்லை என்பது எனக்குப் புரிந்தது. நான் புரிந்து கொண்டதை - தெரிந்து கொண்டதை எல்லோருக்கும் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு எனக்குள் பூத்தது. என் பேனாவும் தன் பணிக்காய்... தாள்மீது... தன் விரல் பதித்தது...

என்னுடைய சிறுகதைகளில் உலவுகின்ற பாத்திரங்களெல்லாம் நம் வாழ்வுப் பாதையில் நாம் அடிக்கடி சந்திப்பவை. அவற்றினுடைய துன்பங்களைக் கண்டு நான் தூங்காமல் துடித்த இரவுகள் ஏராளம்.. அந்தத் துடிப்பு அவர்களுக்கு ஒரு விடிவினைக் காட்ட வேண்டும் என்கின்ற வேகத்தை என்னுள் விதைத்தது. என் எழுத்தின் வேகம் எமது சமூகத்தில் மண்டிக்கிடக்கும் எத்தனையோ சகதிகளைத்

துடைத்தெறிய வேண்டும் - துடைத்தெறியும் என்கிற நம்பிக்கை எனக்கு நிறையவே உண்டு.

இவற்றில் பெரும்பான்மையான பாத்திரங்கள் தனிமனித சுதந்திரத்துக்காக - தன்னைச் சூழவுள்ள பிணைப்புக்களுடன் போராடி, நியாயம் கேட்பதைக் காணலாம். தனிமனித சுதந்திரத்தின் மூலம் தூங்கிக் கிடக்கும் சமூகம் துயிலெழும் சமூகம் துயில் கலைந்தால்தான் நாடு விடியும்... எனவேதான் இக்கதாபாத்திரங்களும் தன்னைச் சுற்றியுள்ள சலசலப்புக்களைக் கண்டு ஆட்டங்கண்டுவிடாதவையாக... தடுமாற்றமில்லாத தனிமனித முடிவுகளை வகுத்துக் கொள்கின்றன.

என் படைப்புக்கள் பல ''ஷெல்''லுக்கு இரையாகிப் போன சோகம்... இருந்தும் அந்த இழப்பு என்னை இழந்து போகச் செய்யவில்லை... இன்னும்... இன்னும்.. வேகங் கொண்டு எழுதவைத்தது. பூக்களெல்லாம் ஏன் புயலை எதிர்க்கின்றன என்கிற கேள்விக்கு இதுவுமோர் விடையாகும்.

அப்வப்போது ஆலோசனைகளையும் ஆக்கபூர்வமான ஊக்குவிப்புக்களையும் வழங்கி உற்சாகப்படுத்திய சிரித்திரன் ஆசிரியர் சுந்தர் ஐயா அவர்களும், இப்புத்தக வெளியீட்டுக்காக தன்னுலான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கிய செல்வி என். தம்பியையா அவர்களும் என்றும் என்னுல் மறக்கமுடியாதவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாய்... ''ஏட்டைப் பெண்கள் தொடுவதிழுக்''கென்று எண்ணிவாழும் எம்மவர்கள் மத்தியில்.. எனக்கு ''சகல'' சுதந்திரங்களும் வழங்கி நண்பனுய்... மந்திரியாய்... நல்லாசிரியனுய்... பண்பிலே தெய்வமாய்... பார்வையிலே சேவகனுய்... என் வளர்ச்சிக்கு வழிகாட்டியாய் நிற்கும் எங்கள் அன்புத் தந்தையும் என்றும் என் நன்றிக்குரியவராவார்.

இப் புத்தக வெளியீடு எனக்குப் பல புதிய அனுபவங்களைப் பெற்றுத் தந்திருக்கிறது. போலி முகங்களின் புன்னகைகளை இனங்காட்டியிருக்கிறது. கசப்பான உண்மைகளைக் கற்றுத்தந்திருக்கிறது. இறுதியாய்... என் பாசத்திற்குரிய வாசகர்களே! இப் புத்தகத்துள் பூத்துக்குலுங்கும் கதைக் கொத்துக்களைப் பற்றிய உங்கள் எண்ணங்களை-விமர்சனக் கருத்துக்களை எனக்குத் தெரிவிக்குமாறு... கேட்டுக்கொள்கின்றேன். தெரிந்து கொண்டால் என் வளர்ச்சிக்கு அவை வழிசமைக்கும்.

நன்றி.

உங்கள்

**ஆதிலட்சுமி இராசையா**

கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

★

# ஈழத்துப் படைப்பாளிகளின் வரிசையில் இவரும் .......................

தமிழ் ஈழத்துக் கலை வடிவங்கள் பல்கிப் பெருக வேண்டும். கடந்த கால அனுபவங்கள் எம்மை வலுவாக்கி, நிகழ் காலத்தில் நாம் அடைகின்ற பயன்களை எதிர்கால எமது சந்ததியினர் பிரயோசனப்படுத்தி மேலும் மேலும் வளம் பெறக் கலைச் செல்வங்களைக் குவிக்க வேண்டும் என விரும்புகின்றோம்.

இந்த வரிசையில் ஆதிலட்சுமி இராசையா அவர்களின் படையல் சேர்ந்து கொள்ளும் ஆற்றல் பெற்றது என்பது எமது திண்மையான எண்ணம். ஏனெனில் அவர் தனது மண்ணில் இருந்து, தனது மண்ணுக்காகச் சிந்தித்து, தனது மண்பெற்ற அனுபவங்களைத் தனது அனுபவங்களாகத் தருகின்றார்.

வேற்றுநாட்டுக் கால்படிந்த வடுக்களை சுட்டிக்காட்டிச் சுதேச மகிமையை நேசிக்கும் அந்த உள்ளத்தின் ''புயலை எதிர்க்கும் பூக்கள்'' எமது பதிப்பகத்திலிருந்து புறப்படும்போது, நாமும் எமது அன்னை மண்ணிற்குச் சிறு துளி தொண்டு செய்துள்ளோம் எனும் பெருமிதத்தை எமக்குஅனிக்கிறது.

20 04-1990

பதிப்பாளர்

# தமிழன்னைக்கு!

சொல்லொணாத் துன்பங்கள்
சூழ்ந்தபோதும்

''செல்'' வந்து நின்னுடலைச்
சிதைத்தபோதும்

வஞ்சகர்கள் தம்செயலால்
வருத்தியபோதும்


தஞ்சமின்றித் தமிழ்மக்கள்
தவித்தபோதும்

தன்மானம் ஒன்றேதான்
நினக்குயிர் என்று

தரணியெல்லாம் தமிழின்புகழ்
கமழச் செய்யும்

தமிழ் அன்னாய் உன்னுடைய பாதங்களில்
தந்துவிட்டேன் இந்நூலைச்

சமர்ப்பணமாய்!



# இவர்களுக்கு என் நன்றிகள்

சிரித்திரன் சுந்தர் அவர்கள்

திரு. வீரமணி ஐயர் அவர்கள்

ஓவியர் லங்கா அவர்கள்

திரு. கே. எஸ். ஆனந்தன் அவர்கள்

வவுனியா திலீபன் அவர்கள்

இணுவில் முப்பெரும் இலக்கிய மன்றத் தலைவர்
திரு. க. தணிகாசலம் அவர்கள்

அச்சிட்டு உதவியவர்கள்

சிறுகதைகளை அவ்வப்போது பிரசுரித்துதவிய
பத்திரிகைகள், சஞ்சிகைகளின் ஆசிரியர்கள்

இதில் இடம்பெற்ற புதுமொழிகளை உதிர்த்த
பெரியவர்கள்

இச்சிறுகதைகளை நூலுருவில் ஆக்க ஊக்கமளித்தவர்கள்.



# உள்ளே.....


1. தோற்றுப்போன மனிதாபிமானம்
(10-6-89 சஞ்சீவி)

2. மரணம் ஒரு முடிவல்ல
(3-1-87 அமிர்தகங்கை)

3. ஆறடி நிலம்
(18-3-84 தினகரன்)

4. இருளில் ஒரு நிலவு
(6-4-86 சிந்தாமணி)

5. நாணலும் நிமிரும்
(சித்திரை / வைகாசி இதழ் அமிர்தகங்கை)

6. இலட்சியத்துணை
(11-8-85 சிந்தாமணி)

7. ஒரு கடமை கைலஞ்சம் கேட்கிறது
(3-11-85 ஈழமுரசு)

8. தண்டிக்கப்பட்ட மனச்சாட்சி
(6-9-87 ஈழநாடு)

9. பூஜிக்க முடியாத பொய்முகங்கள்
(2-8-87 ஈழநாடு)

10. அவர்களுக்குப் பசி
(4-8-85 ஈழமுரசு)

11. தீயில் விழுந்த தளிர்

12. குடிசைக்குள் சில கோபுரங்கள்

13. கருகும் மொட்டுக்கள்

# தோற்றுப்போன மனிதாபிமானம்

கடந்த சில வாரங்களாக மனதை ஆக்கிரமித்து ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த உணர்வுப் பெருக்கிலிருந்து மீளப்பெற்றதில் நெஞ்சக் கூட்டுக்குள் இதயம் பஞ்சாகி மிதப்பது போன்ற பிரேமையில் பாடசாலை வளவுக்குள் நுழைந்தாள் கௌசல்யா ரீச்சர்.

'பிறேயர்' முடிந்து வெள்ளைச் சீருடை மாணவிகள் வரிசையாய் வகுப்பறைகளுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். கையிலிருந்த கறுப்புக் குடையை இரண்டாக மடக்கிக் கொண்டு, படியேறினாள்.

'குட்மோர்னிங் ரீச்சர்... இந்தாங்கோ பேனை' - ஒரு கணம் நெஞ்சுக்குள் குபீரென்று இரத்தம் பீறிட 'குட்மோர்னிங்' என்றவள் அன்ரன் மாஸ்ரர் நீட்டிய பேனையை வாங்கிக் கொண்டாள்.

அவளிடம் சொந்தமாக ஒரு பேனை இருக்கிறது. அவன் தந்தபோது மறுத்திருக்கலாம். ஆனாலும் அடுத்தவரின் மனசை அவசியமின்றி நோகடிக்கக் கூடாதென்ற நேச உணர்வினால் அதை வாங்கிக் கொண்டாள்.

நடுத்தலையில் வழுக்கை... நரைவிழுந்த தலைமயிருடன்... கண்ணாடிக்கூடாக ஏதோ படித்துக் கொண்டிருந்த கல்லூரி அதிபர் சதாசிவத்தின் முன்னால் 'அற்றென்டன்ஸ் றிஜிஸ்ரர்' விரித்தபடி கிடந்தது. சிறுவயதில் தகப்பனை இழந்துவிட்டதாலோ என்னவோ ஐம்பது அறுபது வயது மதிக்கத்தக்க ஆண்களைக் காணும்போதெல்லாம் மனதுக்குள் இனம் புரியாதவொரு ஏக்கம் எட்டிப் பார்க்கும் அவளுக்கு.

'குட்மோர்னிங் சேர்' என்றபடி கையெழுத்தும் போட்டாள் கௌசல்யா. அமைதியே உருவான அதிபர் புன்னகையுடன் வணக்கம் சொன்னார். அவளுக்கு மட்டுமல்ல... இந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள்... மாணவர்கள் எல்லோருக்குமே அவரை மிகவும் பிடிக்கும். பேதங்கள் ஏதுமின்றிப் பழகக்கூடியவர்.

அவர் வெளியில் வந்தபோது அன்ரன் மாஸ்ரர் பேனைக்காகக் காத்திருக்கவில்லை. அந்தப் பேனையை மூடித் தன் 'ஹான்ட்-பாக்'கில் வைத்துக் கொண்டாள். ரைம்ரேபிளை எடுத்துப் பார்த்தபோது முதலாவது பீரியட் பிறியாக இருந்தது.

ஆசிரியர்களுக்கான ஓய்வறைக்குள் நுழைந்தபோது, கமலா ரீச்சர் மட்டும் 'ஹான்ட்பாக்'கில் எதையோ தேடிக் கொண்டிருந்தாள். இவளைக் கண்டதும்,

'நீங்கள் குடுத்து வெச்சனீங்கள் கௌசல்யா... கல்யாணம் கட்டினாலே பொம்பிளையளின்ரை அற்பசொற்ப சுதந்திரமும் பறிபோயிடும்... பாருங்கோ மிஸ்... விடிய வெள்ளண எழும்பி படாதபாடெல்லாம்பட்டு... இங்க வந்தா... இதுகள் ஒரு சொல்வழியும் கேளாதுகள் மனுசருக்கு பெரிய தலையிடியாப் போச்சுது கொஞ்சம் 'றெஸ்ற்' எடுப்பம் என்றுபோட்டு பத்துப் பதினைஞ்சு கேள்விகள் எடுத்துவைச்சன்... வீட்டில தவறவிட்டிட்டன் போல' என்று புலம்பித்தீர்த்தாள்.

கமலா ரீச்சரின் புலம்பலுக்கு அவள் என்ன பதில் சொல்ல முடியும்? 'வடிவாகத் தேடிப் பாருங்கோ ரீச்சர்' என்றாள்.

'அதைக் காணேல்லை... நான் வகுப்புக்குப் போறன் ரீச்சர்?' என்றபடி கமலா ரீச்சர் வெளியேறினாள்.

சுவரோரமாய் இருந்த பிரம்புக் கதிரையில் அமர்ந்து கொண்டாள் அவள். இப்படித்தான் இரண்டு வாரங்களுக்கு முன்னால் அவளிடம் தன் இனிய காதலை வெளியிட்டான் அன்ரன் மாஸ்ரர்.

அன்ரன் மாஸ்ரர் மிகவும் நல்லவன். உயர்ந்த கம்பீர மான கறுப்பான உருவம்... அவர்மீது அவளுக்கு நிறைய விருப்பம் இருந்தது. அந்த விருப்பம் வெறும் சினேக உணர்வு தான் என்று அவளுக்குத் தெரியும்.

அன்று... 'எக்ஸ் கியூஸ் மீ ரீச்சர் நானும் இங்கிருப் பதில் உங்களுக்குச் சிரமமில்லையே...' என்றான் அவன்.

'இது சகல ஆசிரியர்களும் ஓய்வெடுப்பதற்கான அறை... இங்கே இருப்பதற்கு யாரும் யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லையே...' என்று நினைத்துக் கொண்டவள்... 'இல்லை' என்றாள் சுருக்கமாக.

அவளுக்கு எதிரே உள்ள கதிரையில், அவன் அமர்ந்து கொண்டான். 'ரீச்சர்! நான் இன்னும் கொஞ்ச நாளிலை இந்த வேலையை றிசைன் பண்ணிப்போட்டு சவூதிக்குப் போறன்...' அவள் இலேசான ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்.

'இல்லை ரீச்சர் இந்தக் காலத்திலை பணம்தான் வாழ்க் கையை முடிவு செய்கிற ஒரு கருவியாக இருக்கிறது .. கூடப் பிறந்த குற்றத்துக்காக எங்கடை பெண் சகோதரிகளுக்காக நாங்கள் எங்கடை மனங்களை மரக்கப்பண்ண வேண்டியி ருக்கு...'

அவன் சொன்னது உண்மைதான் என்ருலும் அதில் அவளுக்கு உடன்பாடு இல்லவே இல்லை. பெரும்பாலான ஆண்களின் ஏகோபித்த குரல் வெளிப்பாடு இதுதான். இந்தப் பணத்தை இரக்கமின்றி இன்ெனுரு ஆணே கேட்கிருன் என்பதை இவன ஏன் புரிந்து கொள்ளவில்லை.

அவளுடைய மௌனத்தை அவன் தவருகப் புரிந்து கொண்டானே என்னவோ 'உங்களுக்கு சிரமம் தர்றதா நினைச்சா மன்னிச்சுக் கொள்ளுங்கோ ரீச்சர்...' என்ருன் வேதனையுடன்.

'இல்லை மாஸ்டர் இல்லை .. சொல்லுங்கோ .. என்னுல உங்களுக்கு ஏதாவது வகையில ஆறுதல் கூறமுடியுமென்ரு .. செய்யிறன் ..'

நான் உங்களோடை ஒரு பிரண்டு என்ற முறையிலை தான் இப்ப கதைக்க விரும்புறன் கௌசல்யா கல்யாண மாகி இரண்டு பிள்ளைகளுடன் விதவையாக எங்களோட இருக்கிற அக்கா எதிர்காலக் கனவுகளோடை என்னை நம்பியிருக்கிற தங்கச்சி தென்னை மரத்துக்கு தண்ணி ஊத்திவிட்டு எப்ப தேங்காய் விழும் என்கிற மாதிரி .. என் கைகளையே ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அம்மா இவர்களுக்காக என்னை நானே அர்ப்பணிக்கத் தானே வேணும் ஆனு நானும் ஒரு சராசரி ஆம்பிளை தானே எனக்கும் விருப்பங்கள் அபிலாசைகள் கருத்துக்கள் எல்லாம் இருக்கு... அவற்றை நான் குழி தோண்டிப் புதைக்க முடியுமா கௌசல்யா? ..?'

'சும்மா கவலைப்படாதேயுங்கோ மாஸ்டர் கடுமையான உழைப்புக்கு முன்னுல் எந்தக் கஷ்டமும் பனி மாதிரி உருகிப் போய்விடும் .. இவற்றை நீங்கள் பாரமா நினைக்கக்கூடாது கடமையாக நினைத்துக் கொள்ள வேணும் '

அவன் சிறிது நேரம் எதையோ யோசித்துக்கொண்டிருந்தான் பிறகு அவளைப் பார்த்தபடியே, 'கௌசல்யா

துன்பம் வருகிறபோது துவளாவிடாமல் ஆறுதல் கூறித் தேற்றுவதுதான் உண்மையான அன்புககு இலக்கணம். ...இந்த அன்பும்... ஆறுதலும் உங்கள் மூலமாக என்ர வாழ்க்கையிலே தொடர வேணும் இதுதான் என்ர ஆசை... நிறைவேற்றுவீங்களா கௌசல்யா......?

எதிர்பாராத விதமாக உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை அவள் உறைந்து போனாள். உடம்பிலிருந்த உதிரம் முழுவதையும் யாரோ உறிஞ்சிக் குடித்து விட்ட மாதிரி இருந்தது அவளுக்கு.

'எனக்குத் தெரியும் கௌசல்யா... எல்லாரும் ஊருக்குத்தான் உபதேசம் செய்வினம்... பட்டதாரியான நீங்கள் கூட... சமயம் பார்க்கிறியள்... வித்தியாசங்களை விருத்தி செய்யப் பயந்து விலக நினைக்கிறியள்... உங்களுக்கு ஏன் கௌசல்யா படிப்பு...? பட்டம்...? அவன் உடம்பு படபடத்தது. ஏராளமாக வியர்த்துப் போனான்.

'மாஸ்ரர்... வாழ்க்கை சம்பந்தமான முடிவுகளை உடனடியாக எடுக்க ஏலாது... யதார்த்தமா சிந்தித்து பார்க்க வேணும்... ஒவ்வொரு முடிவின் பின்னால் ஏற்படக்கூடிய நன்மைகளை... தீமைகளை... எப்படியெல்லாம் எங்களாலே எதிர்நோக்க முடியும் என்றெல்லாம் நினைச்சுப் பார்க்க வேணும்... படுகுழிக்கு எதிரும் புதிருமா நின்று கொண்டு கரங்கோர்த்துக் கொள்ள முடியுமா மாஸ்ரர்...?'

'நீங்கள் சொல்லுறது உண்மைதான் கௌசல்யா... ஆனா... ஆனா... உங்களை உங்கட அனுமதியில்லாமலே நீண்ட காலமாய் நேசித்துவிட்டு... இப்ப உங்களை இழக்க என்னாலை முடியாது... முடியாது...'

'நானும் ஒரு சாதாரண பொம்பிளைதான்... எனக்கும் அன்பு, பாசம், காதல் என்று எல்லா உணர்வுகளும் உண்டு மாஸ்ரர்... ஆனா... நான் ஈஸியா முடிவு எடுத்துவிட ஏலாது...'

'நான் உங்களை வற்புறுத்தவில்லை... ஆறுதலா முடிவெடுங்கோ... ஆனா... அந்த முடிவு எனக்கு முடிவு ஏற்படுத்

தாமல் இருந்தா சரி...' அன்ரன் மாஸ்டர் வெளியே போக வும் கமலா ரீச்சர் உள்ளே நுழையவும் அமைவாக இருந் தது.

ரீச்சர்...' காலைச்சுத்தின பாம்பு கடிக்காமல் போகாது... கொஞ்ச நாளாய் அன்ரன் மாஸ்ரர் உங்களையே சுத்துருர்... அவனவன் சும்மா காதல் கீதல் என்று உளறிப்போட்டு... சந்தர்ப்பம் வரும்போது... 'நான் அம்மா பிள்ளை... அம் மாவை மீற முடியேல்லை' என்று நழுவி விடுவாங்கள்... நானும் அஞ்சு வருஷத்துக்கு முந்தி இப்படித்தான் காதலிலை மயங்கி... இன்றுவரை சீரழியிறன்...'

கமலா ரீச்சர் வழமை போலப் புலம்பினுள், இவ்வள வுக்கும் கமலா ரீச்சர் ஒரு எம். ஏ. பட்டதாரி என்று நினைக்க கௌசல்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அன்ரன் மாஸ்ரருக்கு என்ன சொல்வது? என்ற குழம்பிய மனத்து டன் தனக்குரிய வகுப்பறைக்குச் சென்ருள்.

இரண்டு வாரங்களும் அவளுக்கு நிம்மதியே இல்லை. அம்மா அடிக்கடி சொலுவாள். 'எங்களைப் போல ஏழைய ளுக்கு மானம்தான் பெரிசு... மானம் கெட்டு வாழுறநேரம் கிணத்திலை விழுந்து செத்துப் போகலாம்...' இந்த அம்மா அன்ரன் மாஸ்ரரை அவள் காதலித்தால் ஏற்றுக்கொள் வாளா?

இப்படித்தான் கணேசுமாமா... தன் ஒரே மகளைப் பொத்திப் பொத்தி வளத்தார்... ஊரே வியக்கும்படி படித் துப் பட்டம் பெற்று உயர்ந்த உத்தியோகத்துக்குப் போனுள். அங்கே சக உத்தியோகத்தனை விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டாள், மனதுக்குள்ளே வெதும்பிக் கொண்டிருந்த ஊர்ச்சனங்கள் ஒன்று கூடிக் கேலி பேசினுர்கள். கணேசு மாமா ஊருக்காக மகளை வெறுத்தார்.

அவருடைய அடுத்த பெண்ணுக்கு யாரும் மாப்பிள்ளை தர முன்வரவில்லை. அவளும் கல்யாணமாகாமலே கிழமா

கிப் போனுள். கணேசு மாமா கண்ணீர் விட்டபடியே செத்துப் போனுர். அன்ரன் மாஸ்டரை அவள் காதலித்தாலும் இன்னெரு கணேசு மாமாவின் குடும்பம் போலத்தான் இதுவும் ஆகும்.

தம்பி வாகீசனிடமும், தங்கை வத்சலாவிடமும் அவள் எவ்வளவு பிரியமாக இருக்கிருள்? சிறுவயதிலிருந்து அவர்களுடைய ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும்... அவர்களின் முன்னேற்றத்தின் போதும் அவள் எவ்வளவு பூரித்துப் போயிருக்கிருள்.? அவளுடைய காதல் தன் உயிர் உடன் பிறப்புக்களின் எதிர்காலத்தைக் கருக்கும் என்ருல்... அப்படி ஒரு காதல் அவளுக்குத் தேவையே இல்லை...

'மாஸ்ரர்... நான் என்ர முடிவைச் சொல்லி விடுறன்...' என்ருள் கௌசல்யா. உள்ளங் கைகளையே பார்த்துக்கொண்டிருந்த அன்ரன் புதுவிதமான எதிர்பார்ப்புகளோடு நிமிர்ந்தான். புன்னகைத்தான்.

'நீங்கள் சொன்னதை நான் சிந்தித்துப் பார்த்தாச்சு மாஸ்ரர்... பெற்றவளுக்கும்... கூடிப்பிறந்ததுகளுக்கும் ஒரு காயத்தை ஏற்படுத்திப்போட்டு... எனக்கென்று சுயநலமிக்க ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நான் விரும்பேல்லை... நடக்க முடியாத ஒன்றுக்காக ஏங்கி... உங்கள் வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளாமல்... நீங்கள் சந்தோஷமாக வாழவேணும் மாஸ்ரர்... என்றும் உங்கட ஆத்மார்த்தமான சினேகிதியாக நான் இருப்பன்...'

அவன் மௌனமாகவே இருந்தான். அவன் மௌனமாக இருப்பதை குழப்பாமல் அவள் அகன்ருள். மனது வெளித்துப்போய் இருந்தது.

பஸ் பிடித்து வீட்டுக்கு வந்தபோது... வீட்டில் அம்மா இல்லை. செருப்புகளை விறுந்தை மூலையில் கழற்றிவிட்டு... உள்ளே நுழைந்தாள்.

தங்கை வத்சலா கையில் எதையோ வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் இவளைக் கண்டதும் திடுக்கிட்டு... பதற்றத்துடன் புத்தகங்களுக்குள் செருகிவிட்டு... 'அக்கா... நீ... நீங்களா...? என்ருள்.

வத்சலா தன்னிடம் எதையோ மறைக்கிறாள் என்று புரிந்து கொண்டு அமைதியாக அவள் உடுப்பு மாற்றிக் கொண்டாள். கால் முகம் கழுவிக்கொண்டு வந்து மௌன மாக... தங்கை வத்சலாவை அழைத்தாள்.

'வத்ஸி... நீ கையிலே என்ன வைத்திருந்தாய்?...

'படம்...'

யாருடைய படம்......

'சொல்லு வத்ஸி... படம் வைச்சிருக்கிறதை ஏன் நீ எனக்கு மறைக்க வேணும்...? நானெல்லாம் எவ்வளவு 'பிரெண்சி'ன்ரை படம் வைச்சிருக்கிறன்...'

'அக்கா...' வத்ஸி எதிர்பாராத விதமாக கௌசல்யா வின் மடியில் முகம் புதைத்தது. அழத் தொடங்கினாள்.

'சொல்லு வத்ஸி... ஏன் அழுகிறாய்?...'

நீங்கள் கோவிக்கமாட்டீங்களா அக்கா...'

'இல்லை வத்ஸி... சொல்லு... உன்னிலே நான் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறேன் உன்னை நான் ஏசுவேனா?... பயப் பிடாம சொல்லு...

வத்சலா எழுந்து உள்ளே போனாள். உள்ளேயிருந்து செருகி வைத்த படத்தை எடுத்துக் கொண்டு வந்து கௌ சல்யாவிடம் தந்தாள்.

அழகான ஒரு இளைஞனின் நெஞ்சளவு புகைப்படம். கம்பீரமாகவும் வசீகரமாகவும் இருந்தான் அவன். அவளுக்கு எல்லாமே புரிந்தது. மெல்ல பின்புறம் திருப்பினாள். அழ கான ஆங்கில எழுத்துக்களில் 'டி. ஜி. ஜோசப்' என்று எழுதியிருந்தது.

ஒருகணம் நிலம் அதிர... 'வத்ஸி...' என்று அதிர்ந்து போனாள் கௌசல்யா.

'அக்கா... அக்கா... நானும் ஜோசேப்பும் உயிருக்குயி ராய் நேசிக்கிறம்... எங்களைப் பிரித்துப்போடாதேயுங்கோ...' வத்சலா விம்மத் துவங்கினாள். கௌசல்யா சிலையாகிப்போய் நின்றாள். (யாவும் கற்பனை)

(3 6-89 சஞ்சீவி)

# மரணம் ஒரு முடிவல்ல

இன்று ஓய்வுநாள்... ஓய்வுநாள் என்றதுமே மற்ற ஆறு நாட்களும் எங்கோ மறைந்து கிடக்கும் சோம்பேறித்தனம். என்னையறியாமலே வந்துவிடும். அதன் ஆரம்ப செயற்பாடாக, ''விடித்துவிட்டதே'' என்று உள்மனம் பதைக்கின்றபோதும். ''லீவுதானே... கொஞ்சம் படுப்பம்...'' என்று இன்னொரு மனம் தடுத்துவிடுகிறது.

எழுந்தபோது எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. கால் முகம் கழுவிக்கொண்டு அடுப்படிக்கு வருகிறேன்.

''என்னதான் உத்தியோகம் பாக்கிறதெண்ட நினைப்பு இருந்தாலும் நேரத்துக்கு நித்திரையாலை எழும்பவேணும்...'' அதுநான் பொம்பிளைப் பிள்ளையளுக்கும் அழகு அம்மா யாருக்கோ சொல்லுகிற மாதிரிச் சொன்னாள்.

''ஆறு நாளும் நான் படுகிற கஷ்டம் இந்த அம்மாவுக்கு எங்கை தெரியப்போகுது...'' மனதுக்குள் மெல்லச் சிரித்தபடி தேனீருடன் வெளியே வருகிறேன்.

என் முற்றத்துப் பிலாமரத்தில் அண்டங்காகம் ஒன்று மூச்சுவிடாமல் அவலமாய்க் கத்திக்கொண்டிருந்தது.

''உந்தக் காகத்தைத் துரத்துமோனை. விடிய வெள்ள ணத்துவங்கி விட்டுது கத்துறதுக்கு...'' அம்மா அடுப்படியில் இருந்து கத்தினாள்.

''காகம் ஏதோ தன்ரை வேதனையில கத்துது...'' நீங்கள் ஏன் சும்மா என்னவோ எல்லாத்தையும் கற்பனைபண்ணுறியள்...? முணுமுணுத்தபடி காகத்தைத் துரத்தினேன். துரத்திவிட்டுத் திரும்பியபோது படலையில் நான்கு கால்கள் உள்ளேவரத் தயங்குவது தெரிந்தது.

''அக்கா! ஒரு ரிக்கற் எடுக்கிறியளே...'' 'அக்கா' அந்தக் குரலின் பரிவு இதயத்தில் சீழ்கட்டிப் போயிருந்த காயம் ஒன்றின்மேல் யாரோ மிதித்து விட்ட மாதிரி வலித்தது. எவ்வளவு காசு தம்பி...? உள்ளவாரும் எடுக்கிறம்...

ரிக்கற்றை வாங்கிக் கொண்டு பத்து ரூபாவைக் கொடுத்தேன். ஆரம்ப சுகாதார வசதிக்காக நாடகமாம்.

அவர்கள் போய் விட்டார்கள். ஆனால் அந்த அக்கா என்ற அழைப்பு சுற்றிச் சுற்றிக் கேட்டது. ''ரகு'' என்ற அந்தப் பழைய காயம் வலித்தது.

படித்து முடித்துவிட்டு பொழுது போகவில்லை என்று தவித்துக் கொண்டிருந்தபோது... ''ரியூசன் கொடுக்கலாம்'' என்ற எண்ணம் உதித்தது. எனது முதல் மாணவனாக அறிமுகமாகி.. என்றும் என் அன்புக்கு பாத்திரமாகிவிட்ட ஒரு தம்பிதான் அந்த ரகு.

மூன்று பேரோடு நான் வகுப்பை ஆரம்பித்து முப்பது பேர் ஆகிவிட்டனர். முழத்துக்கு முழம் ஊரில் ரியூட்டரிகள் பெயர் தாங்கி நின்றாலும்... பல பெற்றோர்கள் என்னிடம்தான் பிள்ளைகளைப் படிக்க அனுப்பினார்கள். அதற்கு ஒரு முக்கிய காரணம் நான் யாரிடமும் ''பீஸ்'' என்று வாய்விட்டுக் கேட்காதது நான்.

என்னிடம் நிறையப் பேர் படித்தாலும் ஜெயா என்ற மாணவிதான் என்னை மிகவும் ஈர்த்தாள். தூய்மையான தோற்றம்; அடக்கமான சுபாவம்.

படிப்பு நேரம் இல்லாத வேளைகளிலும் அவள் எங்கள் வீட்டுக்கு வருவாள். அப்போதெல்லாம் எனக்கு அவளைப் பற்றி எந்தவிதமான அபிப்பிராயமும் ஏற்படவில்லை. சின்னப்பிள்ளைதானே!

அவள் எங்கள் வீட்டுக்கு வரும் வேளைகளில் பக்கத்து வீட்டு ரகு என் தம்பியும் அடிக்கடி வருவான். பென்சில் கேட்டும், விளங்காத கணக்குக் கேட்டும் அவன் வருகை அதிகரித்தபோது நான் கொஞ்சம் உஷாரானேன்.

நான் வீட்டைவிட்டு வெளியே போகும்போது, நான் நாளைக்கு நிக்கமாட்டேன்... நீ பின்னேரம் வா ஜெயா'' என்று முன்னறிவித்தல் கொடுத்தாலும்...

''வீட்டில இருந்து படிக்கேலாது... தம்பியாக்கள் என்னோட ஒரே சண்டை....'' அவள் வருவாள். தன் வருகைக்கு அவள் கூறும் நொண்டிச் சாட்டு இது.

இவன் ரகுவைக் கொஞ்சம் கவனிச்சுக் கொள்மோனை... நாலு பொம்பிளைப் பிள்ளையள் படிக்கவாற இடம்... மற்றவை பரிசிகேடா நினைக்கிறமாதிரி இருக்கக்கூடாது...'' ஒரு நாள் அம்மா சொன்னாள்.

ரகுவுக்கு அவ்வளவாகப் படிப்பு ஏறுது... படிக்கவேணும் எண்ட அக்கறை கூட அவனுக்கு இல்லை. படி என்று வற்புறுத்தினால் ஏற்கெனவே கீறிவைத்திருந்த உயிரியல் படங்களுக்கு வர்ணம் பூசிவிட்டுப் படுத்துவிடுவானும்.

''ம்'' இவனை உன்ரை தம்பிமாதிரிக் கவனிச்சுக்கொள் பிள்ளை. இவனாலை எனக்குப் பெரிய உபத்திரவமாகக் கிடக்குது... தேப்பன் மனிசனை அடிக்கிறன், முறிக்கிறன் எண்டு நிற்கிறார். இப்பத்தைச் சின்னனுகளோடை காலந்தள்ள ஏலாது... அவனும் இளந்தாரிப்பிள்ளை... அவனுக்கும் ரோசம் வந்து ரண்டுசொல்லு எதிராகச் சொல்லிப்போட்டான் எண்டால் என்ன செய்யிறது?...'' முதல்முதல் என்

னிடம் ரகுவைப் படிக்க எண்டு விடும்போது அவனுடைய தாய் அம்பியக்கா இப்படித்தான் சொல்லிவிட்டா.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. இதைச் சாட்டாக வைத்து ஜெயாவுக்குச் சொன்னேன், ''ஜெயா! உன்னை உன்ர தங்கச்சி மாதிரி நேசிக்கிறபடியாத்தான் சொல்லுறன்... பூனை கண்ணை மூடிக்கொண்டு பால்குடிச்சா உலகம் இருண்டுவிடாது... படிக்கிற நேரத்திலை படிக்க வேணும்... இப்ப படிக்கிறதைத்தவிர வேற எதிலும் உனர மனம் திசை திரும்புறதை நான் விரும்பேல்லை...''

அவள் இரண்டு நாட்களாய் என்முகத்தை நிமிர்ந்து பார்ப்பதில்லை. என்னை நானே திட்டிக் கொண்டு ஒருநாள் ரகுவைக் கூப்பிட்டேன்.

''நீயே யோசிச்சுப் பாரடா ரகு... அவயளின்ரை குடும்பத்துக்கும் உங்கட குடும்பத்துக்கும் ஏணி வைச்சாலும் எட்டாது... உனக்கு உந்த ஆசை ஒண்டும் வேண்டாம் உன்ரை அப்பா அறிஞ்சலேல் உன்னை அடிச்சு முறிச்சுப் போடுவாரடா... அநியாயமா உன்ரை எதிர்காலத்தைப் பாழாக்கிப் போடாதை...''

''உண்மையாவே நான் அவளை விரும்புறனக்கா...''

''ரகு காதலிக்கக் கூடாது எண்டு நான் சொல்லேல்லை... அதுக்கு ஒரு பக்குவமான மனம் தேவை சும்மா படத்தையும் பாத்துட்டு கண்டகண்ட புத்தகங்களையும் படிச்சுப் போட்டு மனதைப் பழுதாக்கிப் போடாதை... இப்படி வயதுக் கோளாறு ஏற்படுத்துற காதல்தான் கடைசியிலை சினிமாப் பாடல்களையும் சிகரெட்டுக்களையும் கதியெண்டு வாழ வைச்சுவிடுது...''

''...எங்கடை சமுதாயத்துக்கு இப்ப எத்தனையோ தேவைகள் இருக்கு... நிகழ்காலச் சமுதாயம் இந்த தலைமுறையிட்டை அம்பிகாவதியையும் அமராவதியையும் எதிர் பார்கெல்லை... குற்றுயிரா இயங்கிக் கொண்டிருக்கிற தனக்கு புத்துயிர் அளிக்கக் கூடிய தியாகிகளைத்தான் எதிர்பாக்குது...''

என் பிரசங்கத்திற்குப் பிறகு அவன் பாடநேரத்துக்குத் தான் வருவான். படித்து முடிந்ததும் போய்விடுவான். ஆனால் அவர்களுடைய சந்திப்பு ஒழுங்கைகளிலும்... சந்திகளிலும் நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது.

நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. ஏதோ அதிஷ்டவசமாய் எனக்கு ஒரு நிரந்தர ஆசிரியர் வேலை... கிடைத்துவிட்டது. பள்ளிக்கூடத்துக்கும்போய்... வீட்டிலும் ரியூசன் கொடுப்பது என்வரை இயலாமல் போக... ரியூஷன் வகுப்பை நிறுத்திவிட்டேன்.

பரீட்சை முடிந்து முடிவுக்காய் அவர்கள் காத்திருந்த போது... ரகுவின் கடிதம் ஒன்று அவளது தகப்பனிடம் அம்பிட்டுவிட்டது. அவர் மிகவும் கெட்டிக்கராத் தகப்பன். மற்றவை எண்டால் ஊரைக் கூட்டி நியாயம் கேட்டு விஷயத்தைப் பெரிதாக்கிப் போடுவினம். ஆனால் அவர் தடதடவென்று காரியத்தில் இறங்கினார்.

எப்படியோ வெருட்டியோ திட்டியோ ஜெயாவின் மனம் மாற்றப்பட்டு... அவளுக்கும் வெளிநாட்டு எஞ்சினியருக்கும் திருமணமாகிவிட்டது. அவளுடைய இழப்பைத் தாங்க முடியாமல் அவன்மீது வைத்த பாசத்தால் நானும் இரண்டு நாட்கள் உண்ணாமல், உறங்காமல் துக்கம் கொண்டாடினேன்.

''எனக்கு அப்பவே தெரியும்... உவன் வீட்டுக்கும் உதவான்... நாட்டுக்கும் உதவான் எண்டு... நாலு நாளைக்கு தெருவிலை திரிஞ்சு போட்டு திரும்பி வருவான் இங்கதான்... ரகுவின் தகப்பன் அசையவே இல்லை. அம்பியக்கா பாவம் படுத்தபடுக்கைதான்.

எழும்புங்கோ அம்பியக்கா... ஏதோ ஊர்உலகத்தில் நடக்கக் கூடாதது நடந்த மாதிரி... எத்தினை நாளைக்கு இப்பிடி இருக்கப் போறியள்... நான் தேற்றினேன்.

''தன்னை நம்பி வயதுவந்த ரண்டு பொம்பிளை இருக்குது... அதுகளுக்குத்தான் செய்ய வேண்டிய கடமைகள்

இருக்குதெண்டு யோசிக்காமல் அவன் போட்டானே பிள்ளை...'' சிலைத்தலைப்பால் கண்களைத் துடைத்தபடி அம்பியக்கா அழுதா.

''அவன் என்ன சின்னப்பிள்ளையே அம்பியக்கா... எங்கையெண்டாலும் இருப்பான்... சும்மா மற்றப் பிள்ளையளையும் பயப்படுத்தாமல் தைரியமாய் இருங்கோ...''

நான் அம்பியக்காவுக்கு ஆறுதல் கூறிவிட்டு வந்தேன்.

''எப்படியும் திரும்பி வந்துவிடுவான் என்ற ஒரு வறட்டு நம்பிக்கையோடு காத்திருந்தபோது... தற்செயலாக அவனை நான் காண நேர்ந்தது. அவன் உருவத்தில் எத்தனையோ மாற்றம்? ஒருவேளை அந்த மாற்றம் உள்ளத்திலும் ஏற்பட்டிருக்குமோ...? இருக்காது, அப்படியென்றால் அவன் என்னைக் கண்டதும் சந்திப்பைத் தவிர்த்திருப்பானல்லவா?

''இவதான் நான் சொல்லுற என்ர அக்கா...'' அவன் தன் தோழர்களிடம் என்னை அறிமுகப்படுத்தியபோது தேகமெல்லாம் பரவசப்பட்டது. தெருவால் போன ஒன்றிரண்டு பேர் அவர்களையும் என்னையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு போனார்கள்...

அவனுடைய திடீர்ச் சந்திப்பு என்னைத் திகைக்க வைத்ததால் ஒன்றும் கேட்கவோ சொல்லவோ முடியேல்லை.

அதற்குள்... தெருவுக்கு அந்தப் பக்கமாக நின்ற வான் ஒலியெழுப்ப... ''ஆறுதலா வாறனக்கா... கட்டாயமா உங்களிட்ட வருவன்...'' என்று கூறிவிட்டு அவர்களுடன் அவன் ஊர்ந்த வானில் தொற்றிக் கொண்டான்.

அவன் போனபிறகுதான், அம்பியக்கா படுத்த படுக்கையாகக் கிடப்பதையோ, அல்லது அவனுடைய தங்கைகள் அழுது கொண்டிருப்பதையோ... கூறவில்லையே என்று மனம் சங்கடப்பட்டது.

இவையெல்லாம் ஏற்படும் என்று அவனுக்குத் தெரியாதா என்ன? இனி பந்த பாசம் எல்லாம் அவனை மாற்றப்போவதில்லை.

திரும்பத் திரும்ப அவனது நினைவில் மனம் உழன்றது... ஒரு பெண்ணின் நினைவு ஒரு ஆணின் மனத்தை எப்படியெல்லாம் திசைமாற்றி விடுகின்றது என்பதற்கு உதாரணமாய்... என் தம்பி ரகு... அந்தக் கசப்பான உண்மையின் உறுத்தலை உணர்ந்து கொண்டேன்.

இரண்டு வாரங்கள்... விடிந்து வேலைக்குப் புறப்பட்ட போது... அந்தக் கொடிய செய்தி கேட்டுத் தீயாகப் பரவியது... ஊரே சோகத்தில் மூழ்கியது. முற்றுகையை முறியடிக்கப் புறப்பட்ட அந்த இளைய தலைமுறை இரத்தக் காட்டில் இறுதி மூச்சுவிட்டது... அவனோடு களத்தில் நின்றவர்கள் வெற்றியோடு திரும்பினார்கள்... அவனுடைய மரணம் இந்த மண்ணுக்கு முடிவுக்காகவல்ல விடிவுக்காகவே! வீதிகள் தோறும் புன்னகை வீசிக்கொண்டு அவன் இருக்கிறான்.

(அமிர்தகங்கை 01-03-87)

---

ஒரு மனிதனின் அழியாத சொத்து - துவளாத நெஞ்சம். தோல்விகளையும், துன்பங்களையும் துணிச்சலோடு எதிர் கொள்ளும் மனிதன் முடிவில் வெற்றியையும், மகிழ்ச்சியையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

---

# ஆறடி நிலம்

உச்சிவெயில் ''உயிரைப் பறிக்கப்போகிறேன்'' என்று அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. மரணத்துக்குக்கூட நான் அஞ்சமாட்டேன் என்று கூறுவதைப்போல தோள்களை உயர்த்திக் கொண்டு நடந்து கொண்டிருக்கிறுன் வீரமணி.

கொளுத்தும் அந்த வெயிலின் கொடுமையைத் தடுக்க காலில் செருப்போ, தலையில் துணியோ கூட அவன் அணியவில்லை. கொளுத்தும் வெயிலைப் போலக் கொட்டுகின்ற மழையும் அவனுக்குப் பழகிப்போன ஒன்றுதான்.

கன்னங்கரேலென்ற அவனது மேனியில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகள் வெயிலை உறிஞ்சி டாலடித்துக் கொண்டிருக்கின்றன.

திடீரென அவனுடைய மனதில் தோன்றிய ஒருவேகத்தால் அவன் சிவசம்பர் வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறுன்...

''இதுக்கு சிவசம்பர் சம்மதிக்கிருரோ என்னவோ...'' என்கிற எண்ணம்தான் அவனுடைய மனமெங்கும் வியாபித்து நிற்கிறது.

வீரமணி அதிகம் படிக்காதவன். அதனுல்தானே என்னவோ கொஞ்சம் முரட்டுக் குணம் கொண்டவன். ஆனுல், வாழ்க்கையில் அதிகம் முன்னேற வேண்டும், மற்றவர்களுக்கு ஒரு முன்னேடியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் நிறைந்தவன்.

சிறு பாராயத்திலேயே தந்தையை இழந்துவிட்ட அவனேயும் அவனது அண்ணன் பாலேயாவையும் வளர்ப்பதற்கு அவனுடைய தாய் பட்டபாடு... அப்பப்பா!

தந்தை இல்லாத பிள்ளேகள் என்று தாய் காட்டிய அதீத அன்பு பாலேயாவை மட்டும் நல்வழிப்படுத்தவில்லே. மாருக பொய், களவு, மது, மாது, சூது என்று பல வழிகளில் இறக்கிவிட்டது. இதனுல் ஊரும் உலகமும் இவர்கள் குடும்பத்தைத் தள்ளி வைத்தன. இந்தக் கொடுமையைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் தாயும் நோயுற்று இறந்துவிட வீரமணி தன்னந்தனியனுனுன்.

அன்னேயின் இழப்பு... அண்ணனின் தீயபோக்கு... ஊரின் ஒதுக்கல் இவற்றுல் வீரமணி நிரம்பவும் அடிபட்டுப் போயிருந்த வேளேயில்தான், வீரமணியின் தோட்டத்துக்கு அருகில் புதிதாகக் குத்தகைக்கு தோட்டம் செய்ய வந்திருந்தார் நல்லதம்பி.

நாதியற்றுப் போயிருந்த வீரமணிக்கு நல்லதம்பியின் நெருக்கம் புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. நல்லதம்பியின் எண்ணத்தில் உயர்ந்த இடத்தைப் பிடித்துக் கொண்டான் வீரமணி.

நாளாக நாளாகத் தன் மனக்குறைகளேயெல்லாம் வீரமணியிடம் கூறி ஆறுதல் தேடினுர் நல்லதம்பி. அவருடைய மாற்றமுடியாத மனக் கவலேகளில் ஒன்று அவருடைய மகள் ராதா.

செம்மண் புழுதியிலே வாழ்ந்தாலும் எந்நேரமும் பளிச்சென்று இருப்பாள் ராதா. மையிடாமலே மையல்கொள்ள

வைத்தன அவளுடைய விழிகள். அவை பேசுகின்ற மொழி கள்தான் எத்தனை! எத்தனை!!

வாய்க்குத்தான் பேசும் திறமை இல்லை... விழிகளாவது பேசட்டுமே என்றுதான் இவளுக்கு இவ்வளவு அழகான கண் களை ஆண்டவன் படைத்தானோ...? அவளைப் பார்க்கும் போதெல்லாம் இப்படித்தான் நினைக்கத் தோன்றும் வீர மணிக்கு.

ராதாவின் பேச்சற்ற நிலை அவளைப் பெற்றவர்களை மன மொடிய வைத்துவிட்டது.

அழகு, படிப்பு, உத்தியோகம் அத்தனையும் இருந்துமே எத்தனையோ பெண்கள் வாழ்க்கையில் போராடும் போது இவளுக்கு மட்டும் என்ன வாழ்க்கை வந்துவிடப் போகிறது? என்றே அவர்கள் மனந் தளர்ந்தார்கள்.

அவர்களின் அந்த மனக்குறையைத் தீர்த்து வைக்க முன்வந்தான், வீரமணி. வீரமணி ராதாவைத் திருமணம் செய்வது தனக்குப் பெருத்த அவமானம் என்று பாலையா கத்த... அந்த வாக்குவாதத்தின் விளைவாக பாலையா வீட்டை விட்டு வெளியேறிவிட்டான். வீரமணி மட்டும் ராதாவுடன் வாழ்ந்து வருகிறான்.

வீட்டுக்கு ஓர் ஒழுங்கான பாதை இல்லையே என்பது தான் வீரமணியின் பெரிய கவலை...

அவனுடைய தாய் இறந்து பிரேத ஊர்வலம் சென்ற போது... அந்தச் சிறிய பாதையில் எவ்வளவு இடையூறு கள் ஏற்பட்டன? அதுவே அவனுக்குப் பல நாட்கள் மனதை அறுத்துக் கொண்டிருந்தது,

எப்படியும் பக்கத்து வளவுக்கார சிவசம்பரை ஐஸ் வைத்து ஆறு அடி அகலமான பாதையை வாங்கிவிட வேண் டும் என்பதுதான் வீரமணியின் திடீர் ஆசை.

''சிவசம்பரிடம் கேட்டுப் பார்த்தால் என்ன...?'' என்று உள்மனம் தூண்டிவிட, இந்த வெயிலில் வீரமணி சிவசம்பரைத் தேடி நடந்து கொண்டிருக்கிறுன்.

அவன் எதிர்பார்த்தது போலவே சிவசம்பர் மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சாய்மனேயில் கால்களைத் தொங்கப் போட்டபடி படுத்திருக்கிருர்.

''அம்மான் உங்களிட்டைத்தான் ஒரு விஷயமாய் வந்தனுன்? என்றபடியே அவர் எதிரே நிலத்தில் அமர்ந்து கொண்டான் வீரமணி.

வாயிலிருந்த புகையிலைச் சுருட்டைக் கையில் எடுத்துக் கொண்டு, நிறைந்திருந்த எச்சிலைத் வெளியே துப்பிவிட்டு ''என்ன விஷயம்? என்று கேட்டார் சிவசம்பர்.''

''எந்தக் காரியம் நடக்கிறதுக்கும் ஒரு காலநேரம் கூடி வரவேணும் எண்டு சொல்லுறவை... நேராக விஷயத்தைச் சொல்லுறன் அம்மான், நான் அந்த ஒற்றையடிப் பாதையிலே படுகிற கஷ்டங்களை அன்றைக்கு அம்மாவின்ர செத்த வீட்டன்று கண்டனீங்கள் தானே... நீங்கள் உங்கட வேலி அருகாலே ஆறடி அகலப் பாதை தரவேணும்... நீங்கள் பெரிய மனிசர்... இல்லையெண்டு சொல்லக்கூடாது... இப்ப காணியள் விற்கிற விலையைப் பார்த்து...'' வீரமணி சிவசம்பரின் முகம் மாறுவதைக் கண்டு பேச்சைச் சற்று நிறுத்தினுன்.

''உன்ர அப்பன் செத்த பிறகு என்னட்ட கூலிவேலை செய்துதான் உன்னை உன்ர தாய் வளர்த்தவள்... அதை மறந்து போட்டு... என்னட்ட காசு தந்து விலேபேசி காணி வாங்கிற அளவுக்கு நீர் பெரிய ஆளாகிவிட்டீரோ... போடா வெளியாலே...''

வீரமணி ஒரு கணம் நிலை குலைந்து போனுன்.

''அம்மான்! அளவா கதையுங்கோ... நீங்களும் ஊரிலே பெரிய மனிசர் எண்டு கேட்க வந்தனுன்...'' எச்சரித்து

விட்டு வீரமணி வெளியேறிவிட்டான். இனி அங்கே ஒரு கணம் நின்றாலும் தன்னையும்மீறி ஏதாவது நடந்துவிடும் என்று வீரமணிக்கு நன்றாய்த் தெரியும்.

வீட்டுக்கு வந்தபோது அவனுடைய மனம் பாறாங்கல்லாய் கனத்தது. ஏழைகள் ஏழைகளாகவே கொத்தடிமைகளாக வாழ வேண்டுமென்று இந்தச்சிவசம்பர்கள் விரும்புகிறார்களா? எங்களுடைய வறுமை ஒழிந்துவிட்டது. ஆனால், அந்த வறுமையினால் ஏற்பட்ட வடு மாறவில்லையே என்று வருத்தப்பட்டான் அவன்.

சிவசம்பரின் வார்த்தைகள் அன்று முழுவதும் அவனைக் குடைந்து கொண்டேயிருந்தன. காலையில் ஒருவாறு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அவன் தோட்டத்துக்குப் புறப்பட்டான்.

வழியில் சிவசம்பரின் மகன் ராசனின் வீட்டைத் தாண்டியபோது... வீட்டுவாசலில் நின்றபடியே வீரமணியைப் பெயர் சொல்லி அழைத்தான் ராசன். அவன் அப்படி அழைத்தது வீரமணிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

தானும் நின்ற இடத்திலேயே நின்று என்னவென்று விசாரித்தான் வீரமணி. மீண்டும், வரும்படி ராசன் அழைக்கவே, வீரமணி உள்ளே சென்றான்.

''நீ என்ன அப்பாவோட ஏதோ சண்டித்தனம் செய்தியாம்'' என்று இளநாக்கடித்தான் ராசன்.

வீரமணிக்கு கைகள் குறுகுறுத்தன. ஆனாலும், அவன் அமைதியாக நடந்தவற்றைக் கூறினான்.

ராசன் அலட்சியமாக ஏதோவெல்லாம் பேச... வீரமணி தன் பொறுமையை இழந்து ராசனை அடிக்க... அந்த இடத்தில் பெரிய கூட்டமே கூடிவிட்டது. வீரமணியை எல்லோருக்குமே நன்கு தெரியும். மேலும் சண்டை வளராமல் தடுத்துவிட்டார்கள்.

''என் வீட்டு வாசலிலேயே எனக்குக் கை நீட்டுறியா...? பொறு உன்னை நான் கவனிக்கிறேன்...'' என்று கத்தினான் ராசன்.

கூடி நின்றவர்களுக்கு நடந்தவற்றைச் சொன்ன போது...

''போயும் போயும் ஆறடி நிலத்துக்கா அடிபடுகிறீர் கள்...'' என்று கேட்டுச் சிரித்தார்கள்.

அன்றிலிருந்து வீரமணியும் ராசனும் இரு துருவங்க ளாகிவிட்டார்கள். வீரமணியைக் காணும்போதெல்லாம் அடிபட்ட புலிபோல உறுமினான் ராசன்.

தோட்ட வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. பகல் முழுவதும் மாட்டோடு மாடாகத் தோட்டத்தில் வேலை செய்து சற்று முன்னர்தான் வீடு திரும்பியிருந்தான் வீரமணி. ராதா அடுப்பில் ஏதோ வேக வைத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்குப் பேசுகிற சக்தியிருந் தால் எப்படி இருக்கும் என்று வேதனையோடு கற்பனை பண் ணிக்கொண்டிருந்தான் வீரமணி.

எங்கிருந்தோ ஒரு குரல்...

''ஐயோ! தம்பீ... தம்பீ... ஆராவது ஓடிவாங்கோ...''

வீரமணி எழுந்து நின்று அந்தக் குரலை எடைபோட் டுப் பார்த்தான்.

சிவசம்பரின் மனைவிதான் உதவிகோரிக் கத்துகிறாள். மனதிலிருந்த கோபங்கள் எல்லாவற்றையும் உதறிவிட்டு உதவி கொடுக்க ஓடினான் வீரமணி.

சிவசம்பர் இரண்டு கைகளாலும் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு முனகுகிறார். அவருடைய வாய்வழியாக மஞ்சள் நிறமான நீர் வழிந்து கொண்டிருக்கின்றது.

''தினமும் இரவில் சாராயம் குடிக்கிறது இவற்ற பழக்கம்... சாராயம் என்று நினைச்சு இன்றைக்கு எதையோ குடிச்சிட்டார் தம்பீ...'' அவரது மனைவி அழுது கொண்டிருக்கிருள்,

கணநேரமும் தாமதியாது ஒரு குழந்தையைத் தூக்குவது போல அவரைத் தூக்கிக் கொண்டு தெருவுக்கு வந்தான் வீரமணி,

இப்போது தான் டியூட்டி முடிந்து ஓய்வாக அமர்ந்திருந்த கார்ச் சொந்தக்காரர் தம்பிராசாவை அழைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தான் வீரமணி.

இரவோடு இரவாக ராசனுக்குத் தகவல் தெரிவிக்கப் போனுன் வீரமணி. ராசனின் வீடு ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிக் கிடந்தது. வீரமணி அழைத்ததும் ''லைற்'' போட்டு விட்டு வெளியே வந்த ராசன். ''ஓ! இரவு நேரம் வந்திருக்கிறியோ... அன்றைக்கு விட்டுவிட்டன் என்று நினையாதை...'' என்று கறுவினுன்.

ராசனைச் சமாதானப்படுத்தி, நடந்த சம்பவங்களைக் கூறியபோது... வீரமணியையும் இழுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு ஓடினுன் ராசன்.

நீங்கள் உடனடியாகக் கொண்டு வந்தமையால்தான் உயிரைக் காப்பாற்ற என்னுல் முடிந்தது...'' என்று கூறினுர் டாக்டர்.

வீரமணியின் இரண்டு கைகளையும் பற்றிக்கொண்டு வீரமணியின் உதவிக்கு நன்றி சொல்ல வார்த்தையின்றித் தவித்தாள் சிவசம்பரின் மனைவி.

கண்களில் நீர் துளிர்க்க... வீரமணியைத் தழுவிக் கொண்டான் ராசன்.

''வீரமணி! இப்பவே உனக்கு ஆறடி நிலம் தாறன்டா... அப்பாவை ஆறடிக்குப் போகாமல் நீதானே காப்பாற்றி ஞய்... எனக்கென்ன என்று நீ இராத்திரி விட்டிருந்தால்...? வீரமணி! உன்னைப் புரிந்து கொள்ளாமல் நான்... நான்...'' மேலே பேசமுடியாமல் ராசனின் குரல் கம்மியது.

அவனை முதுகிலே தடவிக் கொடுத்து, ''இப்ப என்ன நடந்துவிட்டது என்று கவலைப்படுகிருய் ராசன்...' என்று ராசனைத் தேற்றிக் கொண்டிக்க...

''தம்பி! வீரமணி, இவர் சாராயம் குடிக்கிறது ஊரிலை ஒருத்தருக்கும் தெரியாது... தெரிஞ்சால் பரிசுகேடு...'' என்று காதில் குசுகுசுத்தாள் சிவசம்பரின் மனைவி.

வீரமணி தனக்குள் புன்னகைத்தபடி தலையாட்டினுன்.

---

புரட்சி என்பது இசைக் கச்சேரிபோல இனிமை யானதாக இருப்பதில்லை. வலி வேதனை, துக்கம் என்பவற் ருல் உருவாவது. இவைகளற்றுப் புரட்சி விளைவதில்லை.

---

# இருளில் ஒரு நிலவு

**மு**ற்றத்து வெயிலில் மிளகாய்ப்பழங்களைப் பரப்பி விட்டு காகம், கோழி கொத்தாமல் காவல் பார்த்துக் கொண்டிருந்தாள் தேவி.

''என்ன தேவி ஏதோ கடுமையான யோசினை போல இருக்கு...'' தனது கைக்குழந்தைக்கு சோறு ஊட்டியபடியே நின்று கொண்டிருந்தாள் ராசாத்தி, ராசாத்தி—அவளுடைய மாமாவின் மகள் தான் என்றாலும் சினேகிதமாகவே பழகிக் கொள்வாள்.

''ரமேஸுக்கு ஊர்ப்பாடசாலையிலேயே 'அட்மிஷன்' எடுத்தாச்சு... இனி ஊரோடயே தங்கலாமெண்டு நினைக்கிறன் தேவி...'' மீண்டும் ராசாத்திதான் பேசினாள்.

''அதுதான் நல்லது ராசாத்தி... இனிமேல் கொழும்புப் பக்கம் தலைவைச்சுக்கூடப் படுக்கிறதில்லை எண்டு வந்த எத்தனையோ பேர் மீண்டும் அங்கை போட்டினம்...'' என்று சொன்னாள் தேவி.

அவர்களுடைய பேச்சை ஊடறுத்துக் கொண்டு தகரப்படலை திறந்தது. திருமாலின் அவதாரம் மாதிரி திறந்த

மார்புடன் உள்ளே வந்தான் ராசு. தேவி திரும்பியபோது... ராசாத்தியைக் காணவில்லை. என்ன சீக்கிரமாய் ஓடிவிட்டாள்? ராசு நிற்கும் இடத்தில் ராசாத்தி நிற்கமாட்டாள் என்று தேவிக்குத் தெரியும். அதனால் அவள் ஆச்சரியப்படவில்லை.

ராசுவும் ராசாத்தியும் ஏழு வருடங்களுக்குமுன் ஒருவரை ஒருவர் நேசித்தவர்கள். அதற்குச் சாட்சியாய் அவர்கள் கடிதங்கள் பரிமாறினதில்லை. மறைவிடங்களில் நின்று பேசிப் பழகிக் கொள்ளவில்லை. எப்படியோ ராசாத்தி வேறு இடத்தில் புகுந்து விட்டாள், அதற்காக அண்ணன் ராசு இன்றைய சினிமாக் கதாநாயகர்களைப் போல விஷத்தையோ விஸ்கியையோ நாடவில்லை. நானுண்டு, தன்னை நம்பி இரு ஜீவனுண்டு என்று அமைதியாகி விட்டான்.

ராசாத்தியின் அப்பா – அவளுடைய மாமா உயிரோடு இருந்த காலத்தில் ஊரே அந்தக் குடும்பத்தை ''தள்ளி'' வைத்திருந்தது. இதற்கு அவரது குடிப்பழக்கம் மட்டுமல்ல சிலசில நடத்தைகளும் தான் காரணம்.

தினமும் காலையில் எழுந்ததும் முதல் நாளைய சாராய நெடி மாற முன்னரே மீண்டும் குடிக்க ஆரம்பித்து விடுவார் மனைவி மக்களின் அழுகுரலோ மருத்துவர்களின் அறிவுரைகளோ அவரை அசைத்து விடவில்லை. ஒரு குடிகாரனின் குடும்பம் எப்படியெல்லாம் சீரழியும் என்பதற்கு அத்தாட்சியாய் விளங்கியது அவர் குடும்பம்.

ராசாத்தி மூத்தவள். அவளுக்குப் பின்னே மூன்றும் பெடியன்கள். ''இனிமேல் தலையெடுக்காது என்று அனைவராலும் ஒதுக்கப்பட்ட குடும்பம், மூன்று பெடியன்களின் உழைப்பால் தளிர்விடத் தொடங்கியது. மாமாவினால் ஏற்படுத்தப்பட்ட பழிக் கிடங்குகள் பணத்தால் பூசி மொழுகப்பட்டன. புதிசு புதிசாக உறவினர்கள் சேர்ந்து கொள்ள ராசாத்தியின் திருமணமும் நடந்து முடிந்தது.

வெயில் நகர நகர மிளகாய்ப் பழங்களையும் நகர்த்தி விட்டுக் கொண்டிருந்தாள் தேவி, இன்னும் சில நாட்கள் வெயிலில் போட்டால் தான் முழுமையான செத்தலாகும்.

''நான் மாட்டுக்குப் புல்லுப் பிடுங்க போறன் தேவி... நேரம் போனால் விளக்கைக் கொளுத்து...'' என்றபடியே தாய் வெளியே போனாள். தாயும் வெளியே போன பிறகு தனிமை அவளைச் சூழ்ந்து கொள்ள பார்வையைச் சுழற்றினாள் அவள். சுவரில் அவள் தந்தையின் படம் தொங்கிக் கொண்டிருந்தது.

உலகத்தில் நல்லவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் பேதங்காண இந்த மரண தேவனால் முடிவதில்லைப் போலும்! அதனால் தான் அவரை அழைத்துப் போய்விட்டான். அப்பாவைப் போலவே ராசு, அதே நிறம், அதே குணம்.

அவளுடைய தாய் அவளை ஆசிரியையாக்க வேண்டும் என்ற ஆசையில் இருந்தாள். அந்த ஆசையை நிறைவேற்றும் ஆர்வத்தோடு தான் தேவியும் படித்தாள்.

''இந்தக் காலத்திலை என்னைப் போன்ற சாதாரணமானவர்கள் பொம்பிளைப் பிள்ளையளைப் படிக்க வைக்கக் கூடாதம்மா... பிறகு உங்கட படிப்புக்கும் தகுதிக்கும் ஏற்ற துணையைத் தேடித்தர என்னாலை ஏலாது... பொம்பிளைப் பிள்ளையளைப் படிக்க வைச்ச எத்தனையோ பெற்றோர் இண்டைக்குக் கையைப் பிசைந்து கொண்டிருக்கினம்...''

ஒருநாள் தகப்பன் விரக்தியோடும் வேதனையோடும் கூறிய போது... அவருடைய நிலையைப் புரிந்து கொண்டு தன் ஆர்வத்தைக் குறைத்துக் கொண்டாள். தாய்க்குக் கொஞ்சம் மனவருத்தம்தான். ஆனால் அவள் சிறிதும் கலங்கவேயில்லை.

தாய் திரும்பிவந்து குரல் கொடுத்தபோதுதான் எவ்வளவு நேரமாக இந்த உலகத்தை மறந்திருந்தோம் என்று புரிந்தது தேவிக்கு.

ராசுவுக்கு சாப்பாடு போட்டுவிட்டு அம்மா சொன்னாள்: ''போன தைக்கு மேய வேண்டிய வீடு... இப்ப ஆவணியும் வந்திட்டுது... கூரையிலை வெறும் ஈர்க்குத்தான் கிடக்குது! தம்பி... மழை வந்தால் நல்லாத்தான் இருக்கும்...''

அவன் பதிலேதும் சொல்லாமல் கூரையை அண்ணாந்து பார்த்தான். பிறகு அமைதியாகச் சாப்பிட்டுவிட்டு வெளியே சென்று கைகழுவினான். அவனுடைய முகத்தைப் பார்த்து ஒரு போதும் அவனை எடை போட்டுவிட முடியாது.

ராசு ''பேப்பர்'' படிப்பதற்காக வாசிகசாலைக்குப் புறப் பட்டான். இவன் குடும்பத்துக்காக என்னமாய் உருகுகிறான்? தேவி பெருமூச்செறிந்தாள்.

''உன்னை ஒருத்தன்ர கையிலை பிடிச்சுக் குடுத்திட்டால் நான் நிம்மதியாய்க் கண்ணை மூடிப் போடுவன் தேவி...'' அவளுடைய தாய் முணுமுணுத்தபடியே நிலத்தில் சுவரோடு சாய்ந்திருந்து வெற்றிலை தின்று கொண்டிருந்தாள்.

இந்தத் தாய்மாரே இப்படித்தான். பொம்பிளைப்பிள்ளை யள் பிறந்த மறுகணமே ஒருவனிடம் ''பிடிச்சுக்'' கொடுத் திட வேணும் என்று சீவனைவிடத் தொடங்கி விடுவினம், தங்கட பிள்ளையளை ஆக்கபூர்வமான முறையிலை வளர்த்து இந்தச் சமூகத்துக்கு நல்ல திடகாத்திரமான வாரிசுகளை உருவாக்கித் தர வேண்டும் என்கிற சிந்தனை துளிகூட இல்லை இவர்களுக்கு.

அப்படியென்றால் பக்கத்து வீட்டுக்காரி தன் பிள்ளைக்கு ஒரு பவுண் தோடு போட்டால் உடனே தாம் இரண்டு பவுணில் போட்டுவிட வேணும் என்று மட்டும் தலைகீழாக நிற் பினம் இன்றைக்கு எத்தனையோ குடும்பங்கள் சீரழியிறதுக்கு இப்படிப்பட்ட போலியான மனப்பான்மைகள் தான் காரண மாக இருக்கின்றன.

இருட்டில் பார்வையால் துளாவிப் பார்த்தாள் தேவி. ஓலைப்பாயில் தாய் ஒருக்களித்துப் படுத்திருந்தாள். அவளு

டைய உருவம் இருளில் மங்கலாகத் தெரிந்தது. சீரான குறட்டை ஒலி மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. தாயின் சீலை ஒன்றினுல் போர்த்துக் கொண்டு கண்களை மூடினுள் தேவி. தாயின் சேலையால் போர்த்துக் கொண்டு தூங்கும்போது தாயின் அரவணைப்பில் தூங்குவது போன்றே இதமாக இருக்கும் அவளுக்கு.

வழமையைப் போலவே பொழுது விடிந்தது. அப்படியே நேரமும் நகர்ந்தது. வெய்யில் ''பளிச்'' சென்றிருந்தது. வெள்ளை வெளேரென்ற வேட்டி சட்டையுடன் சற்றும் எதிர் பாராமல் உள்ளே வந்தார் கார்த்திகேசு. பெயர் பெற்ற கல்யாணத் தரகர் அவர். அவர் நினைத்தால் எந்தத் திரு மணமும் நடந்தே தீரும். அவ்வளவுக்குத் தன் தொழிலில் அனுபவ முதிர்ச்சி கொண்டவர் அவர்.

''வாங்கண்ணை... கடவுள் இப்பதான் கண் முழிச்சிருக்கிறுன்... அதனுல்தான் உங்களை இங்க அனுப்பியிருக்கிறுன்...'' என்றுள் அம்மா. அவளுடைய ஏக்கத்தைவிட்டு வேதனையாகவும் மறுபுறம் எரிச்சலாகவும் இருந்தது தேவிக்கு.

கார்த்திகேசு நேரடியாகவே விஷயத்தில் இறங்கினுர். ''இங்க பார் செல்லம்... தேவிக்கு ஒரு அருமையான இடம் வந்திருக்கு... மாப்பிள்ளை சொந்தமாக ரண்டு இரும்புக்கடை வச்சிருக்கிறுர்... சீதனம்கூட அவர் ஒரு சதமும் எதிர்பார்க்கேல்ல... கல்யாணச் செலவுகூட அவரே ஏற்றுக் கொள்ளுகிறுர்... இந்த இடத்தை விட்டா இது மாதிரி இன்னெரு இடம் வாறது ரொம்பக் கஷ்டம்... ஏதோ யோசிச்சு முடிவு சொல்லுங்கோ...''

அம்மாவுக்கு ஏதேதோ சந்தேகங்கள் போலும்... நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் அவருக்கு...'' அம்மா முடிக்க முன்னரே அவர் மிகுதியைப் புரிந்துகொண்டு விட்டார். அப்படியான தொழில் அவருடைய தொழில்.

''அப்பிடி உனக்கு வீண் சந்தேகம் வேண்டாம்... இப்பவே ஆளை நேரே பார்த்து விடலாம்... தினமும் இந்த ''ரோட்''டாலதான் கடைக்குப் போறவர்...'' என்றார்.

''எதற்கும் ராசு வரட்டும்... அவன்ர முடிவையும் கேட்பம்...'' என்றாள் தேவியின் அம்மா. தேவி எதுவுமே பேசவில்லை.

''இந்த விஷயத்திலை உன்ரை ராசுவின்ரைமுடிவோ அவசியமில்லைச் செல்லம்... தேவிதான் வாழப் போறவள்... அவள் தான்சொல்ல வேணும்...மாப்பிள்ளைக்கு தாய் வயதானவர்... கண்கள் பார்வையை இழந்து விட்டன... அவருடைய சகோதரி ஒருவர் புத்தி சுவாதீனமற்றவர்... அந்த இருவருக்குமாகத்தான் திருமணம் என்பதையே நினைத்துப் பார்க்காமல் இருந்தார் அவர்.

''ஆனா அவருக்கு மனைவியாக வாற ஒருத்தி அந்த இருவரையும் சுமந்து கொள்ளும் மனப் பக்குவமானவளாக இருந்தால் சரிதானே...! இதற்கு எங்க தேவியைவிட பொருத்தமான ஒரு ஆள் கிடையாது... அதனால்தான் நேரே இங்கே வந்திருக்கிறன்...'' கார்த்திகேசு சொன்னார்.

தாயின் முகம் திடுதிப்பென மாற்றம் கண்டது...

''அண்ணை! நீங்கள் முதலில் சொல்லும்போதே இதிலை ஏதோ விஷயமிருக்கு எண்டு எனக்குத் தெரியும். இப்பிடி ஒரு சுமையை நான்கூட என்ரை வாழ்க்கையிலை எதிர் நோக்கேல்லை... தேவி இப்பிடியே இருந்துவிட்டுப் போகட்டும்... தயவுசெய்து இந்தக்கலியாணத்தை மறந்திடுங்கோ...'' அம்மா சொல்லிவிட்டுக் கண்களைக் கசக்கினாள். கார்த்திகேசு எந்தவித அசைவுமின்றி அமைதியாக இன்னமும் இருந்தார்.

தேவி சிந்தித்தாள். அவளுக்காகவே நாற்பது வயதாகியும் தனக்கென்று ஒரு வாழ்க்கையை தேடாத தமயன் ராசு, வாழ்க்கையில் முக்கால் நூற்றாண்டைத் தொட்டுக் கொண்டிருக்கும் தாயின் ஏங்கும் இதயம். இவற்றுக்குக் காரணம் அவளுடைய 'கரையேறாத' வாழ்க்கைதானே!

''நான் கைநிறையச் சம்பாதிக்கிறேன்... இந்த சமூகத்தில் என்னுல் தனித்து வாழமுடியும்... என்னுடைய பணத்தைக் கொடுத்து என்னை அதிகாரம் பண்ணும் ஒருவனைத் தேர்ந்தெடுக்க எனக்கு அவசியமில்லை...'' என்று அண்மையில் பலர் முன்னிலையில் சீறினுளே வத்சலா அவளை மாதிரி தேவியினுல் திருமணத்தை நிராகரித்துவிட முடியுமா?

''அம்மா! நான் இந்தக் கல்யாணத்தை மனப்பூர்வமாக எற்றுக் கொள்ளுறன்...'' என்ருள் தேவி அமைதியாக.

''என்ன... என்ன உளறுருய்...?'' எதற்கும் மறு வார்த்தை பேசியறியாத தன் பெண் இப்படிச் சொல்லுருளே என்கிற பதற்றத்துடன் அம்மா கேட்டாள்.

''அம்மா! ஒரு தாயையும் சகோதரியையும் பராமரிக்கிறதை நான் நிஜமாகவே விரும்புறன்... இன்றைக்கு அந்தக் குடும்பத்தை நான் பெருமையோடு ஏற்றுக் கொண்டால்... நாளைக்கு உனக்கு மருமகளா வரப்போறவள் உன்னுடைய குடும்பத்தை முக மலர்ச்சியோடு ஏற்றுக்கொள்ள முடியும்.. இந்த வாழ்க்கையை நான் ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு வேண்டுமாஞல் வாழ்ந்து காட்டுறன்... பிளீஸ்... அம்மா... என்னைத் தடுக்காதே...'' தேவி நிதானத்துடன் முடித்தாள்.

எதுவுமே பேசமுடியாது .. மன உணர்ச்சியை வார்த்தைகளில் வடிக்கத் தெம்பில்லாமல் மௌனமாக இருந்தாள் அந்தத் தாய். அந்தத் தாயின் மௌனத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, ''நாளைக்கு நாள் குறித்துக் கொண்டு வாறன்...'' என்றபடி இருக்கையை விட்டு எழும்பினுர் ''புரோக்கர்'' கார்த்திகேசு.

அவரை மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தாள் தேவி. அவளுடைய மனத்தில் ஏற்பட்டுப்போன சாதனை உணர்ச்சி மனதை உற்சாகமாகத் தோற்றம் காட்டியது. மட்டில்லாத அந்த மகிழ்வில் தனக்கொரு பத்து வயது குறைந்தது மாதிரி உணர்ந்தாள் தேவி.

சோகத்தால் இருளடைந்து போயிருந்த ஒரு இளைஞனின் இதயத்தில் நிலவாகப் பிரசவித்து, வாழ்க்கைப் பாதையில் ஒளியை வழங்க அவள் இதயம் துடித்துக் கொண்டிருந்தது.

# நாணலும் நிமிரும்

அலுப்புத் தீரக் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு வந்த சொக்கநாதன் ஓரிரு நிமிடங்களில் பூசையறையில் தியானத்தை முடித்துக் கொண்டார். வீபூதியை நெற்றி முழுவதும் பூசிக் கொண்டபோது ''சிவ... சிவ...'' என்று அவருடைய வாய் சிவநாமத்தை முணுமுணுத்துக் கொண்டது.

அவர் வெளியே வந்தபோது மேசையில் விரித்தபடி கிடந்த தினசரியில் அவரது பார்வைபட்டது. இரவு முழுவதும் தொடர்ச்சியாகக் கேட்ட குண்டுச் சத்தங்கள் நினைவில் வர... பத்திரிகையைக் கையிலெடுத்துக் கொண்டார் அவர். சமரின் விளைவுகளை அறிந்துவிட அவர் மனம் அந்தரப்பட்டது.

பேப்பரைப் படித்த பிறகுதான் நகரத்திலுள்ள தனது புடவைக்கடையை இன்று திறப்பதா இல்லையா என்று அவரால் தீர்மானிக்க முடியும். இதற்கு முன்னரும் பல தடவைகள் நகரத்தில் தாக்குதல்கள் நடைபெற்றன எனினும், அவருடைய கடை அவ்வளவாகப் பாதிப்படையவில்லை. என்றாலும் தற்காப்பு நடவடிக்கையாக கடையிலிருந்த புட

வைகளையும் துணிவகைகளையும் இருவாரங்களுக்கு முன்பாகவே லொறிமூலம் கொண்டுவந்து விட்டிருந்தார் சொக்கநாதன்.

''இனியெண்டாலும் இங்கினேக்குள்ளை ஒரு கடையைக் கட்டிப்போட்டு உதுகளை வில்லுங்கோ... அங்கை இனிப்போய் வாறது பெரிய கஷ்டமப்பா... அவங்க நினைச்ச நினைச்ச வுடனை 'செல்' அடிப்பாங்கள்...'' அவருடைய மனைவி செல்லம் எத்தனையோ தடவை இப்படி ஆலோசனை கூறிவிட்டாள். அப்போதெல்லாம் மௌனமாக இருந்தவர், இப்போது அவளுடைய சொல்லைக் கூடிய விரைவில் நிறைவேற்றிவிட வேண்டும் என்று எண்ணிக் கொண்டார்.

''பேப்பர் கையிலை எடுத்தியளெண்டால் இனிப் பக்கத்திலை குண்டு விழுந்து வெடிச்சாலும் உங்களுக்குக் காது கேளாது...'' தேனீரை அவருடைய காலடியில் வைத்தாள் மனைவி செல்லம். அவளுடைய முணுமுணுப்பைப் பொருட்படுத்தாது தொடர்ந்து செய்தியில் ஒன்றிப் போயிருந்தார் சொக்கநாதன்.

''என்னவாமப்பா ராத்திரி நடந்தது...? ஒவ்வொரு குண்டும் நெஞ்சுக்குள்ளை வெடிச்ச மாதிரியெல்லே கிடந்தது... உந்தச் சத்தங்களாலை... ஆயுள் குறுகி அரை வயதிலேயே அரைவாசிச்சனம் செத்துப் போகும் என்னப்பா...?'' அவள் அவரிடம் கேட்டாள்.

''ம்... எங்கடை பெடியள் இரவிலை நித்திரையாப் போயிடுவாங்களோ எண்டு அவங்களுக்கு சந்தேகம் வாறது போலை... அதுதான் ராத்திரியும் தலையை நீட்டிப் பார்த்திருக்கினம்... நல்லாத்தான் குடுத்திருக்கிறுங்கள் எங்கட பிள்ளையள்... தப்பினம் பிழைச்சமெண்டு மரதன் ஓட்டம் ஓடினுங்களாம்...'' சொக்கநாதன் பேப்பரைப் பார்த்தபடியே சொன்னுர்.

''அவங்களும் பாவந்தானேயப்பா... எத்தனை வருஷமா உந்தக் கோட்டைக்குள்ளை சீவியம் விடுறது...? யந்திரம்

மாதிரி... சாப்பிடுறதும் படுக்கிறதுமா...? நல்ல சுத்தமான காத்துக்கூட அவங்களுக்குப் படுறேல்லை...'' செல்லம் வேதனையோடு சொன்னாள்.

''இப்ப ஆர் அவையளை வரவேண்டாமெண்டது...? ஏலுமெண்டா வந்து வடிவா ஊருக்குள்ளை உலாவட்டுமன்...'' நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு பெருமையோடு கூறினார் அவர்.

ம்ஹூ... ஏதோ சென்றிக்கு நிற்கிற ஆள்மாதிரி வீரம் கதைக்கிற ஆளைப்பாரன்'' செல்லம் அவரைக் கேலி பண்ணினாள்.

''இந்த ஊரிலை கேட்டுப்பார்... அந்தக் காலத்திலை ஒருதன் என்னோடை சண்டைக்கு வருவானோ எண்டு... இப்ப என்ன செய்யிறது...? வயதுபோட்டுதல்லே...?

இவருடைய உரையாடலையும் ஊடறுத்துக் கொண்டு ''அண்ணை...'' என்ற குரல் கேட்க... இருவரும் திரும்பினார்கள்.

''வா தங்கச்சி... வா...'' இருந்த இடத்திலிருந்தபடியே அன்னம்மாவை வரவேற்றார் சொக்கநாதன். ''இவள் என்ன கேட்க வந்திருக்கிறாளோ...'' என்ற ஏக்கத்தில் பேசாமலிருந்தாள் செல்லம்.

''சொக்கநாதனுக்கும் தனக்கும் பொருளாதார ரீதியில் இருக்கும் ஏற்ற இறக்கத்தைப் புரிந்து கொண்டவள் மாதிரி நிலத்தில் அமர்ந்து கொண்டாள் அன்னம்மா.

வறுமை, கஷ்டம் என்று எல்லாவற்றிலும் போராடியதால் வாடி உருக்குலைந்து சுருங்கிப்போன தசைகளினூடு வெளித்தள்ளிய எலும்புகளுடன் ஒல்லியாய் அவள் அமர்ந்திருப்பது சொக்கநாதனுக்கு உள்ளூர வருத்தமாக இருந்தது.

பெண்கள் தமது உரிமைகளை நிலைநாட்ட ஆலாய்ப் பறக்கிற இந்தக் காலத்திலும்... தன் முன்னோர்களின் பாரம்

பரியத்தைக் காப்பாற்றவேணும் என்ற குலையாத உறுதியால் இன்றுவரையும் பொட்டில்லாமல், பூவில்லாமல்... வெள்ளைச் சேலையோடு அமர்ந்திருக்கும் அவளைப் பார்க்க நெஞ்சுக்குள் துயரம் கொப்புளித்து நரம்புகளில் செறிந்தது. அவளுடைய கஷ்டங்களைப் போக்க ஏதாவது செய்யவேண்டும் என்று அவர் நினைத்தாலும், செல்லத்தின் குணம் தெரிந்து பேசாமடந்தையாகவே இருந்து வருகிறார் அவர்.

''என்ன அன்னம்மா பேசாமல் இருக்கிறாய்...?'' அவர் தான் மௌனத்தைக் கலைத்தார். அவள் எதற்காக வந்திருக்கிறாள் என்பதை அறிந்துவிடத் துடிக்கும் ஆர்வத்துடன் அமைந்திருந்தது அந்தக் கேள்வி.

''என்ரை மூத்தவள் வசந்தியின்ரை விஷயமாகக் கதைப்பமெண்டுதான் வந்தநான் அண்ணை... நீங்கள் ஏதோ மனஞ் சரியில்லாத மாதிரி இருக்கிறியள்...'' அன்னம்மா தயங்கிய போது, செல்லம் யுத்தம் ஒன்றுக்கு தயாராவதுபோல நிமிர்ந்து அமர்ந்தாள்.

எதுபற்றி அன்னம்மா கதை எடுக்கக் கூடாதென்று அவர் மனதுக்குள் வேண்டிக் கொண்டிருந்தாரோ... அது பற்றியே அவள் பேச்சு எடுத்ததும் ஒரேயடியாய்ச் சோர்ந்து போனார் சொக்கநாதன்.

''வசந்திக்குப் பிறகும் ரண்டு பொட்டையள் குமரா விட்டுதுகள்... அடுத்ததும் இண்டைக்கோ நாளைக்கோ எண்டு வெருட்டுது... என்ரை அற்ப சொற்ப நம்பிக்கையையும் சிறகடிச்சுப்போட்டு குமாரும் அவங்களோடை போட்டான்... இனியும் நான் வசந்தியை வைச்சுக் கொண்டிருக்கிறது அவ்வளவு நல்லதில்லை அண்ணை... அதுதான்...''

இதுவரை பொறுமையாயிருந்த செல்லம் விமானத்திலிருந்து விழுந்த குண்டுபோல் வெடித்துச் சிதறினாள். ''அது தான் உங்களுக்கு எப்பவோ சொல்லியாச்சுதே... நாங்கள் ஒரேயொரு ஆம்பிளைப் பிள்ளையை வைச்சிருக்கிறம்... அவன்

நாலு சொல்லுப் படிச்சு, தன்னைப்போல நாலுபேரோடை பழகிறவன்... அவனுக்கும் உவள் வசந்திக்கும் சரிவராது... அவன்ர தகுதிக்கேற்ற பொம்பிளையைத்தான் எடுக்க வேணும்... இச்சொற்களைக் கேட்டு முன்பென்றால் அன்னம்மா கலங்கிப்போயிருப்பாள்... ஆனால் இப்போது அவளுடைய மனதில் ஆத்திரத்துக்குப் பதில் ஆழமான நிதானமே குடிகொண்டிருந்தது.

''உங்கட மருமகளா வாறதுக்கு அவளுக்குத் தகுதி இல்லைத்தான் மச்சாள்... அதாலை அவளுக்குத் தகுதியான வேற ஒரு இடத்தைத் தெரிவு செய்திருக்கிறன்... அதைச் சொல்லிப்போட்டுப்போவம் எண்டுதான் வந்தனான்...''

செல்லம் ஒருகணம் வாயடைத்துப்போய் நின்றாள். சொக்கநாதன் இன்னமும் தலையே நிமிரவில்லை. அவருக்கு வசந்தியை மருமகளாக எடுக்க ஆசை தான் ஆனால் செல்லம் தீவிரமாக எதிர்த்து வந்தாள். ''வெறும்'' பொம்பிளை எடுக்க அவளுக்கு விருப்பமில்லையாம்.

அன்னம்மாவின் புருஷன் ஆளும்பேருமாய் கைநிறையச் சம்பாதித்துக் கொண்டிருந்தபோது... வசந்தியை ஆசையோடு மருமகள் என்று உரிமை பாராட்டியது மட்டுமன்றி... அவளுடைய மனதிலும் ஒருவித எதிர்பார்ப்பை ஏற்படுத்தி விட்டு .. திடீரென்று .. பத்து லட்சம் பெறுமதியான பொருட்களைக் கொழும்பிலிருந்து ஏற்றிக்கொண்டு வந்த அன்னம்மாவின் புருஷன்... இரக்கமில்லாத அரக்கர்களால் வவுனியாவில் வைத்து லொறியோடு சேர்த்துக் கொளுத்தப்பட்டவுடன் . அன்னம்மாவும் பிள்ளைகளும் நொந்தநிலைக்குத் தள்ளப்பட... மெல்ல மெல்ல அந்தக் குடும்பத்தை ஒதுக்கி வைத்து விட்டாள் செல்லம்.

''அப்பாவைக் கொன்றவர்களை அடியோடு அழித்து விடுகிறேன் என்று வீர முழக்கமிட்டுக் கொண்டு... நரகாசுரனை அழிக்கப்புறப்பட்ட பாலனைப் .. அன்னம்மாவின் கடைக்குட்டி குமாரும் போய்விட்டான்.

செல்லத்துக்கு எதிராகத்தன் மகனுவது வாதாடி வசந் தியை மனைவியாக்குவான் என்று மனதைத்தேற்றிக் கொண் டிருந்த சொக்கநாதனுக்கு மகனும் தாய் பக்கம் சாய்ந்து விட்டதில் பெரும் ஏமாற்றம்தான்.

''ஒண்டுமில்லாட்டி என்ன செல்லம் ?... எங்களிட்டை இருக்கிறதெல்லாம் அவனுக்குத்தானே... அன்னம்மாவின்ர பெட்டைக்கே செய்தாலென்ன?... தன்னுடைய விருப்பத்தை ஒரு தடவை அவர் வெளியிட்டபோது...

''அப்பிடி ஒரு எண்ணம் உங்களுக்கு இருக்குமெண் டால்... நான் என்ர முடிவைப் பார்த்துக் கொள்ளுறன்...'' ஆணித்தரமாக செல்லம் சொல்லிவிட்டாள். அன்றிலிருந்து மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார் சொக்கநாதன்.

அவளுக்கும் தனக்கும் இடையேயான உறவு இத்தோடு முற்றுப் பெற்றுவிடுமோ என்று அச்சமாக இருந்தது அவ ருக்கு.

''எண்ணண்ணை... ஒண்டும் பேசாமலிருக்கிறியள்... அன்னம்மா கேட்டதும் சுய உணர்வுக்கு வந்தார் அவர்.

''ஆங்... அப்பா... அப்ப .. மாப்பிள்ளை எங்க அன்னம்மா? அவளது முகத்தைப் பார்க்கவே கூசியவராய்க் கேட்டார்.

''அப்படி ஒரு தூர இடமுமில்லையண்ணை... உங்களுக்குத் துரையனைத் தெரியுமெல்லே.. துரையன்ரை மூத்த மகன் தான்... அவனைப் போல ஒரு மருமகனை எடுக்க நான் குடுத்து வைச்சிருக்க வேணும் ..

எடி அன்னம்மா... நீ என்ன சொல்லுறுய்? அவன் துரையன் ஆரெண்டு உனக்குத் தெரியாதே... போயும் போயும்...ம் நாளைக்கு எங்கடை இனசனம் உன்னை ஒதுக்கி யெல்லே வைக்கப் போகுது... அன்னம்மாவைப் பார்த்து பெருங்குரலில் கத்தினுர் அவர்.

அன்னம்மா நிதானமாகச் சொன்னுள்... இப்ப எனக்கோ என்ர பிள்ளையளுக்கோ சாதியைப் பற்றி ஒண்டும் அக்கறையில்லை... கடைசிக்காலம் வரைக்கும் என்ர பிள்ளையைக் கண்கலங்காம காப்பாற்றக் கூடியவனைத்தான் நான் மருமகனு எதிர்பார்க்கிறன்... அவன் எந்தச் சாதியெண்டா எனக்கென்ன...? நாங்கள் சாதி பாத்துச் சமயம் பாத்து என்னத்தைக் கண்டம்...? நல்ல சாதியெண்டும் உயர்ந்தவை எண்டும் சொல்லிக் கொண்டு வாழுற எத்தினையோ பேர்... சமூகத்திலை 'ஒசி'ச்சீவியம் நடத்துற போலிகள் எண்டதை நான் இப்ப புரிஞ்சிட்டன்...''

''நீங்கள்கூட கொள்ளைக்காறன் மாதிரிச் சீதனத்தை எதிர்பார்க்கிறியள். இன்னும் சிலர் எங்கட பூர்வீக உறவுகளையெல்லாம் அக்குவேறு ஆணிவேருக ஆராய்ச்சி செய்யினம். ஆறுத் துரையன்ரை மகன்... எனக்கு வெறும் பொம்பிளை மட்டும் போதும் என்கிறுன். அவனுக்கே வசந்தியைக் கட்டி வைக்கிறதாக வாக்குக் குடுத்திருக்கிறன். அதுமட்டுமில்லையண்ணை, மற்றப் பிள்ளையளுக்கும் இப்பிடித்தான் செய்வன்.''

சொக்கநாதனும் செல்லமும் வாயடைத்துப் போய் நின்றுர்கள். தொடர்ந்து பேசியதும் மனதிலிருந்த ஆவேசத்தைக் கக்கிவிட்டதாலும் அன்னம்மாவின் மனம் பஞ்சு போல மிதந்தது. அவர்களுடைய பதிலை எதிர்பார்க்காமல் அவ்விடத்தைவிட்டு வெளியேறினுள் அன்னம்மா.

(அமிர்த கங்கை, வைகாசி **1987**)

---

சுதந்திரமென்பது மனிதனின் பிறப்புரிமை. சுகத்திற்காகவோ, சோற்றுக்காகவோ சுதந்திரத்தை விற்பவன் மக்களால் மனிதனுக மதிக்கப்படுவதில்லை.

---

# இலட்சியத் துணை!

இன்னமும் வெயில் நன்ருக வரவில்லை. ஆனுலும் ஈரத் துணிகளைக் கொடியில் உலரப் போட்டுவிட்டு உள்ளே வருகிறேன்.

நிதானமாக எரிந்து கொண்டிருக்கும் கைவிளக்கின் ஒளியில் மூலையில் முடங்கிக் கிடக்கும் அம்மாவின் உருவம் தெரிந்தது. மோவாயும் முழங்கால்களும் முட்டிக்கொள்ள அவள் படுத்திருக்கும் காட்சி என் நெஞ்சை எதுவோ செய்கிறது.

அம்மாவிடமிருந்து வரும் பெரிதான முனகல். அம்மா குளிசையையும் தண்ணீரையும் எடுத்துக் கொண்டுபோய் அவளை எழுப்புகிறேன். குளிசையை விழுங்கிவிட்டு மீண்டும் அவள் விழுந்து படுத்துக் கொள்கிருள்.

அம்மா இப்படி முடங்கிக் கிடப்பதற்கு நோய் ஒரு காரணமாக இருந்தாலும், அவளுக்குப் பின்னே மறைந்திருக்கும் பின்னணியை ஒரு கணம் நெஞ்சில் படர விடுகியேன்.

கொண்டவனின் கொடுமைகளுக்கும் கூடிப்பிறந்தவர்களின் கேலிகளுக்கும் நடுவே போராடி, மூன்று பிள்ளைகளை

எவ்வளவு நம்பிக்கையோடு வளர்த்தாள், முடிவிலே முதலி ரண்டு பிள்ளைகளும் அவளை உதறிவிட்டு உல்லாசம் தேடிப் போய்விட்டார்கள்.

காதலித்தவளைக் கைவிடக்கூடாது என்று நினைத்தார் களே தவிர, இத்தனை காலம் வளர்த்த அம்மாவுக்குத் துரோகம் செய்யக்கூடாது என்று நினைத்தார்களா...? ஒருத் தியின் வயிற்றெரிச்சலில் இன்னொருத்திக்கு வாழ்வு கொடுக் கப் போய்விட்டார்கள். என்ன மனிதர்கள் இவர்கள்?...

இவர்கள் மட்டுமா? நானும்தான். ''பெண்பிள்ளை பிழை விடாது'' என்று நம்பி அம்மா என்னையும் படிப்பித் தாள், படித்துப் பட்டதாரியாக வேண்டிய நான் பாதியி லேயே பாதை மாறியது என்னுடைய தலைவிதிதான்!

நிதர்சனமான உலகத்தில் பற்றிழந்து கற்பனையில் தனக் கென்று ஒரு உலகத்தைச் சிருஷ்டித்து வாழும் நந்தனிடம் நான் மயங்கியது, பழையகதை. அந்த மயக்கத்திலிருந்து நான் விடுபட்டு இன்றோடு எத்தனையோ நாட்களாகிவிட் டன.

நந்தன் என்றதும் நெஞ்சில் பசுமையாகப் புரளும் நினை வலைகள்... நானும் நந்தனும் ஒரே வகுப்பில் படித்துக் கொண்டிருந்தோம்.

வீட்டு வேலை செய்து கொண்டுவராமல் தினமும் வாத் தியாரிடம் அடி வாங்கிக் கொண்டு வகுப்புக்கு வெளியே துரத்தப்படும் நந்தன், வளர்ந்து .. பெரியவனாகி... பத்திரி கைகளிலும், வானொலியிலும் கவிதைகள், கட்டுரைகள் என்று தனது திறமை முத்திரைகளைப் பதித்துக் கொண் டிருந்தார்.

அப்போது என் அண்ணன்கள் இருவரும் பெரிய உத்தி யோகத்தில் இருந்தார்கள். என்னோடு படித்த ''பிரண்ட்ஸ்'' எல்லாரும் பொழுதுபோக்குக்காகவும், அற்ப ஆசைகளுக்காக வும் காதல்வலை வீசத் தொடங்கினார்கள். வெளிறின ''ஜீன்

சும்'' வெள்ளைச் சுருட்டாக வீதியளந்து கொண்டிருந்த சில ஆண்கள் அந்த வலையில் விழுந்தார்கள். பஸ் பிரயாணத்தில் பேச்சுத் துணைக்காகக் கூடக் காதலித்தவர்கள் பலர்.

ஆனால் நானோ...? என் உள்ளத்தைப் புரிந்துகொண்டு உண்மையாக என்னை நேசிக்கக்கூடிய ஒருவனுக்காகக் காத்திருந்தேன்.

கல்லூரி மாணவ மன்றத்தின் ''பிரசிடென்டா''க நந்தன் தெரிவு செய்யப்பட்டபோது... நந்தனுக்கு வாக்களித்த மாணவிகளின் எண்ணிக்கையைக் கண்டு என்னுள் ஒரு பொறாமைத்தீ புகைந்தது. அதன் விளைவாக எழுந்த கருத்து மோதலில் நந்தன் மீது எனக்கு ஒரு பாசம் பிறந்தது. நாளடைவில் அது காதலாகி... நான் எனது காதலை அவரிடம் வெளியிட்டபோது......

''சுதா! உன்னுடைய வாழ்க்கைக்கு அத்திவாரமாகப் பல லட்சங்கள் இருக்கின்றன. ஆனால் எனக்கென்று இருப்பது ஒரு சில இலட்சியங்கள் மட்டுந்தான்... என்னுடைய வாழ்க்கையையே எப்படி நடத்தப்போகிறேனோ என்று நான் திண்டாடுகிறேன்... என்னைக் காதலித்து நீ என்ன சுகத்தைக் காணப்போகிறாய்...?'' வேடிக்கையாகவும் வேதனையாகவும் அவர் சொன்னார்.

''சுகம் என்பது காசு பணத்தில் இல்லை நந்தன். உங்களுடைய தூய்மையான இலட்சியங்களுக்குத் துணையாக வாழ்ந்து அதில் சுகங் காணப் போகிறேன்...'' என்னுடைய பேச்சில் நந்தன் திக்குமுக்காடி விட்டார் போலும்! சுதா... சுதா...''என்று அரற்றி என் கரங்களை பற்றிக் கொண்டார்.

எங்கள் காதல் சந்தோஷம் என்கிற சத்துணவையே தின்று கொண்டிருந்ததால் வேகமாக வளர்ந்தது. எங்கள் காதலைக் கண்டு ''பிரண்ட்ஸ்'' எல்லாரும் வாயைப் பிளந்தார்கள்.

இடையே அண்ணன்மார்களின் திருவிளையாடல்கள் ஊர் மேடைகளில் அரங்கேறத் தொடங்கின. அப்பா அவர்

களைத் தட்டிக் கேட்கப்போய் அனுவசியமாகத் தலையைக் குனிந்து கொண்டு... அந்த உதாசீனத்தால் ஏற்பட்ட ''டென்ஷ''னில் திடீர் நோயாளியாகி... ஆஸ்பத்திரியும் வீடுமாக நாங்கள் ஒரு மாதம் அலைந்ததுதான் மிச்சம்... உற்றவர் உறவினர் எல்லாரும் கட்டிலருகே கண் விழித்துக் காவல் இருக்க அப்பா தன் கண்களை மூடிக் கொண்டார்.

அம்மாவில் எத்தனையோ சம்பிரதாய மாற்றங்கள். சம்பிரதாய மாற்றங்கள் என்று சொல்லுவதைவிட சமூக அடக்குமுறைகள் என்பதுதான் ரொம்பவும் பொருந்தும்...

அப்பாவுக்காக அவள் தாலியை மட்டும் கழற்றிவிடவில்லை. தன்னுடைய கலகலப்பு, சந்தோஷம், புன்னகை எல்லாவற்றையுமே கழற்றிவிட்டுச் சோகத்தைச் சூடிக் கொண்டாள்.

அப்பா சேர்த்து வைத்த சொத்து கெஞ்சம் கொஞ்சமாகக் கரைந்தது. அம்மா அஸ்மாவுக்கு ஆளானுள். இந்த நிலையிலும் கூட நந்தனின் அன்பும் அரவணைப்பும் தான் என்னை உற்சாகப்படுத்தின.

திடீரென்று ஒரு நாள்... வழமைக்கு மாருன இனம் கண்டு கொள்ள முடியாத அவசரத்துடன் நந்தன் என்னைக் காணவந்தார்.

கண்டிப் பாடசாலை ஒன்றில் தனக்கு ஆசிரிய நியமனம் கிடைத்திருப்பதாகக் அவர் கூறிய போது நான் ரொம்பவும் தான் பரவசப்பட்டுப் போனேன். என்னைப் பிரிய மனமில்லாது நந்தன் தயங்கியபோது, ஆறுதல்கூறி நான் விடை கொடுத்தபோது..., ''சுதா! உன்னுடைய அன்பு ஒன்றுதான் என்றும் என்னை வாழவைக்கும்'' என்று அவர் கூறிய வார்த்தைகள் இன்னமும் சுருதி மாருது என் செவிகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன.

கண்டிக்குப் போன எனது கதாநாயகனிடமிருந்து கட்டுக் கட்டாகக் காகிதங்கள் பறந்து வந்தன. ஏற்கனவே

இயற்கையில் தன்னை இழந்திருந்த இளங் கவிஞனின் இத யத்தை அங்கிருந்த இயற்கை வளம் இன்னமும் கவர்ந்தி ருக்க வேண்டும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கவிதையாக இருந்தது.

அந்தக் கவிதை மழையில் நனைந்து நான் களித்திருந்த போதுதான். கண்டியில் நந்தன் தங்கியிருந்த வீட்டுக்காரப் பெண்ணுக்கும் நந்தனுக்கும் திடீர்த் திருமணம் என்ற செய்தியைத் தாங்கி வந்தது நந்தன் அனுப்பிய திருமண அழைப்பிதழ்.

கொஞ்ச நாட்களாக அழுது அழுது கண்ணீர் வற்றி விட... என்னை நானே தேற்றிக் கொண்டேன். என் தோல் விக்காக மனம் எரிந்து நந்தனைச் சபிக்க வேண்டுமென்று நான் முற்படவில்லை. மற்றப் பெண்களைப்போலச் சோக மான சினிமாப் பாடல்களில் நான் தஞ்சமடையவில்லை. என் அம்மாவை சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும் என்று விரும்பினேன். இன்றுவரை முயற்சி தொடர்கிறது...

''சுதான்ரீ...! சுதான்ரீ...!'' பக்கத்துவீட்டுப் பீற்றரின் ஐந்து வயதுச் சிறுமியின் குரல் என்னைத் திடுக்கிட்டுத் திரும்ப வைக்கிறது.

தாயில்லாமல் ஒரு நொண்டித் தகப்பனின் நிழலில் வளரும் அந்தச் சிறுமிக்கு தினமும் காலையில் தேனீரும் சாப் பாடும் கொடுப்பது எனது வழக்கம். அவளுக்குத் தேநீரை ஊற்றிவிட்டு அவசர அவசரமாக வீட்டு வேலையில் மூழ்கு கிறேன்.

அந்த ஐந்து வயதுச் சிறுமி என் சிந்தையில் நிறைகி றாள். கணவன் இல்லாவிட்டாலும் என்னபாடுபட்டும் ஒரு பெண் தன் குழந்தைகளை வளர்த்து விடுவாள். ஆனால் மனைவி இல்லாவிட்டால் ஒரு ஆண் ஒரு குழந்தையைக் கவனிக்க எவ்வளவு சிரமப்படுகிறான்...? அதிலும் இந்த பீற்றர் கால் இயலாத ஒருவன். எப்படி இரண்டு குழந்தைகளைத் தன்னந் தனியனாய் வளர்க்கப் போகிறார்.

தகரப் படலையில் யாரோ நடுவிரலால் டொக் டொக் கென்று தட்டினுர்கள். யாராக இருக்கும்? கேள்விக் குறி யோடு படலையைத் திறக்கிறேன்.

ஒரு கணம்... ஒரே ஒரு கணம்... என்னுள் பூகம்ப மாய் எதுவோ வெடிக்கிறது, ஆத்திரத்தால் உதடுகள் துடிக்கின்றன.

''உள்ளே வரலாமா சுதா...? ஏதோ ஒரு சக்தி என்னை ஆட்கொள்ள உள்ளே வருகிறேன். பின்னுல் என்னைத் தொடர்ந்து நந்தனும் வருகிறுர்.

''என்னில் கோபமா சுதா...?'' உடனே நான் கடகட வென்று சிரிக்கின்றேன், கோபத்தால். என் கோபத்தை அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

''நீ கோபப்படுறது நியாயம்தான் சுதா... ஆனுல் ஏன் நான் அப்படி ஒரு முடிவுக்கு வந்தேன் என்று உனக்குத் தெரியாது... அந்தக் காரணத்தை...''

''நல்ல சீதனம் தந்திருப்பார்கள்... அக்காவுக்காகவோ தங்கச்சிக்காகவோ நீங்கள் சம்மதித்திருப்பீர்கள்... ம்... இப்ப சீதனம் வாங்குகிற அநேகம் பேர் இப்படித்தானே சாட்டுச் சொல்லுகிறுர்கள்...'' நான் ஏளனமாகப் பொரிந்தேன்.

''இல்லை இவ்வளவு காலமும் என்னில் நீ இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறுய் எண்டு நினைக்க வேதனையாயி ருக்கிறது. சுதா... பிளீஸ்... நான் சொல்வதைக் கேள்...''

இவ்வளவு தூரம் இறங்கி வந்த பிறகு... நான் பொறு மையாக அமர்ந்தேன்.

''சுதா! நான் தங்கியிருந்த வீட்டுக்காரப் பெண் ஒரு வனைக் காதலித்தா... ஆனுல் அந்தக் காதலன் அவளை ஆபத் தான நிலைக்கு ஆளாக்கிவிட்டு எங்கோ தலைமறைவாகி விட் டான்... அவன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று தெரிந்

ததும் அந்தப் பெண் தன்னுயிரை மாய்க்க முயற்சித்தாள்... அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு அந்தப் பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கும்படி என் பிரன்ஸ்ஸிடம் கெஞ்சினேன்... எவனுமே முன்வரவில்லை...''

''...ஆனால் ஒருவன் மட்டும் கேட்டான். ''நீ மட்டும் கண்ணகியாகப் பார்த்துக் காதலிக்கிறாய்''... ஆனால் எங்களை மட்டும் ஏன் கைவிடப்பட்டவர்களைக் கட்டிக் கொள்ளச் சொல்லுகிறாய்...'' என்று கேட்டான்...

''...அவனுடைய கேள்வி தன்மானம் மிக்க என் இதயத்தை உலுக்கினாலும் அந்தக் கேள்வியில் பொதிந்திருந்த நியாயம் என்னை விரிவாகச் சிந்திக்க வைத்தது...

நாங்கள் ஒரு சமுதாயத்தில் சீர்திருத்தத்தையோ புரட்சியையோ எதிர்பார்த்தால்... அதை நாங்களே முதலில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற உண்மையை அப்போதுதான் நான் புரிந்து கொண்டேன்... அதையே நான் என்னுடைய இலட்சியமாகவும் ஆக்கிக் கொண்டேன்...

எல்லோரும் பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் மட்டும் போனால் போதுமா...? நடைமுறையிலும் பின்பற்ற வேண்டாமா? சொல்லு சுதா...''

மூச்சுவிடாமல் பேசியதில் நந்தனுக்கு மூச்சிரைத்தது. பெரிய கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. மருள மருள முழித்துவிட்டு எனக்குள் ஒரு முடிவை நானும் எடுத்துக் கொண்டேன்.

''உருவங்கள் இணைவதுதான் காதலில் வெற்றி என்று நம்பிக் கொண்டிருக்கிறவர்கள் வாழும் இந்த உலகத்தில்... இன்றைக்கு தங்களைச் சீர்திருத்தவாதிகள் என்று தம்பட்டமடிக்கும் எத்தனையோபேர் மத்தியில் உங்களுடைய தியாகம்

விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது நந்தன்... இத்தனை நாளும் உங்களைத் துரோகி என்று எண்ணியதற்கு பிராயச்சித்தமாக நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்...''

''என்ன சுதா?...'' நந்தனின் பதட்டமான குரல் நான் அலட்சியமாகப் புன்னகைத்தேன்.

''நந்தன்! உங்களுடைய இலட்சியத்துக்காக நீங்கள் உங்களுடைய காதலைத் தியாகம் செய்தபோது... உங்களுடைய இலட்சியத் துணைவியாகிய நான் உங்களுக்காக என்னுடைய காதலைத் தியாகம் செய்வதில் என்ன தவறு?...''

நந்தன் புரியாமல் என்னை நோக்கினார்,

''நந்தன்! உங்களுக்குப் பீற்றரைத் தெரியும். ஆனால் அவருடைய சோகக் கதை தெரியாது .. பிரசவத்தின்போது அவருடைய மனைவி இறந்தது மட்டுமில்லை... வீதி விபத்து ஒன்றில் அவர் முடவனாகியும் விட்டார் ..

அவருடைய ''சிஸ்ரர்'' கலியாணங்கட்டிப் போன பிறகு அவருடைய பிள்ளைகள் இரண்டும் சரியான பராமரிப்பு இல்லாமல் பரிதவிக்கின்றன. அவர்களுக்கு ஒரு நல்ல தாயாக இருக்க நான் விரும்புகிறேன்... சீதனத்துக்காக வருகிற ஒருவனைக் கட்டிக் கொண்டு இயந்திர வாழ்க்கை வாழுவதைவிட... மனதால் விரும்பி இப்படி ஒருவனுக்கு வாழ்வு கொடுப்பது எவ்வளவு புண்ணியம் தெரியுமா?

''சுதா!'' இன்று ஏதோ சொல்ல வாயெடுத்தவரை நான் இடைமறித்தேன் ''இதில் எனக்கு மனவருத்தமே இல்லை நந்து...''

உன்னைப் போன்ற இதயங்கள் கோடி கோடி பிறக்க வேண்டும் சுதா... உன்னுடைய வாழ்க்கையை ஆண்டவன் ஆசீர்வதிக்கட்டும்...'' என்றபடியே நந்தன் புறப்பட எழுந்த போது...

சுதான்ரி! என்றபடி உள்ளே நுழைந்த பீற்றரின் சிறிய மகனை ''மகனே...'' என்று இறுக அணைத்துக் கொள்கிறேன். பெற்றால்தான் பிள்ளையா என்ன?

# ஒரு கடமை லைஞ்சம் கேட்கிறது

ஓலைப்பாயில் முனகிக் கொண்டு படுத்திருந்தார் சின்னத்தம்பி. வழமையாக இவ்வளவு நேரம் பாயில் அவர் படுத்திருப்பதில்லை.

''அப்பு......அப்பு......நல்லா விடிஞ்சு போச்சுது எழும்பணை'' அவருடைய ஒரேமகள் பார்வதி கூப்பிட்டதும் எழும்பிப் பாயில் அமந்தார். தேகமெல்லாம் குளிரால் நடுங்கியது அவருக்கு.

''என்னணை கால் உந்தளவுக்கு வீங்கிப் போச்சுது... உடனேயே ஊசி போடச் சென்னனான்... நீ கேக்கேல்லை...'' தேனீர்க் கிண்ணத்தை பக்கத்தில் வைத்துவிட்டுப் போனாள் பார்வதி.

''எந்தளவு பெரிய காயம்மெல்லாம் இந்தா என்கிறதுக்குள்ளை மாறினது... இப்பதான் கண்டறியாத ஊசியும் உலக்கையும்...'' வயது போயும் அவருடைய பழமை போற்றும் குணம் மாறவேயில்லை.

இப்போது எழுபது வயதாகியும் இதுவரையும் ஒரு தடவை கூட உடம்பு சரியில்லை என்று பாயில் படுத்தோ

அல்லது வைத்தியர்களை அணுகியோ அவருக்குத் தெரியாது. அவருடைய கட்டுப்பாடான உணவு முறையும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையும் தான் இதற்கு காரணம். இளந்தலை முறைகள் சில இள வயதிலேயே முதுமைத் தோற்றத்தை கொண்டிருப்பதைக் கண்டு சின்னத்தம்பி மிகவும் மனங்கலங்குவதுண்டு.

''உதிலைபோய் காலுக்கு ஊசி போட்டுக்கொண்டு வேலைக்கு போணை அப்பு...'' என்றுள் பார்வதி. காலின் காயம் அதிகமாக வலித்தது.

கால்முகங் கழுவிக் கொண்டு வைத்தியசாலையை நோக்கி பயணமானுர் சின்னத்தம்பி.

''இலவச மருத்துவ மனை'' என்கிற பெயர்ப்பலகையைத் தாங்கிக் கொண்டு கம்பீரமாக நின்றது அந்தக்கட்டடம். வெளியே நின்று பார்பவர்களுக்கு அழகிய ஒரு வீடு போலத் தெரியும் அந்தக் கட்டடம் உள்ளே செல்லும் போது தான் மருத்துவமனை என்று பலருக்கும் தெரியும்.

ஐந்து விரல்கள் உட்பட பாதம் முழுவதும் வீங்கிப் பளபளத்துக் கொண்டிருக்க கையில் ஒரு சோடாப் போத்திலுடன் காலை நொண்டியவாறு உள்ளே நுழைந்தார் சின்னத்தம்பி.

அவ்வளவாகக் கூட்டம் இருக்க வில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிலர் அமர்ந்திருந்தார்கள். பெற்றோரின் கரங்களில் துள்ளித்தவழும் இரு குழந்தைகளைக் கொண்ட குடும்பக் கட்டுப்பாட்டு போஸ்டரை ஒரு சிறுவன் எழுத்துக் கூட்டி வாசித்துக் கொண்டிருந்தான். இன்னும் சில ஆங்கில அறிவிப்புகள் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன.

வாயிலிருந்த பொயிலைச் சுருட்டை ஒரு தடவை உறிஞ்சி எறிந்த பின் விறுந்தையில் போடப்பட்டிருந்த மரவாங்கில் வந்து அமர்ந்தார் சின்னத்தம்பி கால் விரல்கள் விண் விண்

ணென்று வலித்தன. இடது கையால் விரல்களைத் தடவிய படி டாக்குத்தர் வந்துட்டாரே மோனை?'' என்ருர் பக்கத்திலிருந்த சிறுவனிடம்.

''ஓம் உனக்கு'' எத்தினையாம் நம்பர்?...' சிறுவன் கேட்டான். அப்போதுதான் ''நம்பர்'' எடுக்கவேண்டும் என்று தெரிந்தது சின்னத்தம்பிக்கு. எழும்பிப்போய் ஜன்னலுக்குள் கையைவிட்டு நம்பர்த்துண்டு வாங்கிக் கொண்டார். கலர்ப் பென்சிலால் எழுதிய இலக்கம் மங்கலாகத் தெரிந்தது.

''உனக்கு இருவத்தொராம் நம்பரணை அப்பு...''

அவருக்கு ஆச்சரியமாய்ப் போய்விட்டது. எண்ணிஞல் பத்துப் பேர்கூட இல்லாத இடத்தில் எப்படி இருபது இலக்கமும் போனது?

''எல்லாரும் வெள்ளனவே வந்து நம்பர் எடுத்துக் கொண்டு போயிடுவினம்... டாக்குத்தர் வந்துவிட்டார் எண்டால்தான் வருவினம்...''

''உச்...உச்...உச்...'' வலிஎடுத்த காலைத் தடவிக்கொண்டார் அவர்.

இடுப்பில் இரண்டு வயதுக் குழந்தை ஒன்றையும், வயிற்றில் இன்னென்றையும் சுமந்து கொண்டு உள்ளே வந்த ஒரு இளம் பெண் சின்னத்தம்பிக்கருகே அமர்ந்தாள்.

''இந்த அப்பு பிள்ளை பிடிக்கிறவரடா... பிடிச்சுக் கொண்டு போயிடும்... சும்மா இரு'' சின்னத்தம்பியின் சோடாப் போத்தலை எடுக்க முயன்ற குழந்தையைத் தாய் மிரட்டிஞள்.

கிழவருக்கு சிரிப்பு வந்தது, சிரிக்கவிடாமல் கால் வலித்தது.

''என்னப்பு காலிலை...?'' பக்கத்திலிருந்த பெண் மனம் பொறுக்காமல் அவரிடம் கேட்டாள்.

அறிமுகமில்லாத ஒருத்தி தன்னை அக்கறையோடு விசாரித்ததும் ஒரேயடியாகக் குளிர்ந்து போஞர் அவர்.

''மம்பட்டி விருண்டினது பிள்ளை... நான் உதென்ன செய்யப் போகுதெண்டு பேசாமல் விட்டிட்டன்... இப்ப பெரிசாவிட்டுது...'' தன் காலைப் பார்த்தார் அவர்.

''மம்பட்டி வெட்டினதோ'' என்று விறைத்த அந்தப் பெண் பிறகு, ''அதுக்கு ஏற்பூசி போடவேணும்... பெரியாஸ் பத்திரிக்கு போகாதையன்...'' என்றாள்.

சின்னத்தம்பி அவசரமாகத் தலையசைத்தார். ''பெரியாஸ்பத்திரிக்கு போய்வர ஒருநாள் வேணும்... அதோடை பிள்ளை இப்ப இருக்கிற நிலைமையிலை ஏதாவது ஒரு அவலம் எண்டால் என்ன செய்யிறது? அவங்கள் வயதைப் பாக்கிறுங்களோ... ஏதோ அம்பிடுறவையைச் சரிக்கட்டுகிறுங்கள் எல்லே...''

அந்தப் பெண் சிரித்தாள். இப்ப ரவுணுக்குப் போறவர்கள் எல்லாம் ஒட்டப் பத்தயத்துக்கு தயாராகத்தான் செல்கிறுர்கள். எந்த நேரத்திலும் எங்கேயும் எதுவும் நடக்கலாம். தமிழ் மக்களின் தலைவிதிகள் திடீர் திடீரென நிர்ணயிக்கப்படுகின்றன.

இவ்வளவு நேரமும் ஏதோ அலுவலில் மூழ்கியிருந்த டாக்டர் முன்னுலிருந்த நீட்டுக் கொப்பிகளைப் பிரித்து வைத்துக் கொண்டு ''ஒன்று...'' என்று குரல் கொடுத்தார்.

நடுத்தர வயதுப் பெண் தனது கைக்குழந்தையோடு டாக்டரின் அறையில் நுழைய... இரண்டு சிறுவர்களும் நுழைய முயன்றுர்கள். டாக்டர் முறைத்திருக்க வேண்டும் பின்வாங்கி வந்து வாங்கில் அமர்ந்து கொண்டார்கள்.

உள்ளே குழந்தைப்பிள்ளை வீறிட்டு அலறியது. அந்தக் குரல் கிழவரின் நெஞ்சை ஊடுருவி விழிகளை நிரப்பியது.

''ஊசி போடுறுர் போலை அதுதான் பிள்ளை அழுகுது'' தனக்குள் தானே கூறிக்கொண்டு, தோளிலிருந்த துவாய்த் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தில் சிலுவை போட்ட மாதிரி ''பிளாஸ்ரர்'' ஒட்டிய அழுகின்ற குழந்தையை அரவணைத்தபடி வெளியே வந்தது முதலாம் நம்பர்.

''இஞ்சரடா நல்ல வடிவான குழந்தை...'' இரண்டு சிறுவர்களினதும் பக்கமாகத் திரும்பினர் சின்னத்தம்பி. குண்டுக் குழந்தை ஒன்றின் நெஞ்சளவு புகைப்படம். பால்மா விளம்பரத்துக்காகத் தொங்கியது. பற்கள் கூட முளைக்க வில்லை. அள்ளி எடுக்கவேண்டும் போல் வேண்டும் போல் ஆவலாக இருந்தது.

இரண்டு... மூன்று... நான்கு... டாக்டரின் குரல் வளர்ந்து கொண்டே போனது.

''சாப்பாட்டு நேரமாகுது... இனி ஒருத்ருக்கும் நம்பர் குடாதேம் யோகராசா...'' இடையே வெளியிலும் குரல் கொடுத்துவிட்டு தன் வேலையைத் தொடருகிறர் டாக்டர்.

சின்னத்தம்பி தன் காயத்துக்கு கட்டியிருந்த துணியி னூடாக இலையான்கள் அவரது புண்ணைத் துளைத்தன. அதே இலையான்கள் மீண்டும் அவரது முகத்தில் உட்கார முயன்றன, அவற்றைக் கையால் ஒதுக்கிவிட்டு நெளிந்தார், அவர் இரண்டு மூன்று தடவை நீளமான கொட்டாவிகூட வந்துவிட்டது அவருக்கு.

நீண்ட நேரம் கழித்து ''இருபத்தொன்று'' என்ருர் டாக்டர்.

சோடாப் போத்திலைக் கையில் எடுத்துக் கொண்டு உள்ளே போனுர் அவர். முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க அந்தக் கம்பீரமான டாக்டர் இரண்டு விரலால் தன் கண் ணுடியைச் சரிசெய்துவிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

மம்பட்டி விருண்டினதய்யா ஊசி ஒன்று போடவேணும். நான் பேசாமல் இருந்திட்டன். டாக்டர் தொழில் மீதிருந்த அளவுக்கு அதிகமான பக்தியால் தன் ஐம்புலன்களையும் குறுக்கி மெதுவாகக் கூறிவிட்டு காயத்தின் மீது சுற்றப்பட்டிருந்த துணியை அவிழ்த்தார் சின்னத்தம்பி.

''ஊசி போடவேணுமோ இல்லையோ என்று எனக்குத் தெரியும். நீங்கள் சொல்லத் தேவையில்லை. காலை இப் பிடி வையுங்கோ பாப்பம் டாக்டர் கோபிக்கிறுரா என்பதை குரலில் இருந்து மட்டுக்கட்ட அவரால் முடியவில்லை. டாக் டர் அவரது காலை அழுத்திப் பார்த்தார்.

இன்னும் கொஞ்ச நாளைக்கு வைச்சிருந்திட்டு வந்திருந் தால் நல்லாயிருக்கும்... வயதுபோன காலத்திலை ஏனப்பா உப்பிடி மனிசரை உலைக்கிறியள்... இப்போது உண்மையா கவே டாக்டர் தன்னைத் திட்டுகிறுர் என்பது அவருக்குப் புரிந்தது.

கடவுளுக்கு அடுத்தபடியாக ஒரு டாக்டர்தான் வணக் கத்துக்குரியவர். மக்களுக்கு மறுபிறவி வழங்கும் டாக்டர் களும், பிறர் நலம் பேணும் தாதிகளும் போற்றப்பட வேண் டியவர்கள். அவர்களின் தொண்டு நாட்டுக்கு அளப்பரியது. ஆனுல் இந்த டாக்டரைப் போன்ற ஒரு சிலர் அந்தப் புனித மான சேவையையே மாசுபடுத்தி விடுகிறுர்கள். வெறும் மருந்தால் குணமாகாத எத்தனையோ பிணிகள் டாக்டர் களினதும், தாதிகளினதும் அன்பான வார்த்தைகளால் குணமாகியிருக்கின்றன. இதை இவர் சிந்திப்பாரா? செயல் படுவாரா?...

'பெயரென்ன? ஏதோ யோசித்துக்கொண்டிருந்த சின் னத்தம்பி திடுக்கிட்டுப் பெயர் சொன்னுர். வயது சென்னுர். டாக்டர் கொப்பியில் எழுதினுர். பிறகு புண்ணுக்கு மருந் தைக் கட்டிவிட்டு கைகழுவினுர்.

''ஊசிமருந்து முடிஞ்சுது வெளிக்கடையளிலை வாங்கிக் கொண்டு வந்தால் நாளைக்கு போட்டுவிடுறன்...'' மருந்தின் பெயரை ஒரு சீட்டில் எழுதி நீட்டினுர் டாக்டர் காலை முதல் காத்திருந்து ஏமாற்றத்துடன் டாக்டர் நீட்டிய துண்டைப் பெற்றுக் கொண்டார் சின்னத்தம்பி அறையை விட்டு வெளியே வந்தபோது காயம் அதிகமாக வலிப்

பது போலிருந்தது. வெய்யில் உச்சிக்கு வந்துவிட்டது. வீட்டைநோக்கி நடந்தார். இனி வேலைக்குப் போக முடியாது. போனால் முதலாளி சீறிவிழுவார் என்பது அவருக்குத் தெரியும். யார் இப்ப மூப்பு இளமை பார்க்கிறார்கள்?

''அப்பு... மருந்து கட்டியாச்சே...'' சிறுவன் அவர் பின்னே ஓடிவந்து கேட்டான்.

ஊசிமருந்து முடிஞ்சுதாம் மோனை... சும்மா மருந்து தான் கட்டிவிட்டவர்... நிற்காமல் அவர் நடந்தார். சிறுவன் பின் தொடர்ந்து சிரித்தான்.

''உனக்கு விஷயம் தெரியாது அப்பு... என்று தொடங்கிய சிறுவன் விஷயத்தை விளக்கமாகச் சொன்னான்.

அவர் வியப்போடு அவனைப் பார்த்தார். ஏனோ அவருக்கு ஔவையாரின் ''கருங்காலிக்கட்டைக்கு நாணாத கோடாலி'' பாட்டு ஞாபகத்துக்கு வந்தது.

''எவ்வளவு வருமானம் வந்தாலும் இப்ப வாழ்க்கைச் செலவு கட்டுப்படாதுதான். அதுக்காக ஏழை எளியவர்களிடம் அஞ்சோ பத்தோ கைநீட்டினால் அது கைலஞ்சம் தான்...'' அவர் சிறுவன் பக்கம் திரும்ப... சிறுவன் துள்ளிக் கொண்டு முன்னால் ஓடிமறைந்தான். ஒரு சிறுவனுடைய வார்த்தைகள் என்று அவற்றை ஒதுக்கிவிட முடியாதிருந்தது சின்னத்தம்பியருக்கு.

---

கலையானது ஒரு இனத்தின் கலாச்சாரத்தைப் புரிய ஒரு கல்வியாகும். கலையின் பெயரில் நடைபெறும் களியாட்டங்கள் அந்த இனத்தின் அழிவுக்கு வித்திடும்.

---

# தண்டிக்கப்பட்ட மனச்சாட்சி

நேற்று இரவுதான் சந்தியிலுள்ள ''ரான்ஸ்போமர்'' பலத்த சத்தத்துடன் வெடித்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டிருந்தது. அந்தச் சில கணங்களில் ஒவ்வொரு மனித மனங்களும் துடித்துவிட்ட துடிப்பு... இந்த மண்ணில் நடந்த அக்கிரமங்களுக்குச் சாட்சியாகப்பட்டது. இனி திருத்த வேலைகள் முடிய ஒரு கிழமையாவது செல்லும். அது வரைக்கும் இதே இருட்டுத்தான்.

இந்தக் ''கொழுவல்'' கறண்ட் எடுக்கிறவையளாலே தான் ரான்ஸ்போமர் வெடிக்கிறது... இதாலே வாற தீமையளை எத்தினை விதமா அவங்களும் எடுத்துச் சொல்லிப் போட்டாங்கள் ? இந்த சனங்களுக்கு ஏறினால் தானே...ம்... எங்கடை சனங்கள் உலகத்திலை இருக்கிற குறுக்குவழி எல்லாத்தையும் பாடமாக்கிப் போடவேணும் எண்டு நினைக்குதுகள்...' தனக்குள் நினைத்துக்கொண்டவன் சயிக்கிளை இறுக்கி மிதிக்கிறான். செந்தில் எவ்வளவு தான் பலமாக மிதித்தாலும் எதிர்க்காற்றில் உருள்வதற்குச் சக்கரங்கள் மறுத்தன.

பள்ளம் திட்டிகளில் அவனுடைய சயிக்கிள் நிதான மின்றி விழுந்து எழும்பும்போது ஏற்படுகிற கடகடவென்ற சத்தத்தைத்தவிர தெரு முழுவதும் அமைதியாய் வெறிச் சோடிக் கிடக்கிறது.

இருளில் வேகமாய் வந்த மோட்டார் சயிக்கிள் ஒன்று கண்ணிமைக்கும் நேரத்தில் அவனை விலத்திக் கொண்டு முன்னால் சென்று மறைகிறது.

வாசல்வரை வந்து ''கவனமாப் பாத்துப்போங்கோ'' என்று வழியனுப்பி வைத்த பவானியின் ஏக்கந்தோய்ந்த முகத்தை ஒருதடவை நினைத்துக் கொண்டான்.

''அவளும் பாவந்தான்... மூண்டு வருஷமா எனக்காக காத்துக் கொண்டிருக்கிறாள்... மற்றவளவையெண்டா உனக்கு உன்ரை குடும்பம்தான் பெரிசெண்டு போய் அவ யளுக்கு உழைச்சுகுடு என்றுபோட்டு வீட்டுக்காரர் பேசிற எவனையாவது கட்டிக்கொண்டு போயிடுவாளவை... ஆனா... பவானி...ம்...''

முற்றத்தில் ஓங்கி உயரமாய் வளர்ந்து நின்ற தென்னை மரங்களின் நிழல்கள் குறுக்கு மறுக்காக விழுந்து கிடந்தன. சயிக்கிளை வீட்டுத் தாவாரத்தில் விட்டுப் பூட்டிவிட்டு, கோழிக்கூட்டுக்குள் நுழைய எத்தனிக்கும் கடுவன் பூனை மாதிரி பதுங்கிக் கொண்டு உள்ளே வருகிறான் அவன்.

விறாந்தை மேசையில் மண்ணெண்ணெய் விளக்கொன்று மின்னிக் கொண்டிருந்தது. கீழே தரையில் தலைப்புச்சீலை யைத் தலைக்கு விரித்துவிட்டு வழக்கம் பேலவே போலியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறாள் அம்மா.

இரண்டு மாதங்களுக்கு முந்தி எழுதி வைத்த கலியா ணம் குழம்பிப்போன விரக்தியில் பொலிவிழந்து போயிருக் கும் மூத்தக்கா... படிக்கப்போறன் என்ற போர்வையில்

ரவுணுக்குப் போய் எவனே ஒருத்தனைக் காதலித்து... இப்ப அவன் கேட்கிற சீனத்தை குடுக்க வக்கில்லாமல்... அவனையும் மறக்க மனமில்லாமல் நந்தளிக்கிற சின்னக்கா... பதினேழு வயதிலே படிப்பைப் பாதியிலே விட்டுவிட்டு மாய மாய் மறைந்துபோன தங்கச்சி... வெளிநாட்டு முகவர் நிலை யத்திலே முப்பதாயிரம் கட்டிவிட்டு ஆறு மாதமாக அலைந்து திரியும் இவன்... நாட்டு நிலைமையால் ஏற்பட்டுப்போன கைவறட்சி... இத்தனையும் போதாதென்று வாய்க்கு வாய்ச்ச படி நொட்டை நொடி சொல்லுற அக்கம் பக்கத்துச் சனங் கள்... இவ்வளவுக்கும் நடுவில் அம்மாவால் நிம்மதியாக ஒருகண் நித்திரை கொள்ளமுடியுமா ?

அவனுடைய காலரவம்கேட்டு அம்மா தலையை நிமிர்த்தி எழும்புகிருள். உனக்கு ஊர் உலாத்துறதுக்கு நேரகாலம் எண்ட ஒண்டு இல்லையே... உன்னலே ஏங்கி ஏங்கியே நான் வேலைக்குச் செத்துப்போவன் கண்டியோ...? உனக்கு எத் தினை நாள் சொல்லிப்போட்டன் நேரத்தோடை வீட்டுக்கு வந்திடு என்டு... தட்டிக் கேட்க ஆளில்லை எண்ட தைரி யம்தான் உனக்கு... என்ன...?'' அனைத்து இயலாமை களையும் அவன்மீது சுமத்திவிடுவது மாதிரி அம்மா சீறினள்.

''சும்மா ஏன் இப்ப நாலு வீடு கேட்கக் கத்துறி யள்...? நான் சிவலிங்கண்ணை வீட்டிலே இருந்து ரீ. வி. பாத்திட்டு வாறன்...'' இப்ப என்ன அம்மா சிவலிங்கண்ணை வீட்டில் போய் விசாரிக்கப் போகிறுவே என்கிற துணிவில் பச்சைப் பொய்யொன்றைத் தூக்கிப் போடுகிறுன் செந்தில்.

''அவன்தான் இப்ப எல்லாத்துக்கும் காரணம்... பூனைக் கும் தோழன்... பாலுக்கும் காவலெண்டு... உன்னை அங்கை கூட்டிக்கொண்டு போய் அவன்தானே உனக்கு அள்ளிவைச் சவன்... பிறகு என்னத்துக்கு உனக்கு அவன்ரை சினேகிதம்'' அவன் நினைத்ததுக்கு மாருக அம்மாவின் கூச்சல் இரட் டிப்பாகிறது.

நெஞ்சுக்குள் கோபமும் ஆத்திரமும் புகைந்து முட்டி மோதிஞலும் அவன் மௌனியாகிப் போகிருன். அதைத் தவிர எதுவும் செய்ய இயலாதவனுய்.

''அவன் உன்னைக் கொண்டுபோய் ''ஒண்டுமில்லாத'' இடத்திலே தள்ளிப்போட்டு, தான்மட்டும் லட்சணமாய் கண்ணுக்கு வடிவாய்... லட்சக் கணக்கான சீதனத்தோடை பொம்பிளை எடுத்துப் போட்டான்...'' பிறகும் அவன் என்ன மனுசனெண்டு கேக்கிறன்...''

அவன் ரோச் லேற்றை எடுத்துக் கொண்டு கிணற்ற டிக்கு முகங் கழுவப் போனுன். வாய்க்கால் நிரம்பி வழிந்து நனைந்திருந்த சேற்றில் கால் மிதித்ததும் அவன் சுயஉணர்வு பெற்ருன். சுறுசுறுப்பாக முகங் கழுவிக் கொண்டான்.

முகத்தைத் துடைத்துக் கொண்டுவந்த அவனைப் பார்த்து ''வந்து சாப்பாட்டை திண்டிட்டுப் போய்ப் படன்'' என்ருள் அம்மா.

இந்தளவுக்குப் பிறகு சாப்பாடு ஒரு கேடா? அம்மா வின் அர்ச்சனையில் அவனுக்குப் பசியே பறந்துவிட்டது. ஆனல் பசிக்கவில்லை என்று சொன்னல் எங்கேயோ அவன் சாப்பிட்டுவிட்டதாகக் கற்பனை பண்ணிகொண்டு அம்மா திட்டுவதைத் தொடர்வாள் என்று அஞ்சி அவன் சாப்பிட்டு முடித்தான்.

அவனுக்குத் தூக்கம் வரவில்லை. தூங்குவதற்கும் சாப் பிடுவதற்கும் மனதில் நிம்மதி இருக்க வேண்டும். அவ னுக்கு பவானி சொன்னதே அடிக்கடி நினைவில் தோன்றி மனதை நெருடிக் கொண்டிருந்தது.

''பவிக்கு ஒரு 'புறப்போஷல்' சரிவரும்போலை கிடக்குது செந்தில்... நாங்கள் கஷ்டப்பட்டனுங்கள்... இந்தச் சந்தர்ப் பத்தை தவறவிட்டா பிறகு இதே மாதிரி இன்னெரு சந் தர்ப்பம் வாறது வலும் கஷ்டம்... அதுதான் பவியின்ரை

விஷயத்தை முற்றுக்கலாம் எண்டு அம்மா சொல்லுறு...''

''அவ சொல்லுறது சரிதானே...'' என்றுன் அவன் மகிழ்ச்சியுடன்.

''அதில்லேச் செந்தில்... நான் மூத்தவள் இருக்க எப்பிடி அடுத்தவள் பபிக்குச் செய்யிறதெண்டு அம்மா கவலைப் படுகிறு... பிறகு ஊரில நாலுபேர் நாலு விதமாகக் கதைப்பினமாம்... ஏன் எங்களாலே பபியின்ரை வாழ்க்கைக்கு ஒரு தடை வருவான் என்ன செந்தில்...? நீங்கள் உங்கட வீட்டிலே கேளுங்கோ... சிம்பிளா றிஜிஸ்டர் பண்ணுவம்... என்ன...?''

திடீரென்று மனதுக்குள் ஏதோ ஒரு சுமை அமுக்குவது மாதிரி இருந்தது. நாலு புறமும் அமுக்கம் கூடி இதயம் வாயால் வெளியே வந்துவிடும்போல இருந்தது.

''இண்டைக்கு எப்பிடியும் அம்மாவோடை இது பற்றிக் கதைக்கவேணும்...'' என்று நினைத்துக் கொண்டு வந்தவனுக்கு அம்மாவின் வார்த்தைகள் ஹெலிகொப்டர் சன்னங்கள் மாதிரி மனதைத் துளைத்துவிட்டன.

''பவானியின்ரை தமையன்கூட என்மேல வைச்ச நம்பிக்கையாலதானே வேற ஆம்பிளைத் துணையில்லாத குடும்பத்தையும் தனியா விட்டிட்டு போராடவென்று போனவன்...? அந்த நம்பிக்கைக்கு துரோகம் செய்யவேகூடாது...''

சுதன், பவானியின் அண்ணன். திடீரென்று ஒருநாள் மர்மமாக... அதுவும்... காலையில்... கூட கண்டு கதை சிரித்துவிட்டு எதுவுமே சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போன பிறகுதான் வலிமை எண்டது உடலில் இல்லை மனதில்தான் என்று செந்தில் உணர்ந்து கொண்டான். அதன் பிறகுதான் தன் வீட்டுச் சுமையோடு பவானி வீட்டுச் சுமைகளையும் தானே சுமப்பதற்கு அவன் திடங்கொண்டான்.

''சிவலிங்கண்ணை நேற்றுத்தான் வெளிநாடு போன மாதிரிக் கிடக்குது அதுக்கிடையிலே என்ன மாதிரி உழைச்சுக் கொண்டு வந்திட்டார்... போன தைக்கு தமக்கைக்கு கலியாணம் நடந்தது... இப்ப அடுத்த தமக்கைக்கும் எங்கேஜ்மென்ற் பிக்ஸ் பண்ணியாச்சாம்....,

வெளிநாட்டு உழைப்பின்மீது உனக்கும் ஆசை வந்திட்டுதோ...'' பவானியை ஏளனமாகப் பார்த்தான்.

''இங்கையிருந்து என்னதான் தலையாலே கிடங்கு கிண்டினாலும் .. இங்கை ஒரு வருஷம் எடுக்கிற சம்பளம் அங்கை ஒரு மாதத்திலே வரும்... தம்பு மாஸ்ரர்றை பெடியன் ஒண்டு இப்ப போய் மூண்டு மாதந்தான் இருக்கும்... என்ன மாதிரிச் சுளை சுளையா அள்ளி அனுப்புறான்... ச்சா...''

''உயிருக்கே உத்தரவாதமில்லாத இடத்திலே என்னத்தையடா மச்சான் உழைச்சுக் கிழிக்கிறது .. நான் இன்னும் ரண்டு கிழமையிலே சவூதிக்கு போயிடுவன்...''

பஸ்ஸில் - கோயிலில் – சந்தையில் எங்கும் இதே நெடிதான் அவன் மனமும் மெல்ல மெல்ல சலனப்படத் துவங்கியது.

''அவங்களும் ஒவ்வொரு பக்கமா அடிச்சுக்கொண்டு வாறுங்கள் இளந்தாரிப் பிள்ளையளை வைச்சிருக்கிறதும் பயமெண்டு எவ்லாரும் கதைக்கினம்... நீயும் எங்கையாவது போகப்பார்... இப்பிடிச் சொன்ன அம்மாவை நம்பி, பணத்தைக்கட்டி ஏமாந்ததுதான் மிச்சமானது. அம்மா இப்போது சுருதியை மாற்றிக் கொண்டு விட்டாள்.

''சும்மா இருக்காமல்... அவனவன் ஆளும் பேருமாய் இருக்கிறவன்கள் செய்யிறுங்களெண்டு போட்டு... உள்ளதை வளிச்சுத் துடைச்சு அவங்களிட்டைக் குடுத்திட்டு வந்திருக்கிறியே...'' அடிக்கடி இப்படி அம்மா சொல்லுவாள்.

''தம்பி நான் உனக்கு எத்தனை தரம் சொன்னனான்... எங்களுக்கு உன்ரை குருதியை உறிஞ்சி உழைக்கிற உழைப்பிலே வாழ்க்கை அமைக்க விருப்பமில்லையெண்டு... போனது போகட்டும்... உனக்கு ஒரு ஆபத்தும் இல்லாமல் நீ வந்தது போதுமடா...'' மூத்தக்காவின் வார்த்தைகள் ஆரத் தழுவி ஆறுதல் தந்தன. சின்னக்கா எதுவுமே சொல்லுவதில்லை.

காலையில் எழுந்தபோது அம்மா முற்றத்துக்கு தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தாள் புழுதியை அடக்குவதற்காக.

''அம்மா... என்றான் திடமாக. அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''இந்தக் கிழமையிலை... நல்லதா ஒரு நாளிலை... பவானியை றிஜிஸ்டர் பண்ணப் போறன்...''

''என்னடா... என்னடா சொல்லுறாய் நீ...?'' என்றாள் அம்மா வாளியை அப்படியே கையில் வைத்துக் கொண்டு அவன் சொன்னதில் அவள் அதிர்ந்திருக்க வேண்டும்.

அம்மா... நிதானமா ஒருக்கால் யோசிச்சுப் பாருங்கோ... சின்னக்காவை ஒருதன் காதலிச்சுப்போட்டு காசைக் காரணங்காட்டி கைகழுவினதும் நீங்கள் என்ன என்ன மாதிரி அவனைத் திட்டினியள்? . ஏன்?... உங்கடை பிள்ளையின்ரை வாழ்க்கை சூனியமாப் போச்சுதெண்டுதானே... உங்களை மாதிரித்தானே பவானிக்கும் ஒகு தாய் இருக்கிறாள்... எங்கடை சின்னக்காவைப்போலை... பெரியக்காவைப் போலதானே பவானியும் ஒரு பொம்பிளை... உங்கட பிள்ளையளுக்கு நீங்கள் எதிர்பார்க்கிற நியாயத்தை ஏன் எல்லாருக்கும் பொதுவென்று நினைக்க மறுக்கிறியள்...?''

''........'' அம்மா எதுவுமே சொல்லாமல் ஆழமாக எதையோ யோசிப்பது மாதிரி நின்றாள்.

''என்ரை அக்காமாரைக் கலியாணங் கட்டுறதுக்கு யார் யாரோ பணம் கேட்டுவிட்டான்கள் என்றதுக்காக என்னை நம்பியிருக்கிற ஒருத்தியைப் பழிவாங்க என்னால முடியாதம்மா...'' என்றான் செந்தில்.

''இத்தனை வருஷமா உன்னைப் பெத்து வளர்த்த என்னை விட நேற்றைக்கு வந்த ஒருத்திதான் பெரிசெண்டு நீ நினைச்சா... இனிமேல் என்ரை முகத்திலை முழிக்காதை... போய் உன்ரை வழியைப் பார்த்துக் கொள்...''

அம்மா குனிந்து வாளியைத் தூக்கிக் கொண்டு வேக மாகப் போகிறாள் கிணற்றடியை நோக்கி.

''அம்மா என்னைத் தண்டிக்கிறதாக நீங்கள் நினைக்க லாம். ஆனா நான் என்ர மனச்சாட்சிக்கு எதிராக இயங்க முடியாது உங்கட தண்டனை எனக்கில்லை... என்ர மனச் சாட்சிக்குத் தானம்மா... அவன் அம்மாவை அப்படியே பார்த்துக்கொண்டு சில கணங்கள் நின்றான். அவனுடைய மனதுக்குள் ஒரு முடிவு முற்றுப்பெறுகிறது.

ஈழநாடு வாரமலர் 6-9-87

---

காலம் யாருடைய காலடியிலும் காத்திருப்பதில்லை. காற்றுப்போல் அது எத்திசையிலிருந்து எத்திசைக்கும் வீசக் கூடிய ஆற்றல் பெற்றது,

---

# பூஜிக்க முடியாத பொய் முகங்கள்

அக்கோய் அக்கோய்... தகரப்படலையை உதறித் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடி வந்தாள் வத்சலா?

என்னடி என்ன?... உனக்கு எத்தினை நாள் சொல்லிப் போட்டன் சொல்லு பாப்பம்... உப்பிடி அவலமாகக் கத்திக்கொண்டு வராதையெண்டு... அக்கம் பக்கத்துச்சனம் என்னவோ ஏதோண்டெல்லே நினைக்கப் போகுதுகள்...'' அம்மாவின் குரல் காதில் விழுத்தாதவளாய்... புத்தகங் கொப்பிகளை மேசையில் எறிந்துவிட்டு பாய்ந்து கொண்டு அறைக்குள் வருகிறாள் வத்சலா.

''ஏதாவது சூடான விஷயமாய்த்தான் இருக்கும்... அதுதான் அதிலை ஒரு மிறி இதிலை ஒரு மிதியெண்டு வாறாள்...'' என்று எண்ணிக் கொண்டவளாய் பின்னிக்கொண்டிருந்த வயர்க்கூடையை அருகே தூக்கி வைக்கிறாள் மஞ்சுளா.

''என்ன வச்சி?...'' என்றாள் மஞ்சு சாவதானமாக.

''உமக்கொரு நியூஸ் தெரியுமே .. எங்கட சின்னமாமி ஆக்களும் இரவிரவா வெளிக்கிட்டுவந்து அம்மன் கோயிலிலை அகதியளா இருக்கினமாம்...''

''ஆர் சொன்னது?...''

என்னோடை படிக்கிற பிள்ளையொண்டு சொன்னது... எனக்கு உடனே ஓடிப்போய் பாக்கவேணும் போலத்தான் கிடந்தது. ஆனாலும் உதுகளைப் போய்ப் பார்த்தால் எங்களுக்கு அவமானமென்றுபோட்டுப் பேசாமல் வந்திட்டன்...''

''உப்பிடிச் சொல்லாதை வச்சி... ஒரு மனிசர் கெட்டு நொந்து வந்திருக்கிற நேரத்திலே என்னதான் கோவமெண்டாலும் பழங்கதைகளைக் கிளறக்கூடாது...''

''ம்... கொஞ்சங்கூடச் சூடு சொறனை இல்லாமல் அவையளுக்குச் சார்பாகக் கதைக்கிற ஆளைப்பாருமன்... உமக்கு வந்து சொன்ன என்ர புத்தியைச் செருப்பாலே அடிக்க வேணும்...'' ஆத்திரத்திலே அறைக்கதவை அடிச்சுக்கொண்டு போய்விட்டா வத்சலா.

நடந்துபோன சம்பவங்களை நினைத்துப் பார்த்தால் அவளுக்கும் ரணம் ஆறவில்லைத்தான். அதற்காக வெந்தபுண்ணிலே போய் வேலாலே குத்த முடியுமா?

சின்னமாமி, மாமா, மச்சாள்மார்தான் போகட்டும்... ஆனல் வாசுவும்...? வாசுவுக்குக் கூட அவளைவிடப் பணம் தான் முக்கியமாகிப் போய்விட்டது... அவளுக்கும் வாசுவுக்கும் தான் திருமணம் நடக்கும் என்று இருபகுதியினராலும் சிறுகச் சிறுக ஊட்டப்பட்ட நம்பிக்கை உணர்வினுல்தானே அவள் வாசுவை முழுமையாக நேசித்தாள்...

வாசுவுக்கு உத்தியோகம் கிடைத்துவிட்டது. சதா மண்ணையே கிண்டிக்கொண்டிருந்தவனுக்கு சொந்த ஊரிலேயே அரசாங்க வேலை என்றதும் அவளுக்குப் பெருமையாக இருந்தது. பூரிப்பாக இருந்தது. மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தாள்.

மஞ்சுவின் அம்மாவும், அப்பாவும் மெதுவாகத் திருமண விஷயத்தைத் துவக்கி... குடும்ப நண்பரான சின்னத்துரை

யைத் தூதுவிட்டார்கள். சின்னத்துரை கைராசிக்காறர்... அவர் தலைப்போட்ட விஷயம் எதுவும் தவறிக்கூடத் தோற்க முடியாது... அவர்மீது அப்பாவுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை...

வென்று வருசிறேன் என்று சென்றவர்... வெடிகுண்டு மாதிரிச் செய்தியொன்றைக் காவிக்கொண்டு வந்தார். அப்போதுதான் புரிந்தது, வாசு அந்தஸ்சில் மட்டும் உயரவில்லை. விலையிலும்தான் உயர்ந்துவிட்டானென்று...

பணமாக ஒரு லட்சம் தரவேணும் என்றும், முடியாவிட்டால் வாசுவுக்கு வேறு இடத்தில் பெண் பார்க்கப் போவதாகவும் மாமி அடிக்கடி வந்து மிரட்டினுள்.

என்ன செய்வது? அப்பாவின் உழைப்பு அன்ருடச் செலவுக்கே மட்டுமட்டாக இருக்கையில் சேமிப்பு எங்கிருந்து வரும்...? இருக்கின்ற வீடுகூட இருவருக்கும் பொதுவாகத் தான் இருக்கின்றது...

அப்பா ஓடிஓடிக் கடன் புரட்ட முயன்று தோற்றுப் போனுர்... எதை நம்பிக்கடன் வாங்குவது...? தினம் தினம் அஞ்சி அஞ்சி மரணத்தோடு போராடும் அவல நிலையில் எவன்தான் கடன் தரப் போகிருன்...!

வாசுவை இழக்க விரும்பாமல், அதேவேளை வாசுவுக்குரிய விலையைக் கொடுக்கவும் திராணியில்லாமல் தவித்து மூலைக்கு மூலை சோர்ந்திருக்க துவங்கிவிட்டார் அப்பா. அந்த ''டென்சனி''ல் கடும் உழைப்பாளியான அவரை நோய்கூடக் கவ்விக் கொண்டது.

வாசுவுடன் ஒரு தடவை நேரில் கதைத்து அவர்கள் கேட்கிற பணத்தைத் தரமுடியாத இயலாமையைக் கூறி... விலையே நிர்ணயிக்க முடியாத தன் அன்பை அர்ப்பணிப்பதாகச் சொல்ல வேண்டும் என்று அவள் மனம் துடித்தது.

அன்று வெள்ளிக்கிழமை... அவளும் வத்சலாவும் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்... கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தமாதிரி வாசு மோட்டார் சயிக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

இவர்களைக் கண்டதும் சிறிது தூரம் போய்... ஒழுங்கை முகப்பில் மோட்டார் சயிக்கிளை அழகாகத் திருப்பிக்கொண்டு வந்த வாசுவை அவள் உரிமையோடு ஆதங்கமாகப் பார்த்தாள். மனதிலுள்ளதைக் கொட்டிவிட வேணுமென்கிற பதைப்பு...

''மாமியும் மாமாவும் கேட்கிற காசு எங்களிட்டை இல்லை வாசு... எங்கட குடும்ப நிலமை முழுசாக உங்களுக்கும் தெரியும்தானே... உந்தக் காசாலை எங்கட கலியாணம் தடைபடும் எண்டால்... என்னால்... என்னால் அதைத் தாங்கவே ஏலாது வாசு...'' அவள் அழாத குறையாகச் சொன்னாள்.

''எனக்குக் காசு பணம் பெரிசில்லை மஞ்சு... உன்ரை அன்பே எனக்குப் போதும்... எந்தத் தடையையும்மீறி நான் உன்னைத்தான் கைப்பிடிப்பன்... பயப்பிடாதை மஞ்சு...'' இப்படித்தான் அவன் சொல்லுவான் என்று அவள் எதிர்பார்த்தாள். ஆனால் அவனோ...

''நான் என்ன செய்யிறது மஞ்சு... தங்கச்சிமார் ரண்டு பேருக்குமாகத்தான் அம்மாவும் இவ்வளவு பிடிவாதமாக நிக்கிறபோல...'' என்றபடி மோட்டார் சைக்கிளை உதைத்துக் கொண்டு வாசு போய்விட்டான்.

கலங்கிய கண்களிலிருந்து அவன் மறையும்வரை நின்றவள் வேதனையோடு திரும்பி நடக்கத் துவங்கினாள்.

''அக்கா போயும் போயும் உவனைக் காதலிச்சீங்களே... தோட்டக்காரனாக இருக்கேக்குள்ளை ஐம்பதாயிரம்... உத்தியோகம் கிடைச்சவுடனை ஒரு லட்சம் ம்... உவங்களுக்கு

பச்சைமட்டைதான் வெட்டி வெளுக்க வேணும்... நான் மெய்யாகத்தானக்கா கேக்கிறன்... இப்ப அப்பா ஒரு லட்சம் மாறிக்குடுத்து உங்களைக் கட்டி வைக்கிறார் எண்டு வைப்பம். அடுத்த மாதமே ஒரு ''புறமோஷன்'' கிடைச்சுதென்றால் இன்னும் ஐம்பதாயிரம் தா என்பான்... அப்ப அப்பா என்ன செய்வார்...? இல்லை நீங்கள்தான் என்ன செய்வியள்...? அப்பா பிறகும் மாறிமாறிக் கொடுக்க வேணும். இல்லாட்டி ஏதாவது ஒரு கட்டத்திலை நீங்கள் அவன்ர உறவை உதறிவிட்டு வரவேணும்... அதை ஏன் இப்பவே உதறக்கூடாது...?'' வத்சலாவின் கேள்வியிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த மனம் ஏனோ வாசுவை இழக்க மறுக்கிறதே!

பணத்துக்கு முன்னால் காதல், பாசம், அன்பு எல்லாமே தூசியாகப் போய்விட்டது. ஆத்திரத்திலும் ஆவேசத்திலும் அப்பா குறைந்த விலையில் இன்னொரு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டு வந்தார் மஞ்சுவுக்கு.

''அப்பா... எனக்குக் கலியாணமே வேண்டாமப்பா... ஒருத்தருக்கும் இடைஞ்சல் இல்லாமல் நான் இப்படியே இருந்து விடுறன்...'' அவள் குமுறி அழுதாள். தன் மனச்சுமை குறையும் வரை தனிமையாக இருந்து அழுது தீர்த்தாள்.

''ஒரு நல்லவனுக்காக காலம் பூராவும் கன்னியாக இருந்தாலும் பறவாயில்லையக்கா... உங்கடை இதயத்தை பணம் என்ற உரைகல்லிலை உரைச்சுப் பார்த்த ஒருத்தனுக்காக ஏன் உங்கடை வாழ்க்கையை பாழாக்கிறியள்?... உலங்களுக்கு வாழ்ந்து காட்ட வேணும்... நீங்கள் அழுது ஊரைச் சிரிக்க வையாதேங்கோ...'' வச்சிதான் ஆறுதல் சொன்னாள். வத்சலா சின்னவள்தான் என்றாலும் அவளது உதட்டிலிருந்து பிறக்கின்ற ஒவ்வொரு சொல்லும் என்னமாதிரி நியாயம் கேட்கிறது?... இனி வருகிற தலைமுறைகள் இந்த வியாபாரங்களுக்கெல்லாம் அடிபணியாதென்பதா இதன் அர்த்தம்?

அவள் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் கொஞ்சங் கொஞ்சமாக வாசுவை மறக்க முயன்ருள். அந்த முயற்சி யின் முக்கால் திட்டத்தில் மீண்டும் ஓர் சோதனை... ஆனல் அவள் மனதில் குழப்பம் இல்லை, தெளிவிருந்தது.

அப்பா பெரிய மனது பண்ணி சின்னமாமியையும், பிள் ளைகளையும் கோயிலடியிலிருந்து வீட்டுக்கு அழைத்துவந்து விட்டார்.

அவர்களுடைய கிராமத்தில் நடந்த அக்கிரமங்களை மயிர்க்கூச்செறியும் மிருகத்தனங்களை ஆதியோடந்தமாக அவர்கள் சொல்லி முடித்தபோது... ஜீவா புறப்பட்டுப் போனதுகூட மனதில் திருப்தியைத் தந்தது.

அவர்கள் பொருள் பண்டங்களை மட்டும் இழக்கவில்லை மாமாவையும் வாசுவின் உத்தியோகத்தையுங் கூட இழந்து தான் வந்திருக்கிருர்கள். ''ஷெல்'' அடியில் அவர்களின் வீடு சிதறிப்போய் விட்டது. உடுத்த உடைகளுடன் உயிரை மட்டும் கையில் கொண்டு ஓடி வந்திருக்கிருர்கள்.

அம்மாவுடன் இணைந்து அவளும் அவர்களுக்கு வேண் டிய உதவிகளைச் செய்து கொடுத்தாள். சில நாட்கள் குற்ற உணர்வால் கூனிக்குறுகி கதைக்கவே அஞ்சிய வாசுவையும் மச்சாள்மாரையும் வலிய அழைத்துப் பேசினுள். மச்சாள் மார் இருவருக்கும் வயர்க்கூடை பின்னக் கற்றுக் கொடுத் தாள். ஆனல் வத்சலாவோ அவர்களை ஏன் என்றுகூடக் கேட்பதில்லை. அவளுடைய குணம் தெரிந்து அம்மாகூட அவளை வற்புறுத்தாமல் விட்டுவிட்டாள். தோட்டத்தில் உழைத்துக் களைத்துவரும் வாசுவுக்கு அவள் பரிவோடு சூடான தேனீர் கொடுக்கிருள், அவளுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் அவர்கள் வெட்கித் தலைகுனிவதை அவ ளால் உணர முடிகிறது.

''அவள் தங்களை மன்னித்துவிட்டாள்'' என்ற நம்பிக் கையைத் திடப்படுத்திக் கொண்டு... ஒரே வீட்டிலிருக்கும்

அப்பாவிடம் அப்பாவின் நண்பர் சின்னத்துரையைத் தூது விடுகிறுள் மாமி. சுவரில் எறிந்த பந்தும் எதிர்காற்றில் உமிழ்ந்த எச்சிலும் என்ன செய்யும் என்பது மாமிக்கு ஏனே தெரியவில்லைப் போலும்!

''நடந்ததெல்லாம் நடந்து போச்சுது... இனியும் அது களையே சாதிச்சுக் கொண்டிருந்து பிரயோசனமில்லை... அது களும் எல்லாத்தையும் இழந்துபோய் வந்திருக்குதுகள்... உள்ளதைச் சமாளிச்சு ஏதோ காரியத்தை ஒப்பேற்று வோம்...'' வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது மாதிரி .. தான் சொல்ல வந்த விஷயத்தை நாசூக்காகச் சொல்லி முடித் தார் சின்னத்துரை.

கைகள் கூடைபின்னுவதில் அக்கறையோடு ஈடுபட்டி ருந்தாலும், காதுகள் அப்பா என்ன சொல்லப் போகிறுர் என்பதை அவதானிப்பதிலேயே ஈடுபட்டன. நல்ல வேளையாக வச்சி வீட்டிலில்லை... இருந்திருந்தால் தன்னுடைய பாணியில் முறையாகப் பதில் கொடுத்திருப்பாள்.

''இதிலை யோசிக்கிறதுக்கு என்ன இருக்குதெண்டு கேக் கிறன்...? எதுக்கும் கால நேரம் கூடிவர வேண்டுமெண்டு சும்மாவே சொல்லுறது? இப்பதான் எல்லாமே கூடி வந்தி ருக்குது... போல இனி என்ன...? ம்...''

அப்பா ஏதும் பதில் சொல்லுவதாகக் காணவில்லை. மஞ்சு வயர்க்கூடையைப் போட்டுவிட்டு வெளியே வந்தாள்.

''அப்பா! இது என்ர வாழ்க்கை சம்பந்தப்பட்டது என்றதாலை நான் என்ர முடிவைச் சொல்லிடுறன்... இப்ப கூட மாமி என்னை மனப்பூர்வமாக ஏற்க முன்வரேல்லை, வாசுவின்ரை உத்தியோகம் போய்விட்டது... கலியாணச் சந்தையிலை வாசுவுக்கு இனி விலை இல்லை என்ற சந்தர்ப் பத்தின் நிர்ப்பந்தத்தாலை ''உள்ளதை வாங்குவோம்'' என் கிற தந்தரத்தோடுதான் மாமி செயல்படுறு... நான் இவ் வளவு உதவிகளையும் வாசுவை அடையவேணும் என்கிற

நோக்கத்திலே செய்யேல்லே காண்டுமிராண்டித்தனங்களாலே பாதிக்கப்பட்ட ஒரு தமிழ்க் குடும்பம் என்கிற இன உணர்வாலேதான் செய்தன்... யாராக இருந்தாலும் செய்யவேண்டிய கடமையைத்தான் செய்தன்... வாசுவைக் காணும் ஒவ்வொரு தடவையும் பணத்துக்காக என்ர மனதைப் புண்ணுக்கிய அவரது சொரூபம்தான் மனதை உறுத்துது... எப்படியப்பா அவரை என்னலே நேசிக்க முடியும்? அன்போ, மதிப்போ எப்படியப்பா தோன்றும்?... தயவு செய்து வாசுவுக்கு ஏற்ற வேற ஒரு பொம்பிளேயைப் பாருங்கோ...'' அவள் நிதானமாகச் சொல்லிவிட்டு அனேவரையும் பார்த்தாள்.

',பிள்ளே மஞ்சு ஏதோ ஊர் உலகத்திலே இப்படி நடக்கிறதுதானே .. அதுக்காக உப்பிடிச் சொல்லுறதே ..'' சின்னத்துரைதான் அவளேக் கேட்டார்.

''பொய் முகங்களேப் பூஜிக்க என்னுல முடியாது... தயவு செய்து என்னே மன்னியுங்கோ...'' அவள் அறைக்குள் நுழைந்து பின்னிக் குறையாக விட்டிருந்த வயர்க்கூடையைத் தொடர்கிருள். அவர்கள் இன்னும் அப்படியே சிலேயாகிப் போனமாதிரி இருக்கிருர்கள்.

---

புல்லேத்தின்று பசு பால் கொடுக்கும். ஆனுல் பாம்பு பாலேக் குடித்தாலும் விஷத்தைதான் கக்கும். இதுபோலவே மனிதருள் சிலரும் நன்மைகளே உறிஞ்சித் தீமைகளேப் பிரசவித்து விடுகிருர்கள்.

---

# அவர்களுக்குப் பசி

உயரமாகக் கட்டப்பட்டிருந்த வாய்க்கால் வரம்பின் மீது ஏறி நின்றபடியே காலாலே மரங்களின் காய்ந்த சுள்ளிகளை இடுங்கிக் கொண்டிருந்தான், கிட்டு என்ற கிட்டினன். கிருஷ்ணன் என்கிற பெயர் அம்மாவின் ஆசை வார்த்தையாக கிட்டினன் என்றாகிக் கடைசியில் கிட்டு என்றே மருவிவிட்டது.

''டேய்... கிட்டு...'' தூரத்தில் அவனது பேரைச் சொல்லி ஆரோ கூவியது கேட்டு, கிட்டு தலையைத் திருப்பி பின்னால் பார்த்தான். அவனுடைய சினேகிதப் பட்டாளம் கையில் ஒவ்வொரு ஓலைப் பெட்டியுடன் வந்து கொண்டிருந்தது. காலை வந்துவிட்டால் போதும் உணவைத் தேடி அலைவதே அவர்களுக்குப் பழக்கமாகிவிட்டது. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட முப்பது குடும்பத்துச் சிறுவர்களுக்கும் இதுதான் தலைவிதி. நாட்டுப் பிரச்சனைகளைப் பற்றியோ, சமூகப் பிரச்சனைகளைப் பற்றியோ அவர்களுக்கு கவலையில்லை. அப்படிக் கவலைப்படும் அளவுக்கு பிரச்சனைகளைப் பற்றிய விரிவுகள் அவர்களுக்கு இல்லை என்றே சொல்ல வேண்டும்.

அவர்களுக்குத் தெரிந்தது புரிந்தது எல்லாமே பசி என்கிற ஒரு உணர்வுதான்.

''டேய்... நில்லுங்கடா நானும் வாறண்டா...'' வரம்பை விட்டு இறங்கி முறித்து வைத்த சுள்ளிக்கட்யோடு வீட்டை நோக்கி ஓடினன் கிட்டு. அவனுடைய தோழர்கள் அவனுக் காகக் காந்திருந்தார்கள்.

''ம்மா... ம்மா...'' குடிசை மூலைக்குள் சணற்சாக்கில் முடங்கிக் கிடந்த தன் தாயை அந்தச் சிறுவன் கிட்டு உலுப்பினன்.

கண்ணைத் திறக்காமலே ''ம்'' என்றுவிட்டு மற்றப்பக் கம் புரண்டு படுத்தாள் அவள் அசதியுடன்.

மீண்டும் சற்று நேரம் கழித்து ''ம்மா... ம்மா...'' என்று அவளை உருட்டி எழுப்ப முயன்றன் அவன். தாய் என்ன சொல்லுவாளோ என்கிற ஏக்கம் ஒரு புறம். எங்கே தோழர்கள் தன்னை விட்டுப்போய் விடுவார்களோ என்கிற தவிப்பு ஒருபுறம் அவனை வதைத்தன.

அவள் கண்களைத் திறந்தாள். கூரைக்குள்ளால் வந்த சூரிய வெளிச்சம் அவளது கண்களைக் கூச வைத்தது. படுத் துக் கிடந்தபடியே, ''என்னடா... என்றள் கோபமாக. உடலிலிருந்த பஞ்சியும் அலுப்பும் அவள் குரலில் அப்பட்ட மாகத் தெரிந்தன.

சடையாய் வளர்ந்து கிடந்த தலைமயிரைச் சொறிந்த படியே, ''ஒரு வீட்டில கல்யாண விருந்து நடக்குது... சோறு வாங்கப் போகட்டே...'' என்றன் அவன். தாய் மௌனமாய் இருக்க அவன் தவிப்பு இன்னமும் அதிகரித் தது.

''சின்ராசு, குட்டி எல்லாம் போறுங்கம்மா... நானும் போகட்டே...'' ''ம்... கெதியா வந்து சேர்...'' ஆணையில் ஏறின புளுகத்தோடு அவன் இடத்தைவிட்டு எழும்பினன்.

ஓடிப்போய் பக்கீசுப் பெட்டிக்குள் தாய் மறைச்சு வைத் திருந்த அலுமினியச் சட்டியை எடுத்தான். பிறகு தனக்குள் எதுவோ நினைத்துக் கொண்டவனாக அந்தச் சட்டியை எடுத்த இடத்தில் வைத்தான்.

அவன் பார்வை அண்ணாந்தது. பனஞ்சிலாகையில் கொழுவியிருந்த ஓலைப் பெட்டியைப் பார்த்ததும் மனம் திருப்திப்பட்டுக் கொண்டது.

சத்தம் கேட்டால் தாய் அருண்டு விடுவாள் என்ற அச் சத்தில் மெதுவாகப் பக்கீசுப் பெட்டிமேல்ஏறி நின்று அந்த ஓலைப் பெட்டியைக் கையில் வைத்துக் கொண்டு பக்குவ மாக இறக்கினான் அவன்.

முற்றத்தில் சின்ராசுவும் குட்டியும் இரண்டு சிறுமிகளும் அவனுக்காக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களோடு இன்னும் இரண்டு சிறுசுகள்.

''நில்லுடா சின்ராஸ்... நானும் தங்கச்சியைக் கூட்டிக் கொண்டு வாறன்...

உள்ளே போனான் அவன்

''ம்மா... தங்கச்சியைக் கூட்டிக்கொண்டு போகட் டேம்மா...

''நீ போறதெண்டா போ... இல்லாட்டி பேசாம வீட் டில இரடா...'' அவனுடைய தாய் கத்த முதலுக்கே மோசம் வந்து விடுமோ என்ற பயத்தில் அவன் வெளியே ஓடினான். ஓடியவன் வாசலில் நின்று ''ம்மா... போட்டு வாறன்...'' என்றுவிட்டு தோழர்களுடன் நடந்தான்.

''கல்யாண வீடு தூரமேயடா...'' என்றான் அவன் குட்டியிடம்.

''இல்லையடா... அரசடி வைரவ கோயில் ஒழுங்கைக் குள்ள இருக்கு...'' என்றான் சின்ராசு.

''அவங்களும் அந்த வீட்டதான் போகினம்...'' குட்டி காட்டிய திசையில் சின்ராசாவும் கிட்டுவும் பார்த்தார்கள்.

சரிகைச் சீலைகளும் கொண்டை மாலைகளும்... கழுத்து முட்டின நகைகளுமாய் நாலைந்து பெண்டுகள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் கிட்டவந்து... இவர்களை விலத்திக் கொண்டு போனார்கள்.

''அண்ணை! இம்மளவும் பவுண் காப்போயடா...?...'' குட்டியின் தங்கச்சி குட்டியைக் கேட்டாள்.

''பிள்ளை... பவுண்தான்... அவையள் ஆரெண்டு தெரியுமே...? பச்சை சீலை உடுத்தது மில்கார முதலாளி பொஞ்சாதி... சிவப்புச் சீலை உடுத்தது பள்ளிக்கூட வாத்தியார் பொஞ்சாதி...'' குட்டி முன்னுக்கு சென்று கொண்டிருந்த பெண்டுகளை இனங்காட்டிக் கொண்டிருந்தான்.

''குட்டி நீ ஏன்டா ரண்டு பெட்டி கொண்டு வாறாய்...'' சின்ராசு கேட்க...

''ஒண்டு எனக்கும் அம்மாவுக்கும் சோறு வாங்கிறதுக்கு... மற்றது ஆச்சிக்கு சோறு வாங்க...''

''இவன் பொய் சொல்லுறான்டா... டேய்...'' என்று சின்ராசு சொல்ல... பெட்டிகளை நிலத்தில் போட்டுவிட்டு காற்சட்டையை வரிந்து கட்டினான் குட்டி.

''டேய்... டேய்... சண்டை வேண்டாமடா... இப்பிடி வழியில சண்டை போட்டா எப்பிடியடா சோறு வாங்கிறது?

குட்டியும் சின்ராசுவும் கைகலக்காமல் இருக்கக் கிட்டு கெஞ்சினான். மீண்டும் சோற்று ஞாபகம் வர நடையை எட்டிப் போட்டார்கள். இருந்தாலும் குட்டியும் சின்ராசுவும் தனகிக் கொண்டே வந்தார்கள்.

''டேய் குட்டி... குழம்பாக்கும் மணக்குது...'' என்றாள் அவர்களுடன் வந்த தேவி.

''இவளுக்கு விசர்... பருப்பெடா மணக்குது......'' என்று தேவியின் முதுகில் கிள்ளினாள் குட்டியின் தங்கச்சி.

''சனியன்... மூதேசி... உனக்குப் பருப்புக்கெலி...'' என்று தேவி திட்ட குட்டி அவர்களை முறைத்தான். அவர்கள் அடங்கிப் போனார்கள்.

கல்யாண வீட்டுக்கு முன் நிறைய சரிகைகள் கட்டி... பழுத்த வாழை மரத்தில் கலர் பல்ப் எல்லாம் தொங்க விட்டிருந்தார்கள். ஒழுங்கை ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

''இரவுக்கெண்டால் இந்த லைற் எல்லாம் வடிவாயிருக்கும்...''

''இந்தக் காரைப் பாரடா இது தான் நல்ல வடிவு...''

''டேய்... இந்த வலூனைப் போகேக்குள்ளை அறுப்பமடா...'' என்றாள் குட்டியின் தங்கச்சி.

''போடீ கள்ளநாய்... களவெடுக்கவே வந்தனி...'' என்று குட்டி கையோங்க, ''ஸ்... ஆக்களடா ..'' என்று தடுத்தான் கிட்டு.

உள்ளே சாப்பாட்டுச் ''சபை'' நடந்து கொண்டிருந்தது. முற்றத்தில் மேசை மேல் விரித்திருந்த கம்பளத்தில் நிறைகுடம் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு சிறுவர்கள் சந்தனக் கிண்ணத்தை ஏந்திக் கொண்டிருந்தார்கள்.

கிட்டுவும் தோழர்களும் பந்தலின் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். ''வாங்கோ... வாங்கோ... என்கிற வரவேற்புடன் உடுத்துப் படுத்து வந்தவர்களை உள்ளே அழைத்தார்கள்.

''டேய் சின்ராசு... அங்க பாரடா பாயாசம், வடை எல்லாம் இருக்குது...'' நாலூறக் குட்டியின் காதுகளில் கிசுகிசுத்தான் கிட்டு. அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்த சின்ன

ராசுவின் கண்களில் கணக்கிடமுடியாத பரவசம்... ''இண்டைக்குத்தான் முறையான சாப்பாடு'' அவனுடைய வாய் முணுமுணுத்தது.

குட்டியும் தங்கச்சியும் சின்ராசுவின் தங்கச்சியுமாக நிலத்தில் விழுந்து கிடந்த சரிகைகளைப் பொறுக்கி பந்துபோல உருட்டிக் கொண்டிருக்க... 'போய் அங்காலை நில்லுங்கோ...' என்று இவர்களைத் துரத்திய ஒரு புண்ணியவான் மறுபக்கம் திரும்பி ''இதுகளாலை மனிசருக்குப் பெரிய தொல்லை...'' என்று சலித்துக் கொண்டார்.

''இஞ்சாலை வாடி...'' என்று தன் தங்கச்சியை தலையில் பிடித்திழுத்துக் குட்டினான் சின்ராசு.

''இஞ்ச பாரடா வாத்தியாற்ற பெஞ்சாதியை... என்றான் குட்டி ஆச்சரியத்துடன். எல்லோரும் அந்தப் பக்கம் திரும்பினார்கள். வாத்தியார் பெஞ்சாதி கிளாசில் பாயாசம் பருகிக் கொண்டிருந்தாள்.

தட்டம் ஒன்றில் மலைபோல அழகாக வடைகளை அடுக்கியிருந்தார்கள். அதைப் பார்க்கப் பார்க்க இவர்களுக்கு எச்சில் சுரந்தது.

''குட்டி .. ரெலிவிஷனில படம் எடுக்கினமடா...'' குட்டி அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் என்னவோ யோசிச்சுக் கொண்டிருந்தான் அவன்.

''எங்களையும் ரெலிவிசனிலை தெரியுமேயடா .. ?'' பதட்டத்தோடு கேட்டாள் தேவி. ஏனென்றால் தாய்க்குப் பொய் சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறாள் அவள்.

தேவியின் கேள்வியைக் காதில் வாங்கிக் கொள்ளாமல்... தன்னைப்போன்ற சிறுவர்கள் பல வண்ண வண்ணச் சட்டைகள் அணிந்து அழகாக நிற்பதை வேதனையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் கிட்டு.

சாப்பாட்டு இலைகளை சாக்கில் அடுக்கி இருவர் தூக்கிக் கொண்டு போய் கொட்டினார்கள் கிடங்கில். இரண்டு பெட்டை நாய்கள் அவசரமாக அந்தக் கிடங்கில் குதித்து .. மூஞ்சையால் இலைகளைத் திறந்து நக்கிக்கொண்டிருந்தன.

''அங்கபாரடா எம்மளவு சோத்தை அநியாயமாக் கொட்டுறாங்கள்... கிட்டுவின் இடுப்பில் இடித்தான் குட்டி.

''குட்டி! எனக்கு நல்லாப் பசிக்குதடா... இப்பிடியே நிண்டால் எங்களை ஒருத்தரும் கவனிக்க மாட்டினம்... ஆரையன் கேளடா... என்று குட்டியைத் தூண்டினான் அவன். தன்னுடைய தாய் வீட்டில் ஒன்றும் சாப்பிடமாட்டாள் என்று அவனுக்கு கவலையாயிருந்தது. ஏனென்றால் அவள் இப்போது கொஞ்ச நாட்களுக்கு முன்தான் அவனுக்கு ஒரு தம்பியைப் பெத்திருக்கிறாள் அவள். எழுந்து சமைக்கமாட்டாள்.

அவசரமாகப் பந்தலுக்குள் நுழைந்த ஒரு பெரியவரைப் பார்த்து .. இஞ்ச... சோறு தாங்கோ...'' என்றான் குட்டி.

அந்தப் பெரியவர் நின்றார் நிதானித்தார். இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்து புருவங்களைச் சுழித்தார்... ''உங்களுக்கு எத்தனை தரம் தந்தாச்சு... உங்களுக்கு சோறு போட்டே எனக்கு சரியா மண்டை இடிக்குது...'' என்று இரைந்தவர் .. வாசலில் வந்த இன்னொரு பெரியவரைப் பார்த்ததும்... தன்னுடைய கடுகடுத்த முகத்தில் ''ரெடி மேட்'' சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ''வாங்கண்ணை... வாங்கோ...'' என்று வரவேற்றார். மனித முகங்களின் பாவங்களைப் புரிந்து கொள்ளாத .. அந்தப் பாலகர்கள் இன்னமும் அங்கே சோற்றுக்காக காத்திருந்தார்கள்... தனி ஒருவருக்கு உணவில்லையென்றால் இந்த யகத்தினை அழித்திடுவோம் .. என்று பாடிய பாரதி பாட்டு வரிகளைக் கூட இந்தப் பெரியவர்கள்தான் பல இடங்களில் பலமாகக் கூவியும் திரிகிறார்கள்...

''இஞ்சாப்பா... இதுகள் பாவம் எவ்வளவு நேரமா நிக்குதுகள்... எதாலும் குடுங்கோவன்...'' அம்பது வயதுப் பெண் கூற பந்தலுக்குள் இருந்த சனம் முழுக்க அவர்களைத் திரும்பிப் பார்த்தது.

ஒரு புண்ணியவான் சோற்றைக் கடகத்தில் அள்ளிக் கொண்டு வந்து வெளியே முற்றத்தில் வைத்தார். சிறுவர்களைப் பந்தலுக்கு ஒதுக்குப்புறமாக மண் தரையில் இருக்கச் செய்தார். பிறகு ஒவ்வொருவருடைய பாத்திரத்துக்குள்ளும் சோற்றைப் போட்டார்.

உள்ளேபோய்க் குளம்புச்சட்டியோடு வந்தவர் ''தின்னுங்கோ'' என்றபடி குழம்பை ஊற்றினர்.

அவர் சொல்லுவதற்கு முன்பே குட்டியின் தங்கச்சி மூன்று விரல்களால் சோற்றைத் தின்னத் துவங்கிவிட்டாள்.

குட்டியினதும் கிட்டுவினதும் மனம் தவிக்க... அவர்கள் பார்வை சந்தித்துப் பிரிந்தது.

''தின்னுட்டில் கொண்டு எழும்பிப் போங்கோ...'' அந்தப் பெரிய புண்ணியவான் கடுமையாக விரட்டினர்.

அந்தச் சிறுவர்கள் தங்கள் தங்கள் பாத்திரத்தைத் தூக்கினர்கள். அவர்களுடைய பருப்பு, பாயாசம், வடை ஆசையெல்லாம் புஸ்வாணமாகி... பெருமூச்சால் வெளியேறியது...

குட்டிக்கு மட்டும் கால்கள் நடக்கவிடாமல் பின்னிக் கொள்ள... பலவந்தமாகத் தன் பாதங்களை முன்னேற்றுகிறன் அவன் பார்வையால் இறுதியாக ஒரு தடவை திரும்பிப் பந்தலுக்குள் பார்த்தான் அவன்.

உள்ளே ''சபை'' அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது ''சபையோர்கள்'' போதும் என்று தடுக்கத்தடுக்க சோறு போட்டாங்கள் சபையோர் மீதமாக விட்டுச்சென்ற

சோற்றை இவர் சலிக்காமல் அலுக்காமல் கிடங்குகளில் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

''டேய்! கிட்டு கெதியா வாடா ..''

கிட்டு கெதியாக நடந்தால், அவனுடைய நிழல் அவனுக்குப் பின்னே நீளமாய் நடந்து கொண்டிருந்தது. சோற்றுப் பாத்திரங்களை தலையிலிருந்து கவிழ்க்க முனைந்த காக்கைகளைத் துரத்திவிட்டு அவர்கள் வேகமாக நடக்கிறார்கள்... அவர்களுக்குச் சரியான பசி.

*(ஈழமுரசு 4-8-85)*

---

இன்றைய பசிக்கு சோறு போடாமல், இறந்த பின்பு சுவர்க்கத்தைக் காட்டுபவன் கடவுளாகி விடமுடியாது.

---

# தீயில் விழுந்த தளிர்

கொதித்துக் குமுறுகின்ற உலையில் களைந்து வைத்த அரிசியைப் போட்ட குஞ்சுமணிக்கு முருகானந்தனின் நினைப்பு வருகிறது. மிகவும் முன்கோவக்காரனான அவனைக் கோபப் படுத்த வேண்டுமானால் சோற்றில் கல்... தட்டுப்படவேண் டும்... ஒருகணம் உலகமே ஆடிப்போய்விடும்... அப்படி ஒரு கோவம் வரும் அவனுக்கு,

முருகானந்தன் அவளுடைய சொந்த மச்சான் தான்... ஊருலகத்துடன் சேர்ந்து அவனைப் பெற்றவர்களும் ''ரவுடி'' ''கேடி'' என்று அவனை ஒதுக்கியபோது, குஞ்சுமணி மட் டும்தான் அவன்மேல் அன்பு செலுத்தி... அவனாலும் நாலு பேரைப்போல் வாழ முடியுமென்று நிலைநாட்டினாள். பார்த் தவர்களெல்லாம் மூக்கின்மேல் விரலைவைத்து, ''முருகா னந்தனா'' என்று வியக்க பத்து வருஷங்கள் அவனோடு ''வாழ்ந்து'' நான்கு பிள்ளைகளையும் பெற்றுக் கொண்டாள், குஞ்சுமணி.

முருகானந்தன் வயல்களில் கூலிவேலைக்குப் போவான். மிகுந்த முற்கோவம் கொண்டவனென்றாலும்... அவள்

கிழித்த கோட்டை அவன் என்றுமே தாண்டினதில்லை... யார் கண் பட்டதோ? நாலு வருஷங்களுக்கு முந்தி... வயலுக்கு மருந்து தெளிக்கப் போனவன். வானம் குண்டுமாரி பொழிந்ததில் பிணமாகிக் கிடந்தான். அநியாயமாகச் செத்துப் போன அப்பாவிகளில் அவனும் ஒருவனுகிப் போனுன்.

நாலு வருஷங்களாக உழைப்புப் பிழைப்பு எதுவுமே இல்லை.. நெஞ்சுக் கூட்டுக்குள் மட்டும் எரிந்து கொண்டிருந்த ஆற்ருமை நெருப்பு தேகம் முழுவதிலும் எரிவது மாதிரி இருந்தது. பிள்ளைகளின் வயிற்றைக் கழுவுவதற்காக குஞ்சுமணிதான் அக்கம் பக்கங்களில் மா இடிப்பது, குழந்தைகளைப் பள்ளிக்கு கொண்டுபோய் விடுவது போன்ற வேலைகளைச் செய்கிருள். அதுகூட ஒழுங்கான வருமானமில்லை.

ஓலைக்குடிசை... அதுகூட "ஷெல்" தாக்குதலுக்குத் தப்பாமல் ஒரு பகுதி "கொட்டுண்டுபோய் விட்டது. கிள்ளல் விழுந்த... மழையில் நனைந்து கரைந்த மண்சுவர்... அதற்கு மறைப்பாய் ஓலைத்தட்டி... "நாளைக்கு இந்தப் பொம்பிளைப் பிள்ளையள் பெரிசானல்... அதுகள் புழங்கிறதுக்கு ஒரு அச்சறுக்கையான ஒரு இடம் இல்லை..." பெருமூச்சுவிட்டுக் கொள்ளத்தான் அவளால் முடிகிறது.

அடுப்படிக்குள் சப்பாணி கட்டிக் கொண்டு அமர்ந்து சோற்றுப்பானையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் கடைக்குட்டிக்கு சக்கரைக்கட்டி ஒன்றை எடுத்துக் கொடுக்கிருள்.

"சோறு வேக... மற்ற அடுப்பில ஒரு குழம்பு வைச்சுப்போட்டால்... ராசன் வந்தவுடனை சாப்பாடு குடுத்துப் போடலாம். பாவம் என்ர பிள்ளை... காலமையும் ஒண்டும் தின்னேல்லை..." என்று தனக்குள் அவள் நினைத்துக் கொண்டாள்.

பொன்னம்பலத்தாரின் புண்ணியத்தால் மூத்தவனுக்கு ஒரு முன்னூறு ரூபா கிடைக்கிறது. ஒருநாள் அவள் மா

இடிக்கப் போனபோது அவர் சொன்னார்... ''குஞ்சுமணி... உன்ரை பெடியனுக்கு இப்ப பதினாலு வயதாகுதுதானே... எங்கட கடையிலே விடன்... அவன் வேலையும் பழகினதா குது... உனக்கும் கொஞ்சம் ஆறுதலாயுமிருக்கும்...''

''குஞ்சுமணி... நீ வேணுமென்றால் இருந்து பாரடி... என்ர பிள்ளையள் என்னைப்போலை கூலிவேலை செய்யாது... டாக்குத்தர்... எஞ்சினியர் எண்டு பெரிய பதவிக்குத்தான் வருங்கள்...'' சில வேளைகளில் முருகானந்தன் இப்படித் தான் சொல்லிப் பெருமைப்படுவான். இப்போது அவனு டைய கனவுகளைச் சிதைத்து மூத்தவனின் படிப்பைப் பாழாக்க அவள் தயங்கினாள்.

நீ நல்லா யோசிச்சுப் பார் குஞ்சுமணி... நான் உன்ரை நன்மைக்குத்தான் சொல்லுறன்... பிள்ளையளைப் படிப்பிச்சு இந்தக் காலத்திலை என்ன சுகம் கிடைக்குது ..? அவனவன் காசு காசெண்டு அங்கலாய்க்கிறான்... பேசாமல் பெடியனை என்னோடைவிடு...''

அவள் பொன்னம்பலத்தாரின் வார்த்தைக்கு இணங்கி னாள். ஆரம்பத்தில் பள்ளிக்கூடத்தால் வந்து கொஞ்சக் கொஞ்ச நேரம் கடையில் நின்றான் ராசன். வேலை நன்றாக அவனுக்குப் பிடித்துவிட்டது போலும்! கடைக்குப் போவ தில் சுறுசுறுப்புக் காட்டினான்.

பொய், களவு, சுத்துமாத்து இல்லாமல் நல்ல பெடிய னாய் இருந்தான். தானாகவே படிப்பை நிறுத்திவிட்டு இப்போ முழுசாக கடையில் நிற்கிறான். புதுவருஷத்துக்கு பொன்னம் பலத்தார் ஒரு புதுச்சயிக்கிள் கூட வாங்கிக் கொடுத்தார் அவனுக்கு.

அவள் அரை குறையாகச் சமைத்துக் கொண்டிருந்த போதுதான்... காதுகளைச்செவிடுபடுத்தும் அந்தப்படு பயங் கர ஓசை கேட்டது. அதிர்ச்சியில் அந்தச் சத்தம் எந்தத்

திசையிலிருந்து வந்தது என்பதை குஞ்சுமணியால் அனு மானிக்க முடியவில்லை.

மாமியை வேலிப் பொட்டுச்கூடாக அழைத்து ''எந்தப் பக்கத்திலிருந்து சத்தம் வந்தது'' என்று விசாரித்தாள். மாமி சொன்ன திசை மனப் பாரத்தைக் குறைத்தது. மீண்டும் அடுப்படிக்குப் போனாள்.

பக்கத்து வீட்டுப் பரமானந்தன் மூச்சிரைக்க ஓடி வந்தான்.

''குஞ்சுமணியக்கா... குஞ்சுமணியக்கா... உங்கடை ராசனை ஆமி பிடிச்சுக் கொண்டு போகுது...'' கூரையைப் பிய்த்துக் கொண்டு தலையிலே ஒரு குண்டு விழுந்த மாதிரி இருந்தது அவளுக்கு.

''ஐயோ... உண்மையாகவேயடா ..'' என்றாள் பதற்றத்தோடு.

''ஓமக்கா... அவற்ற கடைக்கு முன்னாலதான் கண்ணி வெடி வெடிச்சதாம்... சனமெல்லாம் ஓடிவிட்டுது .. தான் ஓடினால்... முதலாளி ஏதாவது சொல்லுவாரோ எண்டு பயந்து ராசன் ஓடேல்லைப் போல... அவங்கள் பிடிச்சுப் போட்டாங்கள்... நல்ல அடி...''

''என்ரை பிள்ளை நேப்பனில்லாத பிள்ளை... அதை ஏன் பிடிச்சுக் கொண்டு போனவங்கள்?... நான் என்ன செய்ய?... எனக்கு ஆர் இருக்கினம்?...'' நெஞ்சிலும் தலையிலும் அடித்துக் கொண்டு... குஞ்சுமணி குளறி அழுதாள்.

''உப்பிடி இஞ்ச நிண்டு கத்தி என்னடி பிரயோசனம்?... நீ உந்தப் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டுபோய்... காம்பிலை மன்றாடிப்பார்... மனமிரங்கி விட்டாலும் விடுவாங்கள்'' கூடிநின்றவர்களில் யாரோ கூறினார்கள்.

அடுப்பில் வைத்தது அப்படியே கிடக்க அழுதுகொண்டு கடைத்தெருவை நோக்கி ஓடினாள் குஞ்சுமணி.

''ரோட்டுக்குப் போகாதையடி... அவங்கள் தெரு நீளத் துக்கு நிக்கிறுங்கள்... இப்ப இருக்கிற ஆத்திரத்திலை சுட் டுத் தள்ளிப் போடுவாங்கள்...''

''எனக்கு என்ர பிள்ளைதான் பெரிசு... என்னைப்போக விடுங்கோ...'' அவள் ஓடினுள்.

தெருவில் ஈ, காக்கைகூட இல்லை. மரங்கள்கூட விறைத் துப்போய் ஆடாமல் அசையாமல் நின்றன. பூட்டியகேற்று களுக்குள் நின்று நாய்கள் அவலமாய்க் குலைத்துக் கொண் டிருந்தன. தூரத்தில்... கறுப்பு உருவங்களாய் ''அவர்கள்'' உலாவிக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் ஆட்களில் லாத வீடுகளின் சுவர்களுக்குப் பின்னுல்... மரங்களுக்குப் பின்னுல்... மதகுக் கரைகளில் படுத்தபடி... ''கவர்'' எடுத்து நின்றூர்கள்...

அவளைக் கண்ட ஒருவன் நீட்டிய துவக்கின் விசையில் விரல் வைத்தபடி... வேகமாக வந்தான்... சிறகு முளைக்காத கோழிக்குஞ்சை பருந்து பிடித்ததுபோல தன் பாலகனை அவர்கள் ''கொண்டுபோக'' அவள் விட்டுவிடுவாளா?...

''ஐயா... என்ர பிள்ளை அப்பாவிப்பிள்ளை ஐயா... தலை நிமிர்ந்து கதைச்சுத் தெரியாதபிள்ளை ஐயா... அதைவிட்டு விடுங்கோ... இல்லாட்டி... என்னையும் இந்த நாலு பிள்ளை களையும் சேர்த்து உங்கட கையாலையே சுட்டுவிடுங்கோ...'' அவள் கையெடுத்து அவனைக் கும்பிட்டாள். கண்களில் கண் ணீர் பெருகிக் கொண்டிருந்தது.

ஒருகணம் அவன் ஏதோ யோசித்துவிட்டு சற்றுத் தூரத் தில் பொன்னம்பலத்தாரின் கடைக்கு முன்னுல் நின்ற இன் னெருவரிடம் அழைத்துச் சென்று ''புரியாத பாஷையில்'' ஏதோ சொன்னுன்.

கடையிலிருந்த பிஸ்கட் பெட்டிகளும்.. சவர்க்காரங் களும்... எலுமிச்சம்பழங்களும்... தெருவில் வீசப்பட்டுக் கிடந்தன. வாசலில் ராசனின் புதுச்சயிக்கிள் புரண்டு மல் லாந்து அனுதையாய்க் கிடந்தது.

அந்த இன்னொருவன் இவளைத் துரத்தினன் சைகையால்.

',என்ர பிள்ளையை விடுங்கோ... இல்லாட்டில் நான் போகமாட்டன்...'' அவள் அழுதழுது சொன்னாள். அவளுடைய அழுகை அவர்களைக் கரைப்பதாய்த் தெரியவில்லை. தான் கூறுவது அவர்களுக்குப் புரியவில்லை என்று அவளுக்குப் புரிந்தது. பள்ளிக்கூட வாத்தியார் வீட்டுக்கு ஓட்டமாய் ஓடினாள்.

''என்ரை வாத்தியார்... உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்... மாட்டன் எண்டு சொல்லிப் போடாதேங்கோ... நான் சொல்லுறது அவங்களுக்கு விளங்கேல்லை... அவங்கள் சொல்லுறது எனக்கு விளங்கேல்லை வாத்தியார்... ஒருக்கால் வந்து கதைச்சு என்ரை பிள்ளையை மீட்டுத் தாருங்கோ... தேப்பனில்லாத பிள்ளை வாத்தியார்...''

வாத்தியார் யோசித்தார்... ''உனக்காக போறதிலை எனக்கொண்டுமில்லை யோனை... அவங்களோடை சும்மா கதைக்கிறதுக்காக... அவங்கள் இப்ப என்ன என்ரை இன சனமே... நிக்கிற ஆத்திரத்திலை என்னையும் சேர்த்துப் பூட்டிப் போடுவாங்களோ தெரியாது... எதுக்கும் நீ வீட்டை போ... மற்றப்பிள்ளையளை வெருட்டாதை... நான் கதைச்சுப் பார்க்கிறன்...'' என்று பெரியமனது பண்ணி எழுந்தார்.

மூன்று நாட்களாய் காம்புக்கும் வீட்டுக்குமாய் அவளும் வாத்தியாரும் அலைந்து திரிந்ததில் ''விசாரணையின் பின் விடுவிப்போம்'' என்று வாக்களித்தார்கள். ''விசாரணைகள் எப்படி இருக்குமென்று அவள் கேள்விப்பட்டிருந்ததால் வயிறு தீப்பந்தமாக எரிந்தது.

இரவில் அவளால் கண்மூடித்தூங்க முடியவில்லை. காற்றுக்குச் சருகு சத்தப்பட்டாலும் மனது பதைத்துத் துடித்தது. தற்செயலாய் சோர்ந்து அயர்ந்தாலும்... பெருவிரல்கள் பிணைக்கப்பட்டு தலைகீழாகத் தொங்கவிடப்பட்ட நிலையிலும்.. தண்ணீர் நிரம்பிய தொட்டியில் அமுங்கி மூச்சுத் திணறுவது போலவும்... கைகளில் கண்களில் மின்

சாரம் தாக்கித் துடிப்பது போலவும்... பொல்லுகளால் தலை யில் அடிப்பது போலவும்... ராசனைப் பல்வேறு நிலையிலும் கெட்ட கெட்ட கனவுகளாகத் தெரியும்.

''ஐயோ... என்ர பிள்ளையைக் கொல்லுறுங்கள்...'' என்று குளறிக் கொண்டு எழும்புவாள் குஞ்சுமணி. இப் படி இரண்டு வாரங்கள் கழிந்தன. ஒவ்வொரு நாளும் அவள் அவர்களை மன்றுடிக் கொண்டுநாளிருந்தாள்.

ஒருநாள்... ''இனிமேல் அந்த ஏரியாவில் என்ன நடந் தாலும் வந்து தங்களுக்கு அறிவிக்கவேணும் என்றும்... ராசனை சந்தேகம் வந்தால் பிடிப்போம் என்றும்கூறி எச்ச ரித்தபின் அவளிடம் ஒப்படைத்தனர்.

ராசனைப் பிடித்தபோது . அவள் குளறியபோது எட்டி யும் பார்க்காத சனம்... ராசன் விடுதலையாகி வந்ததை வேடிக்கை பார்க்க மட்டும் கூட்டம் கூட்டமாய்க் குவிந் தது மட்டுமன்றி சுடுதண்ணி ஒத்தடம் குடு என்றும், பச்சை முட்டை அடித்துக்குடு என்றும் ஆலோசனை வழங்கியது.

ராசன் மூன்று நாளாய் முகம் குப்புறப் கிடந்தான். குஞ்சுமணி மிகவும் வற்புறுத்தி தான் முகம் கழுவ வைத் தாள் உடுப்பு மாற்றுவித்தாள், சாப்பாடு தின்ன வைத் தாள்.

''ஐயா உன்னை அடிச்சவங்களே என்ன கேட்டவங் கள்?...'' என்று சாடையாகக் கதைவிட்டுப் பார்த்தாள். அவன் வாய் திறக்கவில்லை. அந்தக் கதையே பேச விரும் பாத மாதிரிக் கிடந்தான்.

மாலையில் பொன்னம்பலத்தார் ''ஹோர்லிக்ஸ்'' போத் தலும், தோடப்பழங்களுமாக ராசனைப் பார்க்க வந்தார். அவருடைய கேள்விகளுக்கு மட்டும் ராசன் பதில் சொன் ஞன். அந்தப் பதிலில் விரக்தி தொனித்தது.

''உன்ரை பூர்வ புண்ணியப் பலனைக்கும் குஞ்சுமணி... பிடிச்சுக் கொண்டுபோய் விட்டிட்டான்கள்... ஆத்திரத்திலே அந்த இடத்திலேயே சுட்டிருந்தால் என்ன செய்யிறது?... கண்ணுக்கு வந்தது கண்ணிற் புருவத்தோடை போட்டு தெண்டுநினை...'' அவர் ஆறுதல் கூறிவிட்டு போகும்போது சொன்னார். ''அப்ப... நாளையில் இருந்து ராசன் கடைக்கு வா...''

குஞ்சுமணிக்கும் கொஞ்சம் பயம் தெளிந்துவிட்டது. ''பயந்து பயந்து மூலைக்குள் இருந்தால் ஆர் வந்து சோறு போடப் போகினம்... ராசன் கடைக்குப் போறதுதான் நல்லது...'' என்று எண்ணிக் கொண்டாள்.

காலையில் நேரத்தோடு எழும்பி ராசனுக்குச் சாப்பாடு செய்து முடித்தாள். ''அவனை எழுப்புவோம்'' என்று உள்ளே போனபோது ராசனின் படுக்கை வெறுமையாகக் கிடந்தது. அதன்மேல் விரித்தபடி ஒரு கடிதம்... அவளுக்கு எல்லாம் புரிந்தது.

''அம்மா... வயலையும் வீட்டையும் தவிர வேறு எதையுமே சிந்திக்கத் தெரியாத அப்பா அநியாயமாகக் கொல்லப்பட்டார்... வீடு - கடை - கஷ்டம் என்று இருந்த நான் அவர்களால் சித்திரவதை செய்யப்பட்டேன்... இதற்கெல்லாம் காரணம் நாங்கள் அப்பாவிகளாக இருந்ததுதான்... இனியும் வீடு – உழைப்பு - வறுமை என்ற வட்டத்திலேயே சுற்றி வருவதால் எமக்கு விடிவில்லை . எங்கள் மீது... பிரயோகிக்கப்படும் இந்தக் கொடூரங்களை நாம் உடைத்தெறிய வேண்டிய நேரம் இதுதானம்மா .''

அவள் அந்தக் கடிதத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். ''ராசன்... உன்னைக் குழந்தைப்பிள்ளை எண்டு நினைச்சனடா... நீ பெரியமனுஷனாயிட்டாய்... உன்னை சின்னஞ்சிறியதளிரை விடுதலை நெருப்பில் குதிக்கவைத்து விட்டார்களடா... நீ வெற்றியோடு திரும்புவாய் என்ற நம்பிக்கையோடு... இந்தக் குடிசை வாசல் காத்திருக்கும்...'' அவள் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் உருண்டு மண் மீது விழுந்து காய்ந்தன.

# குடிசைக்குள் சில கோபுரங்கள்

சிவப்புநிற இரும்புக்கேற்றின் கொளுக்கியைக் கையால் திறந்துகொண்டு உள்ளே நுழைகிறார் சதாசிவம். மோட்டார் சயிக்கிளை துணியொன்றினால் தூசு துடைத்துக் கொண்டிருந்த உலகநாதன் கொளுக்கி விழுந்த சத்தம் கேட்டு நிமிர்ந்தார்.

சதாசிவமா!... வா... வா... ஏன் வானம் மப்பாத் தெரியுதென்று யோசிச்சன்... இப்பதான் விளங்குது... ஏன் டாப்பா... இந்தப்பக்கம் வரக்கூடாதென்று ஏதாலும் சபதம் கிபதமா?.. இந்த வரவேற்பு சதாசிவத்தின் நெஞ்சை முள்ளாய்க் குத்தியது. இன்னும் சில நிமிடங்களில் தான் வந்த காரணத்தைச் சொன்னதும் இப்படியே இவன் உற்சாகமாய் இருப்பானா என்று மனம் எண்ணித் தவித்தது.

''உள்ளேவா... இதிலை இரு... யோகேஸ்... சதாசிவத்துக்குத் தேத்தண்ணி கொண்டுவா ..'' உலகநாதன் பரபரத்தான்.

''ஆறு பிள்ளையளும் ஆளுக்கொரு திசையிலை போட்டுதுகள்... இப்ப எனக்கு யோகேசு பிள்ளை... அவளுக்கு நான்

பிள்ளை... இதுதான் நிஜம்... சரி... நீ எப்பிடி இருக்கிறாய்?... ரஞ்சினிக்கு ஏதாவது சம்பந்தம் சரிவந்துதோ...'' திடீரென்று வெளியே ஓடிவந்துவிடவேண்டும் போல இருந்தது சதாசிவத்துக்கு.

''இஞ்சையப்பா... உலகநாதன் உங்களோடைதானே படிச்சவர்... அவரிட்டை போய் கொஞ்ச காசு கேட்டுப் பாருங்கோவன்... பிறகு குடுக்கலாம் தானே... அந்தரம் ஆபத்துக்கு கடன் வாங்கிறது அப்பிடி ஒண்டும் கேவலமில்லை... உலகநாதன் உங்களுக்கு இல்லையெண்டு சொல்ல மாட்டார்... இவ்வளவு காசைச் சிலவளிச்சுப் பிள்ளையைப் படிப்பிச்சுப்போட்டு... வேலைக்குப் போகவிட வக்கில்லை எண்டால்... அந்தப் பிள்ளையின்ரை பிஞ்சு மனம் என்ன பாடு படும்?...''

மனைவின் சொல்லைக் கேட்டுக் கொண்டு வந்துவிட்டாலும் ''உதவி செய்'' என்று வாய்விட்டுக் கேட்க மனம் கூசியது. பலதடவை உதடுவரை வந்துவிட்ட வார்த்தைகள் உருப்பெறுமல் உடைந்துபோய் விட்டன.

அவரது மகள் ரஞ்சினிக்கு வெளிமாவட்டம் ஒன்றில் நியமனம் கிடைத்திருக்கிறது. மறுநாள் காலை புறப்பட வேண்டும். வெறுங்கையோடு போக முடியாது.

''என்னடாப்பா... ஏதோ தயங்கிறாய் போலைகிடக்கு... ஆறுமுதல் தேத்தண்ணியைக் குடி... குடிச்சிட்டு விஜயத்தைச் சொல்லு... வீட்டிலை ஏதும் பிரச்சினையோ...'' சதாசிவம் யோகேஸ்வரி கொண்டுவந் வைத்துது விட்டுப்போன தேனீரை எடுத்துத் குடித்தார்.

''டேய்... நாங்கள் ஒண்டாப் படிச்ச காலத்திலை எங்களுக்குள்ளை ஒரு ஒளிவு மறைவும் இல்லை... இப்பமட்டும் என்னடா யோசினை...'' சதாசிவம் எச்சில் விழுங்கித் தொண்டையை ஈரப்படுத்திக் கொண்டார்

''லோகு .. ரஞ்சினிக்கு ஒரு வேலை வந்திருக்குது... நாளைக்கு இங்கிருந்து புறப்படவேணும்... தேவையான சாமான் சக்கட்டு வாங்க காசு கொஞ்சம் தேவை... ஒரா ளிட்டைக் காசு கொஞ்சம் சொல்லி வைச்சன்... பொறுத்த நேரத்திலை கைவிரிச்சுப் போட்டான்... அதுதான் உன் னட்டை...'' சதாசிவம் குழைந்தார். அம்பத்தைந்து வருஷ கால வாழ்க்கையில் யாரிடமும் கேட்காத கடன்... ஒவ் வொரு மயிர்க்காலும் கூசியது.

உலகநாதன் மூக்கு நுணியை சுட்டுவிரலால் தடவி விட்டுச் சொன்னார்.

''உனக்கு உதவாமல் வேற ஆருக்கடா உதவுறது... ஆனா... ஆனா... நேற்றைக்குத்தான் கிடந்த காசெல்லாம் பொருத்திக் கொண்டுபோய் கட்டிப்போட்டன்... இப்ப முந் தின மாதிரி ''பிஸ்னஸ்'' சும் இல்லை... அரைவாசிச்சாமானை அள்ளிக்கொண்டு போட்டான்கள்... பெடியளெல்லாம் வெளிநாடு வெளிநாடெண்டு... இப்ப கடையிலை நிக்க... ஒழுங்கா ஒரு பெடியன் கிடைக்குதில்லையடா...''

''எண்டாலும் பொறு... யோகேசு... இங்கை வா...'' யோகேசு... வந்தாள்.. ''சதாசிவத்துக்கு கொஞ்சக்காசு தேவைப்படுது... நீ உன்னட்டை இருக்கிற காசிலை குடு... பிறகு பாப்பம்...''

ஒருகணம்... யோகேஸ்வரி உலோகநாதனை முறைத் தாள். பிறகு சொன்னாள்...

''ஐயோப்பா... இப்ப கொஞ்சம் முந்தித்தான்... இருந்த காசை கண்மணியக்கா கேட்டுக் குடுத்திட்டன்... இப்ப என்ன செய்யிறது?...''

சதாசிவம் காற்றுப்போன பலூனைச் சுருங்கிப்போனார்... வசதியான நண்பன்... அவன் நினைத்தால் உதவி செய்ய லாம்... ஆனால்...

''குறை நினையாதையடா சதா... நீ இப்பிடி திடீரென்று கேட்டால் நான் என்ன செய்யிறது?...'' சதாசிவம் வீட்டை நோக்கி நடந்தார்.

வெய்யில் செருப்புகளுக்கூடாகக் காலில்சுட்டது. ஒழுங்கைக்குள் இறங்கி நடந்தார். எதிரே பிள்ளையார் கோயில் கோபுரம் கண்ணில் தெரிந்தது...

''எல்லாருக்கும் அள்ளி அள்ளிக் குடுக்கிற கடவுளுக்கு... எங்களை மட்டும்... எங்கடை தவிப்பை மட்டும்... புரிஞ்சு கொள்ள முடியேல்லை...'' வெறுப்போடு முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்தார்.

''யோசினை கடுமைபோல இருக்குது...'' பக்கத்தில் குரல்கேட்டு நிமிர்ந்தார் சதாசிவம்... முருகன் காவிப்பற்கள் தெரியச் சிரித்தான்.

''இரண்டு தடவை கூப்பிட்டனான்... நீங்கள் திரும்பேல்லை...''

''எனக்குக் கேக்கேல்லை முருகன்... நான் ஏதோ யோசினையிலை நடந்திட்டன்...''

''என்ன யோசினை...''

''ஒண்டுமில்லை...'' என்றார் சதாசிவம்.

''ஒண்டுமில்லை என்ற இடத்திலைதான் ஆயிரம் இருக்கும்... நான் என்ரை அனுபவத்திலை கண்டது.... சும்மா சொல்லுங்கோ... என்ன பிரச்சினை... இப்ப பிரச்சினை ஒண்டும் இல்லாத மனுஷன் எங்கை இருக்கிறான்... ஒவ்வொரு மனுஷனுக்குள்ளையும்... ஒவ்வொரு ஏக்கம்... ஏமாற்றம்... இதுதான் வாழ்க்கை... மற்றவனுக்கு மனம்விட்டுச் சொல்லிறதாலை பிரச்சினை தீருதோ இல்லையோ... ஆனா மனப்பாரம் குறையும்... நீங்கள் சொல்ல விரும்பாவிட்டால் விடுங்கோ...''

''சீச்சி... அப்படியில்லை முருகா... என்ரை கஷ்டம் என்னோடை போகட்டும்... உனக்குச் சொல்லி ஏன் உன்னையும்... வருத்தவேணும்?...''

முருகன் பெரிதாகச் சிரித்தான். ''விருப்பமுள்ளவையளுக்காக வருத்தப்படுகிறதும் ஒரு சுகம்தான்...''

சதாசிவத்துக்கும் யாரிடமாவது ஆறுதல் பெறவேணும் போலத்தான் இருந்தது.

ரஞ்சினிக்கு வேலை கிடைத்ததையும்.. அதற்கான செலவுக்காக பணம் தேடிப் படிப்படியாய் ஏறி இறங்கியதையும் சொன்னார். முருகன் மௌனமாக நிற்க... சதாசிவம் நடந்தார்.

வீட்டுக்குள் நுழைந்தபோது சில கணங்கள் கும்மிருட்டாகத் தெரிந்தது. செருப்பை மூலையில் கழற்றிவிட்டு சால்வையை உதறி கைப்பிடியிற் போட்டு கைகளைக் கோர்த்தபடி கதிரையிற் சாய்ந்தார் சதாசிவம். கொளுத்தும் வெய்யிலின் கோரம் உடம்பெல்லாம் பற்றி எரிவதுபோல இருந்தது.

போன விஷயம் காயா பழமா என அறிந்துவிடும் நோக்கில் அவரடிக்கு வருவதும் போவதுமாக இருந்த மனைவி ஜெயலட்மியை வேதனையோடு பார்த்தார்.

பழமாக இருந்தால் வந்தவுடனேயே சொல்லியிருக்கமாட்டாரா? நான்கு நாட்களாக உறவினர், நண்பர், தெரிந்தவர் என்று எல்லா இடமும் அலைந்ததுதான் மிச்சம்... கண்டவுடனே காதுவரை பல்லுத் தெரியச் சிரித்தவர்கள் கூட கஷ்டம் என்று உதவி கேட்டபோது கைவிரிக்கத்தான் செய்தார்கள். துன்பம் வரும்போதுதான் உண்மையான நண்பர்களைத் தெரியுமென்று சும்மாவா சொன்னார்கள்?

''உலகநாதன் வீட்டிலை நிண்டவரே...? பொறுமையிழந்துபோய் ஜெலட்சுமி கேட்டாள்.

''ம்...'' என்ருர்.

''என்ன சொன்னவர்?...'' என்ருள்.

''என்னத்தைச் சொல்லுறது?... எல்லாரைப் போலத் அவனும்...'' விரக்தியோடு சொன்ஞர்.

''எல்லாம் எங்கடை கஷ்டகாலம்தான்... இதிலை அவனே இவனேக் குற்றம் சொல்லி என்ன பலன்...'' அவள் அவரைச் சமாதானப்படுத்த முயன்ருள்.

''அவங்கள் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை... நான் போய்க் கேட்டவுடனே... தங்கடை கஷ்டங்களையெல்லே ஆதியோடு அந்தமாக தலையிலை கட்டிப் போடுருன்கள்...''

''சூாசுக்காரரின்ரை குணமே இப்பிடித்தானப்பா... இல்லை... இல்லை... எண்டு நீலிக்கண்ணீர் வடிச்சுத்தான் சிவிப்பார்கள்... ஏதோ கையெடுத்துக் கும்பிடுகிற கடவுள் எங்களைச் சும்மாவே விடப்போகுது...'' பிள்ளையார் கோயில் இருக்கும் திசையைப் பார்த்து பெருமூச்சுவிட்டாள் ஜெயலட்சுமி...

''நானும் உப்பிடித்தான் நினைச்சுக் கொண்டிருந்தஞன்... ஆஞ இப்ப எல்லா நம்பிக்கையும் கெட்டுப் போச்சுது...'' சதாசிவத்துக்கு கண்கள் கலங்கின். சால்வையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''சீ... என்னப்பா இது... சின்னப்பிள்ளையள் மாதிரி... இதெல்லாம் ஒரு கஷ்டம் எண்டு கலங்கிறியளே...'' கூறிவிட்டு இடத்தை விட்டு விலகினுள் ஜெயலட்சுமி. அவள் கண்ணிலும் கண்ணீர்...

தகரப்படலை திறக்கும் சத்தம் கேட்டது... அவசரமாய் முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தார் சதாசிவம். முருகன் உள்ளே வந்து விறுந்தைத் திண்ணையில் அமர்ந்தான்.

''நான் ஒண்டு சொன்னால் தப்பாக நினைக்கமாட்டி யளே...'' முருகன் எதற்கு அத்திவாரமிடுகிறான் என்று ஊகிக்க முடியாமல் சதாசிவம் அவனைப் பார்த்தார்.

''ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாக நான் சேமிச்ச பணம் இதிலை மூவாயிரம் இருக்கு.. நீங்கள் எடுங்கோ... பிறகு.. உங்களுக்கு வசதி வரேக்குள்ளை தாங்கோ...''

''முருகா...'' என்றார் சதாசிவம் உரத்தகுரலில் உணர்ச்சி வயப்பட்டவராய்.

''முருகா... நான் நாலு நாளாய் பணத்தைத்தேடி அலைஞ்சன்... ஆனா மனத்தைத் தேடேல்லை... பணத்தைத் விட அடுத்தவனுக்கு உதவுகின்ற மனம்தாண்டா பெரிசு... எனக்கு ஆபத்து நேரத்திலை பணம் இல்லை என்று சொன்னவங்களெல்லாரும்... என்ரை வீட்டுக்குள்ளை இருந்து என்னோடை ஒன்றாகத் தின்றவர்கள்.. ஆனால் வாசலிலை நிற்க வைச்சு... உனக்கென்று பாத்திரம் ஒதுக்கி... அதிலை சோறு தின்ற நீ... உனக்கு இப்பிடி ஒரு இதயம் இருக்குமென்று நான் உணரேல்லையடா... நீதாண்டா உண்மையான நண்பன்... உள்ளை வாடா...'' முருகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டார் சதாசிவம்.

எங்கோ வெளியில் சென்றிருந்த ரஞ்சினி... உள்ளே வந்தாள், ''ரஞ்சினி . இந்தக் கோபுரம் பனை ஓலையாலை அமைத்த குடிசைக்குள்ளை ஏன் இருக்குது தெரியுமே .. அடுத்தவனை நேசிக்கிற நெஞ்சம் இருக்கிறதாலைதான்...'' ரஞ்சினியைப் பார்த்துச் சொன்னார்.

---

அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை ஆகியவற்றைத் தன்னகத்தே தேக்கியுள்ள மனிதன் என்றுமே சோடை போவதில்லை.

---

# கருகும் மொட்டுக்கள்

"கீச்... கிச்.. கீ... கீ..."

"குக்குறூக்... குக்குறூக்..."

"கா... காஹா... கா..."

வைகறையின் வருகையை பறவைகள் சங்கேத மொழியில் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருந்தன.

அசைவற்றுப் படுக்கையில் படுத்திருந்தபடியே பறவைகளின் குரலை ரசித்துக் கொண்டிருந்தாள் லலிதா.

"கொக்... கொக்... கொக்கராக்கோ..."

"நான் கூவினால் தானே பொழுதுவிடியும்" என்கிற ஆணவத்தோடு சேவல் ஒன்றின் குரல் அட்டகாசமாய் அமைதியைக் கிழித்தது.

பக்கத்து வீட்டுக் கிணற்றடியில் யாரோ தண்ணீர் அள்ளும் ஓசை கேட்டது.

''டாண்... டண்டாண்...'' கோயில் மணியோசை ஓங்கார நாதமாய் எங்கும் வியாபித்தது.

போர்வையைக் கழற்றிவிட்டு எழும்பி வெளியே வந்தாள் லலிதா. நேரத்தைப் பார்த்தாள். இன்னமும் ஒன்றரை மணி நேரம் இருக்கிறது அவள் தன் கடமைக்குச் செல்ல.

குளிர்ந்த கிணற்றுநீரில் குளித்துவிட்டு வந்தாள் அவள். நீளமான தலைமுடியை வாரிக் கொண்டை போட்டுக் கொண்டாள். வெள்ளைப் புடவையை உடம்பில் சுற்றிக் கொண்டாள்.

வழமைபோலவே படலைவரை வந்து வழியனுப்பினாள் அவளுடைய தாய். மனதிலுள்ள சபலங்கள், கனவுகள், கற்பனைகள் எல்லாவற்றையும் வழித்துவிட்டு, வீதியில் இறங்கியபோது... முற்றும் துறந்த முனிவன் மாதிரி மனது மென்மையாகியிருந்தது.

பஸ்நிலையத்தில் அவளைப் போலவே பள்ளிப் பிள்ளைகளும் வெள்ளைச் சீருடைகளுடன் கூட்டமாய் நின்றனர். அவர்களின் சிரிப்பு, கலகலப்பு அவளை எதற்கோ ஏங்க வைத்தது.

முன்பக்கத்துச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த கடதாசியில் கண்களால் சிரித்துக் கொண்டிருக்கும் இளைஞனின்மேல் அவளுடைய பார்வை நிலைத்தது. மனதில் எதுவோ இனந்தெரியாமல் நெருடியது. அவளைவிட இளையவன். இளம் வயதில் இப்படியொரு தியாகத்தை இவர்கள் எப்படிக் கற்றுக் கொள்கிறார்கள்? காலத்தின் தேவையை உணர்ந்து இவர்கள் கடமையை நோக்கிப் புறப்படுகிறார்கள்...

பஸ் வந்து நின்றதும் எல்லாரும் முண்டி அடித்துக் கொண்டு ஏற... உள்ளே நசுக்கப்பட்டவர்கள் முகத்தைச் சுழிப்பது தெரிந்தது.

வண்ண வண்ணச் சேலைகள்... பூத்துக் குலுங்கும் புத்தம் புதுமலர் போன்ற புன்னகைகள்... இதயத்தின் அடி

யில் மெல்லிய நூல் இழையாய் ஒரு துன்பரேகை படர்ந்தது, அவளுக்கு.

பஸ்ஸிலிருந்து இறங்கியவுடனேயே... பூஞ்சோலேக்கு நடுவே கம்பீரமாக நின்றது ஆஸ்பத்திரிக் கட்டிடம். உள்ளே வலியையும், வேதனையையும் வைத்துக் கொண்டு எப்படி இவ்வளவு கம்பீரமாகத் தோற்றமளிக்க முடிகிறது...? என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

வாசலில் நுழைந்தபோதே... ''குட்மோனிங் லலி...'' என்ற உற்சாகமான குரல் அவளை வரவேற்றது. அவளுளுடைய தோழி பிலோமினுவின் குரல்தான் அது.

''குட்மோனிங் பிலோமினு '' இருவருமாக உள்ளே போனுர்கள்.

அவளுடைய கடமை துவங்கிவிட்டது. ஒவ்வொரு அறையிலும் நுழைந்து நோயாளிகளின் ''டெம்பரேச்சர்'' அளந்து மட்டையில் குறித்துக் கொண்டிருந்தாள் அவள்.

புன்னகையோடு மல்லாந்து படுத்திருக்கும் சிலர், வேதனையோடு அனுங்கிக் கொண்டு படுத்திருக்கும் சிலர்... அவளைக் கண்டதும் ஊசிபோடப் போகிருளோ என்கிற பயத்தில் அழத்துவங்கும் சின்னஞ்சிறுசுகள்... அனைவரையும் தன்னுடைய இனிய வார்த்தைகளால் அணைத்துப் பரிவோடு அவளுடைய பணி தொடர்ந்தது.

தொங்கலிலுள்ள அறைவாசலில் இறுகிய சோகத்தோடு ஒரு இளைஞன் நிற்பது தெரிந்தது. அறைக்குள் நுழைந்தவள்... அந்தக் கட்டிலில் கிடந்த உருவத்தைப் பார்த்தாள்... மூளையின் ஓரத்தில் மின்னல் வேகத்தில் ஓர் அதிர்ச்சி...

மண்டையில் பலமான அடிபட்டிருக்க வேண்டும். சுற்றியிருந்த துணியில் பச்சைக்குருதி ஊறிக்கொண்டிருந்தது.

விசாரித்தபோது... மயங்கிய நிலையிலே நடுச்சாமத்தில் அவனுடைய நண்பர்கள் கொணடுவந்து சேர்த்தார்களாம்...

இன்னமும் மயக்கம் தெளியவில்லை. துளித்துளியாக குளுக் கோஸ் இறங்கிக் கொண்டிருந்தது.

பொங்கிய கண்ணீரில் அவனுடைய உருவம் தேய்ந்து மங்கலாகியது. எளிய உணர்ச்சிகளின் பிடியில் சிக்கித் தன் புனிதமான கடமைக்கு களங்கத்தை ஏற்படுத்திவிடக் கூடாதே என்று மனம் எச்சரித்தது.

அவள் ஒருசில விநாடியில் தன்னைச் சமாளித்துக் கொண் டாள்.

நோயாளிகளுக்கு ஒத்தடம்கொடுத்து, கட்டுக்களைப் பிரித் துப்...புண்களைச் சுத்தமாக்கி... மீண்டும் மருந்திட்டுக் கட்டி... புதிதாக வரும் நோயாளிகளை அன்போடு ஏற்று .. 'டிசார்ஜ்' ஆகியவர்களை வழியனுப்பி... அவளுடைய கடமைகளின் நெரிசலில் நேரம் போனதே தெரியவில்லை.

மத்தியானச் சாப்பாட்டு நேரம். கனத்த இதயத்தோடு விடுதி அறைக்குள் நுழைந்தபோது, பிலோமினா கைகழுவிக் கொண்டிருந்தாள்.

''லலி... இண்டைக்கு உனக்கு மிகவும் பிடித்தமான ''லஞ்ச்'' கொண்டு வந்தனான்... என்னெண்டு சொல்லு பாப்பம்...'' சிறுகுழந்தையைப்போல் குழைந்தாள் பிலோ மினா.

கள்ளங்கபடமில்லாத அந்த வெள்ளை உள்ளத்தின் குழைவு அவளை மென்மையாக ஊடுருவியது.

'எனக்குத் தலையை வலிக்குது பிலோமினா... நான் கொஞ்ச நேரம் தூங்கிறன்... நீ சாப்பிடு...

பிலோமினாவின் முகம் சட்டென்று வாடியது. அதைக் கண்டும் காணாதவளாய் கட்டிலில் சரிந்து .. கண்களை மூடி னாள் லலிதா.

கட்டிலில் கிடந்த அவனுடைய உருவம் கண்ணுக்குள் வந்தது. பயங்கரமான நினைவலைகள் இதயத்துச் சுவரில் பலமாக மோதத் தொடங்கின.

அந்தக் காலத்தில்... அவளுள் ஆயிரங் கற்பனைகளை வளர்த்து விட்டவன், அவன் அந்தக் கற்பனைகள் எல்லாம் கனவாகிப் போய்விட்டன. மயக்குகின்ற அவனுடைய சிரிப்பு மட்டும் அடிக்கடி நினைவில் வந்தது.

மாணவப் பருவத்திலேயே எதிலும் அவன் ஒரு சாதனைப் புலிதான். படிப்பு விளையாட்டு, நீச்சல், இசை எல்லாவற்றிலும் அவன் அவனேதான்.

அவனை அவனுடைய நண்பர்கள் எல்லாரும் 'கண்ணகி' என்றுதான் அழைப்பார்கள். ஏனென்றால் எதற்குமே துணிந்து நியாயம் கேட்பது அவன்தான். இதனால் அவன் பல விரோதிகளைச் சம்பாதித்திருந்தான்.

ஒருநாள் அவன் கேட்டான் ''உன்னை விரும்புறபோதே எனக்கு நல்லாத் தெரியும்... நாங்க இணையமுடியாதெண்டு... ஆனா... உன்ரமனசால ஒரே ஒரு தடவை நான் உங்களை நேசிக்கிறன்'' என்று சொல்லிவிடு... காலங் காலமாக எனக்கு அதுபோதும்...''

அவளுடைய பார்வை தாழ்ந்தது. நீண்ட நேர மௌனத்தின் பிறகு மீண்டும் அவன் கேட்டான். ''அப்போ... உன்னை எனக்குப் பிடிக்கேல்லை என்றாவது சொல்லு லலி... நான் எங்காவது போயிடுறன்...''

அவள் தலை நிமிரவில்லை.

மீண்டும் சிறிய அமைதியின் பிறகு அவனே தொடர்ந்தான். ''எனக்குத் தெரியும் லலி... உன்னால அப்பிடிச் சொல்லமுடியாது... ஆனா உனக்கு ஒன்று மட்டும் சொல்லுறன்... எந்தச் சமுதாயத்துக்கு பயந்து நீ மௌனம் சாதிக்கிறியோ... அந்தச் சமுதாயத்துக்கு எதிராய் என் போன்ற

வர்களிடமிருந்து புரட்சி வெடிக்கப் போகுது... அந்தப் புரட்சித் தீயிலே ஒருவேளை நான் கருகிப் போகலாம்... ஆனா லும் அடுத்த தலைமுறை உன்னையும் என்னையும்போலப் புற முதுகிடாது லலி...''

அப்போது அவள் தனக்குள் எண்ணிக் கொண்டாள். ''இதெல்லாம் இளமை வேகத்தால் இயலாமைக்கு விடப் படும் சவால்'' என்று.

ஆனால்... அந்த வார்த்தைகள் எவ்வளவு வைராக்கிய மானவை என்பது இப்போதுதான் புரிந்தது.

அதற்குப் பின்னர் அவனைப்பற்றி அவளுக்கு எதுவுமே தெரியாது. ஊமைக்கனவாய் அந்த நாட்கள் நெஞ்சில் உறங்கின.

கல்லூரிப்படிப்பு முடிந்து இரண்டு வருடங்களாக வேலைக்கு விண்ணப்பித்து விண்ணப்பித்து... ஏமாற்றமாகிப் போக... அரைகுறை எதிர்பார்ப்புடன் தாதியர் பயிற்சிக்கு விண்ணப்பித்துத் தெரிவாகினாள்.

பயிற்சி முடிந்து கடமையில் ஈடுபடுத்தப்பட்டபோது, அந்தக் கடமையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டாள் லலிதா.

மென்மையான பிஞ்சுக்கரம் ஒன்று அவளுடைய நெற்றி யில்பட்டது. மெதுவாக இமைகளைப் பிரித்தாள்.

''என்ன லலி... திடீரென்று... என்ன செய்யுது?...'' சோர்ந்த மனசுடன் பிலோமினா கட்டிலில் அமர்ந்தாள்.

''அந்த... அந்த... பேஷன்ற்...'' அவளுடைய குரல் தடு மாறியது. ''பீளீடிங் இன்னும் இருக்கிறதாலே... சீரியஸ் கேஸா இருக்கு லலி.. ஒக்சிசன் காஸ் கொடுத்திருக்கு... ''பிறெயின் ஸ்பெசலிஸ்ற்'' வந்திருக்கிறார்... எப்பிடியும் ''சக்சஸ்'' ஆயிடும்... அந்தளவுக்கு ஸ்ராவ் நேர்ஸ்மாரும், டாக்டரும் முயற்சி செய்யினம் லலி...''

அவள் குப்புறப் படுத்திருந்தாள்.

''ஒரு நாளைக்கு எத்தனையோ பேர் இந்த உலகத்திலே சாகிறார்கள்... ஆனா... எங்கட ''போய்சி''ன்ர இழப்புக்களை எங்களாலே தாங்கவே முடியுதில்லை லலி...'' பிலோமினாவின் வார்த்தைகளில் அவள் ஒரு கணம் திடுக்குற்றாள்.

''அம்...மா.. ஆ...'' வேதனையில் அவள் துடித்தாள்.

''ஓய்வுக்கான நேரம் முடிந்து... மீண்டும் கடமைக்கான அழைப்பு வந்தது.

'நீ ''றெஸ்ற்'' எடு லலி... நான் போறன்...'

''வேண்டாம் பிலோமினா... நானும் வாறன்...'' எழுந்து முகங்கழுவிக் கொண்டு கடமைகளைத் தேடி அவள் விரைந் தாள். கடமைகள் தொடர்ந்தன.

அசுத்தம், கழிவு, நாற்றம் எல்லாவற்றையுமே அவள் மனம் சகித்துக்கொள்ளும். மற்றவர்களின் காயங்களுக்கு மருந்திட்டு வலியைத் தணியவைக்கும் அவளின் மனவலிக்கு மாற்றுமருந்தே இல்லை. தனது துன்பத்தை மிகவும் சிரமப் பட்டு அடக்கிக் கொண்டாள் அவள்.

விளையாட்டுப் போட்டியில் விழுந்து எலும்பு முறிந்த தால் வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த பன்னிரண்டு வய துச் சிறுவன் அவளைக் கண்டதும் குதூகலத்தோடு சிரித் தான். அவன் இன்று நடந்து பார்க்கவேண்டும் என்று டாக் டர் கூறியிருந்தார்.

படுக்கையிலிருந்து எழும்பியவனைக் கைகொடுத்து மெல்ல அவன் நடப்பதற்கு உதவினாள் அவள். ஒன்று... இரண்டு... மூன்று... என அவன் அடி எடுத்து... வைத்தான். அவ னுக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியில் அவ ளும் போலியாகப் பங்கு கொண்டாள்.

''முதல் நாளே அதிக தூரம் நடக்கக்கூடாது தம்பி... இனி நாளைக்கு நடக்கலாம்...'' அந்தச் சிறுவனை அவனது கட்டிலுக்குக் கொண்டு வந்துவிட்டாள்.

வலது பக்கத்து அறையிலிருந்து பிலோமினா அவசரமாக வெளியே வந்தாள்.

''எப்பிடி இருக்கு பிலோமினா?...''

''ஒக்சிசன் ஏறுறது குறைவாயிருக்குது லலி...'' பிலோமினு சோகம் ததும்பக் கூறிவிட்டுப் போனுள்.

லலிதாவுக்கு நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது... ''கடவுளே அந்த உயிரைக் காப்பாத்திடு...'' மனம் தானுகவே பிரார்த்தித்தது.

ஒரு நோயாளியின் படுக்கை விரிப்பை மாற்றுவதற்காக அவள் குனிந்தபோது... அந்த அறையிலிருந்து தொங்கிப்போன முகத்துடன் டாக்டர்கள் வந்து கொண்டிருந்தார்கள்?

அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் உள்ளே போனுள். ''டாக்டர்களின்ர முயற்சியையும் மீறிக் கொண்டு ஒரு உயிர் போகுதென்ருல் அது அவனவன்ர தலைவிதிதான்... வேறென்ன?...

அவனுடைய உடல் எந்தவித அசைவுமின்றிக் கிடந்தது. அவனுக்குத் துணையாய் நின்ற இளைஞன் சிறு குழந்தை மாதிரிக் கண்களை வழித்துக் கொண்டிருந்தான்.

ஆஸ்பத்திரி வாசலில் வந்து நின்ற வானில் இருந்து இன்னும் சில இளைஞர்கள் நப்பாசையோடு குதித்தோடி வந்தார்கள். விஷயத்தை விளங்கிக் கொண்டதும் அவர்கள் முகங்களும் விறைத்துப்போயின.

அந்த உடல் டாக்டரின் அனுமதியோடு அவர்ளால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. அவளுக்கு இதயம் மரத்துப் போனது. ஊசலாடிக் கொண்டிருந்த சின்னச் சின்ன நம்பிக்கைகளும் செத்துப்போன மனஉணர்வு...

அவள் விடுதி அறைக்குள் வந்தாள். இரவு நேரத் தாதிமார் சுறுசுறுப்பாகத் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

ஆஸ்பத்திரி வளவைவிட்டு அவள் வெளியே வந்தாள். ஏதோ ஒரு குற்ற உணர்வில் மனது குறுகுறுத்தது.

காலையில் உற்சாகத்தோடு அவளை வரவேற்ற மலர்கள் வாடிச் சேர்ந்து சோகத்தில் தலைகுனிந்து நின்றன.

முற்றும்.

# வாழ்த்துரை

மண்ணையும் மக்களையும்
கண்ணென நேசிப்பவர் ஆதிலட்சுமி
இதன் விளைவே இக்
கதைக் கதிர்க் கொத்து
சத்தியஜித்ரே என்னும்
உலகப் புகழ்பெற்ற கலைஞன்
மண்ணையும் மக்களையும்
தனது கமராவால்
படம் பிடித்தார்
ஆதிலட்சுமி அவர்களும்
தன் பேனா முனையால்
சமுதாயத்தினைப்
படம் பிடிக்கின்றார்
''நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்'' என்னும்
வீரவரிகளைத் தன்
இலட்சியமாய்க் கொண்டு
கலையுலகில் பிரவேசித்துள்ளார்
அவரின் எழுத்துத் துறை
வளர்ச்சிக்கு எனது
வாழ்த்துக்கள்.

எஸ். சிவஞானசுந்தரம்
(சிரித்திரன் ஆசிரியர்)